# வலயக்கல்வி காரியாலயம்

# மாத்தளை

# கர்நாடக சங்கீதம்

# கற்றல் உதவி கையேடு

# தரம் 12



## கற்றல் உதவி கையேடு குழு

**வழிகாட்டல்** - திருமதி G.B.M.I.இந்திரா குமாரி பண்டாரநாயக்க (வலயக்கல்விப் பணிப்பாளர்)

**மேற்பார்வை** - திரு.J.M.இக்பால் (பிரதிக்கல்விப் பணிப்பாளர்)

**விடய இணைப்பும் ஒழுங்கமைப்பும்** - திருமதி.மொனிக்கா கோமஸ் (உதவிக்கல்விப் பணிப்பாளர்)

**பாட சிறப்பு ஆலோசனை,மொழிச்செம்மை** - திரு.P.கிருஷ்ணகுமார் (ஆசிரிய ஆலோசகர் - அழகியல்)

**கயைேட்டினை தயாரித்து வடிவமைத்த ஆசிரியர்கள்**

| தொ.இல | ஆசிரியர் பெயர் | தரம் | பாடசாலை |
|---|---|---|---|
| 1. | K.கீதாஞ்சலி | 6 | மாத்/வாரியபொல த.வி |
| 2. | M.சுகந்தினி | 6 | மாத்/திருவள்ளுவர் த.வி |
| 3. | M.கிருஷ்ணகுமாரி | 6 | மாத்/உணுகல த.வி |
| 4. | G.தர்ஷினி | 7 | மாத்/யட்டவத்த த.வி |
| 5. | N.மலர்ச்செல்வி | 7 | மாத்/இரத்தோட்டை இ.ம.வி |
| 6. | K.சுசிகலா | 7 | மாத்/பிட்டகந்த த.வி |
| 7. | S.பார்தீபன் | 7 | மாத்/வாணி த.வி |
| 8. | S.ஜெயபிரியை | 8 | மாத்/மிட்லன்ஸ் த.வி |
| 9. | T.சுமைதா | 8 | மாத்/இரத்தோட்டை இ.ம.வி |
| 10. | S.ஜெயகுமாரி | 8 | மாத்/பாக்கியம் தே.க |
| 11. | M.லலிதாதேவி | 9 | மாத்/இரத்தோட்தை இ.ம.வி |
| 12. | S.யுவராணி | 9 | மாத்/கணேஷ்வரா த.வி |
| 13. | S.ஹேமபிரியா | 9 | மாத்/எல்கடுவ த.ம.வி |
| 14. | S.ஷாமிலா | 9 | மாத்/பாக்கியம் தே.க |
| 15. | R.நிரஞ்சலா | 10 | மாத்/திருவள்ளுவர் த.வி |
| 16. | D.ஏஞ்சலின் நிர்மலா | 10 | மாத்/இந்து தேசிய கல்லூரி |
| 17. | G.துஷாலினி | 10 | மாத்/இரத்துவத்தை த.வி |
| 18. | A.உஷாந்தினி | 10 | மாத்/இந்து தேசிய கல்லூரி |
| 19. | R.P.சிவாந்தினி | 10 | மாத்/கலைமகள் ம.வி |
| 20. | M.உதயகுமார் | 12,13 | மாத்/கலைமகள் ம.வி |
| 21. | M.கயல்விழி | 12,13 | மாத்/இந்து தேசிய கல்லூரி |
| 22. | S.தமிழ்ச்செல்வி | 12,13 | மாத்/கந்தேநுவர த.ம.வி |
| 23. | M.தனலட்சுமி | 12,13 | மாத்/பாக்கியம் தே.க |

**ஆசிரியர் கவனத்திற்கு**

இந்நூலானது மாணவர்களின் சுயகற்றலை ஊக்குவிக்கும் முகமாக அவர்களுக்கு வழங்கப்படுகிறது.உரிய முறையில் இந்நூலிலுள்ள பயிற்சிகளை செய்விப்பதன் மூலம் மாணவர்களின் கற்றல் அடைவை மேம்படுத்துவதே எமது நோக்கமாகும்.மாணவர்கள் பயிற்சிகளை செய்த பின்னர் அவற்றை திருத்துவதற்கும் சரியான விடையை அறிந்துகொள்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.கல்விப்பயனாளிகள் உயர் சித்தி பெறுவதற்கு உங்களது அர்ப்பணிப்பும் விடயத் தெளிவும் வழிகாட்டலும் அவசியமாகும்.எனவே இவ்விடயங்களை கவனத்திற் கொண்டு மாணவர்களும் நீங்களும் வெற்றியடைய வாழ்த்துக்கள்.

**மாணவர் கவனத்திற்கு**

- மாணவர்களே இக்கையேடானது குறுகியகால விடுமுறையினை பிரயோசனப்படுத்துவதற்காக உங்களுக்கு வழங்கப்படுகிறது.
- இப்பயிற்சிகளை முறையாக செய்வதனூடாக சிறந்த பெறுபேறுகளை பெறலாம்.
- இப்பயிற்சிகளை முறையாக செய்த பின் அடுத்து வரும் மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கும் பொருட்டு இப்பயிற்சி புத்தகத்தினை பாதுகாத்து அவர்களுக்கு வழங்குதல் அவசியமாகும்.
- நீங்கள் விரும்பின் இப்பயிற்சி கையேட்டினை உங்களது அப்பியாசப் புத்தகத்தில் எழுதிப் பயன்படுத்தவும்
- முறையாக பாடசாலை நூலகத்திற்கு வழங்குவதுடன் இதனை உங்களது கடமையாக கருதவும்

# பாட உள்ளடக்கம்

| முதலாம் தவணை | இரண்டாம் தவணை | மூன்றாம் தவணை |
|---|---|---|
| ➢ மனோதர்ம இசை<br>-இராகம்,கற்பனாஸ்வரம் | ➢ மனோதர்ம இசை<br>-தானம்,நிரவல்,பல்லவி | ➢ ஹிந்துஸ்தான் இசைக்கருவி<br>-ஸரோட்,ஸிதார் |
| ➢ சுய ஆக்கங்கள்<br>-இசைக்கருவி | ➢ பிரதேச இசைகள்<br>-கிராமிய,நாடக,நாட்டுக்கூத்து | ➢ அடதாளவர்ணம்<br>-நெரநம்மி |
| ➢ ஆதிதாளவர்ணம்<br>-தஞ்சம் | ➢ பதவர்ணம்<br>-இன்னம் | ➢ இராகஆலாபனை,<br>➢ கற்பனாஸ்வரம் |
| ➢ நவராகமாலிகைவர்ணம்<br>-வலசி | ➢ மத்திமகாலகீர்த்தனை<br>-பார்வதிநாயகனே | ➢ தில்லானா<br>-தீம்தனன |
| ➢ மத்திமகாலகீர்த்தனை<br>-ஞானம் அருள்வாய் | ➢ இராகமாலிகை<br>-ஆரபிமானம் | ➢ தேவாரம்<br>மைம்மருபூங்குழல் |
| ➢ சௌக காலக் கிருதி<br>-பாஹிமாம்... | ➢ நாட்டார்பாடல் | ➢ திருப்புகழ்<br>-ஒருபொழுதும் |
| ➢ மெல்லிசைப் பாடல் | ➢ தேவாரம்<br>-பொன்னும் மெய் | ➢ வக்ரராகம் |
| ➢ ஜனக,ஜன்னிய இராகம் | ➢ 72 மேளகர்த்தாஅமைப்பு | ➢ ஜன்னியராக பிரிவுகள் |
| ➢ வர்ஜ இராகம் | ➢ உருப்படிகளின் இலட்சணம்<br>-கிருதி | ➢ உருப்படிகளின் இலட்சணம்<br>-இலட்சணகீதம்,-ஜாவளி<br>-தில்லானா |
| ➢ உருப்படிகளின் இலட்சணம்<br>-சூளாதி | ➢ இராக இலட்சணம்<br>ஸாவேரி,ஆனந்தபைரவி,<br>ஹிந்தோளம் | ➢ இராக இலட்சணம்<br>ஹம்சத்வனி,ஆபோகி,<br>ஸ்ரீரஞ்சனி |
| ➢ இராக இலட்சணம்<br>-சண்முகப்பிரியா,வசந்தா | ➢ கிருதியை அலங்கரிக்கும் அணிகள் | ➢ இசைக்கருவிகளின் பிரிவுகள் |
| ➢ இசைக்கருவிகள்<br>-கடம்,கெஞ்சிரா | ➢ இராகத்தின் பத்து இலட்சணம் | ➢ இசைக்கருவி<br>-முகர்சிங் |
| ➢ வாக்கேயகாரர்கள்<br>-ஸ்வாதித்திருநாள் மகாராஜா<br>-அமீர்குஸ்ரு<br>-பாக்,-எம்.எஸ்.சுப்புலட்சுமி | ➢ இசைக்கருவிகள்<br>-கோட்டுவாத்தியம் | ➢ ஸ்வரதாளக்குறிப்பு |
| ➢ இலங்கையில் கர்நாடக இசைவளர்ச்சி | ➢ வாக்கேயகாரர்கள்<br>-பைடாலகுருமூர்த்தி சாஸ்திரி<br>-தான்சேன்<br>-மொஸாட்<br>-எம்.எல்.வசந்தகுமாரி<br>-வீணைபாலச்சந்தர் | ➢ வாக்கேயகாரர்கள<br>-அருணகிரிநாதர்<br>-பாத்கண்டே<br>-பீதோவன்<br>-திருவாவடுதுறை இராஜரத்தினம் பிள்ளை |
| ➢ கீபோட் அடிப்படைபயிற்சி | ➢ கீபோட்-சங்கராபரண இராக பாடல் | ➢ கீபோட் - கீதம் |
| ➢ வயலின்<br>➢ -ஸ்வரவரிசைகள் | ➢ வயலின்- ஜண்டைவரிசை | ➢ வயலின் - மேல்ஸ்தாயிவரிசை |

# 01. மனோதர்ம சங்கீதம்

## 1.1 இராக ஆலாபனை

- மனோதர்ம இசையின் முதல்பிரிவு இராக ஆலாபனையாகும்
- இசை உருப்படி ஆரம்பிப்பதற்கு முன்னர் இராக ஆலாபனை பாடப்படும்.
- இராக ஆலாபனைக்குத் தாளம் கிடையாது.
- எடுத்துக்கொண்ட இராகத்தின் அனைத்து இலட்சணங்களின் முழு வடிவத்தையும் வெளிப்படுத்தும் வண்ணம் தக்க கமகங்களை உபயோகித்து தா, ததரினம், தோம் போன்ற சொற்களுடன் அகார, இகார, உகாரங்களில் இராகத்தை வெளிப்படுத்துவதே இராக ஆலாபனையாகும்.
- ஓர் இராகத்தில் எவ்வளவு உருப்படிகளை ஒருவர் கற்கின்றாரோ அவ்வளவுக்கு அந்த இராகத்தில் அவருக்கு ஞானம் ஏற்படும்.

**பயிற்சி 1.1**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. மனோதர்ம சங்கீதத்தின் முதல் பிரிவு எது?

   ………………………………………………………………………………………………..........

2. இசை உருப்படி ஆரம்பிப்பதற்கு முன்னர் பாடப்படும் மனோதர்ம பிரிவு யாது?

   ………………………………………………………………………………………………..........

3. இராக ஆலாபனை என்றால் என்ன?

   ………………………………………………………………………………………………..........

## 1.2 கற்பனாஸ்வரம்

- மனோதர்ம இசையின் ஒரு பிரிவே கற்பனாஸ்வரமாகும்.
- இசை உருப்படிகளைப் பாடும்போது பல்லவியிலோ, அனுபல்லவியிலோ, சரணத்திலோ தக்கதோர் இடத்தைத் தெரிந்தெடுத்து அவ்விடத்திலிருந்து இனிமையான முறையில் கற்பனையாக இராக சொரூபத்தை வெளிப்படுத்தும் வகையில் ஸ்வரங்களைப் பாடுவது வழக்கம். கலைஞரின் திறமை, ஞானம் முதலியவற்றிற்கேற்ப ஸ்வரங்களைப் பலவாறு பிரஸ்தாரம் செய்தும் ஸ்வரக்கோர்வைகளைப் பாடும் முறையைக் கற்பனா ஸ்வரங்கள் பாடுதல் என்று அழைப்பர்.
- கற்பனாஸ்வரம் பாடுவதற்குச் சிறந்த ஸ்வரஞானம், இராகஞானம், தாளஞானம் முதலியன வேண்டும்.
- கற்பனாஸ்வரங்கள் பாடுவதால் பாடுபவரின் திறமை, ஞானம் மட்டும் வெளிப்படுவதில்லை. இசை உருப்படிகளின் அழகும் அதிகரிக்கும்.
- கற்பனாஸ்வரங்கள் பாடும்போது விதிமுறைகளுக்கமைவாக 1/4, 1/2, 1, 1 1/2, 2, 4 என்னும் ஆவர்த்தனங்களுக்கு ஏற்ப முதலாம் இரண்டாம் காலங்களில் பாடப்படுகிறது.
- இராகமாலிகையாகவும் கற்பனாஸ்வரம் பாடப்படுவதுண்டு.
- நீண்ட கற்பனாஸ்வரங்களைப் பாடி முடிக்கும் போது மகுடங்களுடன் முடித்தால் கவர்ச்சியாக இருக்கும்.

**பயிற்சி 1.2**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. கற்பனாஸ்வரம் என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.

   ………………………………………………………………………………………………..........

2. கற்பனாஸ்வரம் பாடுவதற்கு பாடகரிடம் இருக்க வேண்டிய அம்சங்கள் எவை?

   ………………………………………………………………………………………………..........

3. கற்பனாஸ்வரம் பாடுவதற்கு ஏற்ற தாள ஆவர்த்தன ஒழுங்கு யாது?

   ………………………………………………………………………………………………..........

4. நீண்ட கற்பனாஸ்வரத்தை பாடிமுடிக்கும் போது எதனுடன் பாடிமுடித்தால் கவர்ச்சியாக இருக்கும்?

   ………………………………………………………………………………………………..........

## 1.3 தானம்

- இராக ஆலாபனைக்கு அடுத்து பாடப்படுவது தானமாகும்.
- இதற்கு மத்யமகாலம் அல்லது மத்யமகால இராக ஆலாபனை என்றும் பெயர் உண்டு.
- கற்பனைத்திறனை உபயோகித்து எடுத்துக்கொண்ட இராகத்திற்கேற்ற ஸ்வரக்கோர்வைகளை தாநம், தாஅநம்த, அநம்த,அநம்த, தொம்த போன்ற இசைச்சொற்களைக் கோர்வையாக்கி பல நடைகளில் அமைத்து தானத்தைப் பாடுவார்.
- தானம் பாடுவதற்குத் தாளம் கிடையாது.
- எனினும் இந்த ஸ்வரக்கோர்வைகளில் பல ஒரே நடையில் அமைந்திருப்பதால் கேட்கும் போது அவை தாளத்திற்கு ஒட்டிப் பாடுவது போலக் காணப்படும்.

**பயிற்சி 1.3**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. இராக ஆலாபனையில் அடுத்து பாடப்படும் பிரிவு யாது?

   ………………………………………………………………………………………………..........

2. தானத்திற்கு வழங்கப்படும் மறுப்பெயர்கள் 2 தருக.

   ………………………………………………………………………………………………..........

3. தானம் எவ்வாறு பாடப்படுகிறது?

   ………………………………………………………………………………………………..........

4. தானம் பாடுவதற்கு பயன்படுத்தப்படும் இசைச்சொற்களை தருக.

   ………………………………………………………………………………………………..........

## 1.4 பல்லவி

- பதம்,லயம்,விந்நியாசம் என்னும் மூன்று சொற்களின் முதல் எழுத்துக்களின் சேர்க்கையே (பலவி) பல்லவி எனப்படும்.
- ஓர் இராகத்தில் விரிவான ஆலாபனை செய்தபின் தானம் பாடிவிட்டு அதனைத் தொடர்ந்து பல்லவி பாடுதல் வழக்கம்.
- பல்லவியின் சாஹித்தியம் பெரும்பாலும் பக்தி சம்பந்தமாக இருக்கும்.

❖ சில பல்லவிகள் சிருங்காரம், இகழ்ச்சி, புகழ்ச்சி,இவற்றை வெளிப்படுவதாயிருக்கும்.

❖ மணிப்பிரவாளத்திலும் சில பல்லவிகள் உண்டு.

❖ நீண்டநேரம் விரிவுப்படுத்தக்கூடிய பெரிய பல்லவிகளும் உண்டு.

❖ பல்லவியின் இசை அமைப்பு கேட்பதற்குக் கவர்ச்சியாக இருக்க வேண்டும். இராகத்தின் வடிவத்தை நன்றாக விளக்கிக்காட்ட வேண்டும். பல்லவிக்கு இரண்டு பாகங்கள் உண்டு. அவை

1. பிரதமாங்கம்

2. துவிதியாங்கம்

❖ இவை இரண்டிற்கும் இடையில் வருவது பதகர்ப்பம் அல்லது அறுதி எனப்படும் அறுதிக்குப்பின் விச்ராந்தி (அட்சரகார்வை) இருக்கும்.

❖ பல்லவியின் ஆரம்ப ஸ்வரமும் பொருத்தமாக அமையவேண்டும்.

❖ பல்லவி அமைந்த ஸாஹித்தியத்தின் சொற்களைத் தெளிவாக உச்சரித்துப்.

❖ பாடவேண்டும். சொற்கள் தாள ஆவர்த்தத்தில் எந்தெந்த அட்சரத்தில் (எண்ணிக்கை)வருகின்றன என்பதைத் தெளிவுறக் காட்டிப்பாடுவது அவசியமாகும்.

❖ பல்லவியின் அமைப்புமுறையே விளம்ப காலத்தில் இரண்டு ஆவர்த்தனங்களிலும், மத்யம காலத்தில் ஒருஆவர்த்த தாளத்திலும், திஸ்ர கதியில் பாடும் போது பல்லவியின் அமைப்பு முறை இரண்டு ஆவர்த்தத் தாளங்களிலும், துரித காலத்தில் பல்லவியின் அமைப்பு இரண்டு முறை ஒரே ஆவர்த்தனத்திலும் பாடப்படும்.

❖ முறையான கர்நாடக இசைக்கச்சேரியில் பல்லவி பாடுதல் இன்றியமையாத சம்பிரதாயமாக விளங்குகின்றது.

உதாரணம்:-

இராகம் : கரஹரப்பிரியா தாளம் : கண்ஜாதி திரிபுடை தாளம்

ஆ :- ஸரிகமபதநிஸ்
அ :- ஸ்நிதபமகரிஸ
} 22 வது மேளம்

|5 0 0

; பா , த நி த பா , ம ப ம கா, ரி க ம | பா ; ; த நி | ஸ்ா ; ; நி த ||

. மால். ம ரு கனை . முருகனை . உமையா ள் . . ம க னை . . நினைந்

ப ம

தி ரு

**பயிற்சி 1.4**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தானம் பாடியபின் பாடப்படும் மனோதர்ம பிரிவு யாது ?

   ………………………………………………………………………………………………..........

2. பல்லவியின் சாகித்தியம் எவ்வாறு இருக்கும்?

   ………………………………………………………………………………………………..........

3. பல்லவிகளில் வெளிப்படுத்தப்படும் விடயங்கள் எவை?

   ………………………………………………………………………………………………..........

4. பல்லவியின் பாகங்கள் எத்தனை? அவை எவை?

   ………………………………………………………………………………………………..........

5. பதகர்ப்பத்திற்கு வழங்கப்படும் மறுப்பெயர் யாது?

   ………………………………………………………………………………………………..........

6. பதகர்ப்பம் என்றால் என்ன?

   ………………………………………………………………………………………………..........

7. பல்லவியில் அறுதிக்குப் பின் காணப்படுவது யாது?

   ………………………………………………………………………………………………..........

8. கர்நாடக இசை கச்சேரிகளில் இன்றியமையாத சம்பிரதாயமாக விளங்கும் மனோதர்ம பிரிவு எது?

   ………………………………………………………………………………………………..........

9. மால்மருகனே என்ற பல்லவி பாடப்படும் இராகம்,தாளம் யாது?

   ………………………………………………………………………………………………..........

10. கரஹரப்பிரியா இராகத்தின் மேள எண் யாது?

    ………………………………………………………………………………………………..........

## 1.5 நிரவல்

- ❖ நிரவல் என்பதற்கு இட்டு நிரப்புதல் என்று பொருள்.
- ❖ கிருதிகளைப் பாடும்போது அனுபல்லவியில் அல்லது சரணத்தில் தக்கதோர் இடத்தில் நிறுத்தி, அந்த சாஹித்திய அடிகளை இராகபாவம், பொருள்நயம் விளங்கும்படியாகவும் பல்வேறு பிரஸ்தாரங்கள் வரும்படியாகவும்வேறு இசை அமைப்பில் மாற்றி மாற்றி அமைத்துத் தாள எல்லை மீறாமல் பாடுதலே நிரவல் எனப்படும்.
- ❖ நிரவல் பாடுவதற்கு நல்ல இராக ஞானமும், தாள ஞானமும் அவசியம்.
- ❖ நிரவல் பாடும்பொழுது சாஹித்திய வரியை மீண்டும் மீண்டும் பலமுறை திரும்பத் திரும்பப் பாடுவதால் அதன் பொருள் நன்றாக இருக்கவேண்டும்.
- ❖ காதிற்கு இனிமையான நல்லஅர்த்தத்துடன் கூடிய நல்ல சொற்களாக இருப்பது அவசியம். ஒவ்வொரு முறையும் புதுப்புதுச்சங்கதிகள் பாடிய பிறகு இயன்றவரை அந்தவரியின் அடிப்படை (Orginal) சங்கதியைத்திரும்பிப் பாடவேண்டும்.

**பயிற்சி 1.5**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. நிரவல் என்பதன் பொருள் யாது?

   ……………………………………………………………………………………………………..........

2. நிரவல் என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.

   ……………………………………………………………………………………………………..........

3. நிரவல் பாடுவதற்கு அவசியமான விடயங்கள் எவை?

   ……………………………………………………………………………………………………..........

# 02. இராகம்

## 2.1 ஜனக இராகம்

- கர்நாடக இசையில் அமைந்துள்ள இராகங்களை ஜனக இராகம்,ஜன்னிய இராகம் என இருவகையாக பிரிக்கலாம்.
- ஜனக இராகத்தை மேளகர்த்தா இராகம்,மேள இராகம்,கர்த்தா இராகம்,சம்பூர்ண இராகம்,தாய் இராகம்,இராகாங்க என பல பெயர்களால் அழைக்கப்படுகிறது.
- ஜனக இராகம் நான்கு இலட்சணங்களை கொண்டுள்ளது
  1. சம்பூர்ண ஆரோஹண அவரோஹணம்
  2. கிரம சம்பூர்ண ஆரோஹண அவரோஹணம்
  3. ஆரோஹணத்திலும் அவரோஹணத்திலும் ஸ்வரங்கள் ஒரே வகையாக இருத்தல்
  4. அஷ்டகமாக விளங்கும் ஆரோஹண அவரோணம்
- ஜனக இராகங்கள் 72 உண்டு.

  உதாரணம் : மாயாமாளவகௌளை, தோடி, நடைபைரவி

**பயிற்சி 2.1**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ஜனக இராகம் என்றால் என்ன?

   ……………………………………………………………………………………………………..........

2. கர்நாடக சங்கீத இராகங்களின் இரு வகைகளை குறிப்பிடுக.

   ……………………………………………………………………………………………………..........

3. ஜனக இராகத்தின் மறுப்பெயர்களைத் தருக.

   ……………………………………………………………………………………………………..........

4. ஜனக இராகமொன்றிற்கு இருக்க வேண்டியப பண்புகள் எவை?

   ……………………………………………………………………………………………………..........

   ……………………………………………………………………………………………………..........

5. ஜனக இராகங்களின் எண்ணிக்கை யாது?

   ……………………………………………………………………………………………………..........

## 2.2 ஜன்னிய இராகம்

- ஜனக இராகத்திலிருந்து பிறந்த இராகம்.
- ஜன்னிய இராகமானது பிறந்த இராகம்,சேய் இராகம் என அழைக்கப்படுகிறது.
- ஜனக இராகத்திலிருந்து பிறந்ததன் காரணமாக இவற்றின் ஸ்வரஸ்தானங்கள் ஜனக இராகத்தை அனுசரித்தே இருக்கும்.
- ஒவ்வொரு ஜனக இராகத்திற்கும் அநேக ஜன்னிய இராகங்கள் உள்ளன.
- ஜன்னிய இராகங்களின் தொகை எண்ணிலடங்காது.
- ஜன்னிய இராகத்திற்கு உதாரணம் : மோஹனம்,பிலஹரி,சுத்தசாவேரி
- ஜன்னிய இராகம் 7 பிரிவுகளைக் கொண்டுள்ளது

1. வர்ஜம்
2. வக்கரம்
3. உபாங்கம்
4. பாஷாங்கம்
5. நிஷாதாந்தியம்
6. தைவதாந்தியம்
7. பஞ்சமாந்தியம்





**பயிற்சி 2.2**

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக**

1. ஜன்னிய இராகம் என்றால் என்ன?

…………………………………………………………………………………………………….......

2. ஜன்னிய இராகத்தின் வேறு பெயர்களை குறிப்பிடுக.

…………………………………………………………………………………………………….......

3. ஜன்னிய இராகத்தின் பிரிவுகளை குறிப்பிடுக.

…………………………………………………………………………………………………….......

4. ஜன்னிய இராகத்திற்கு 3 உதாரணம் தருக.

…………………………………………………………………………………………………….......

## 2.3 உபாங்க இராகம்

❖ ஒரு ஜன்னிய இராகம் தனது தாய் இராகத்தின் ஸ்வரஸ்தானங்களை மட்டும் எடுத்துக்கொள்ளல்

உதாரணம் : ஆரபி ஆ : ஸரிமபதஸ்
அ : ஸ்நிதபமகரிஸ } 29 ன் ஜன்னியம்

❖ ஆரபி இராகமானது சங்கராபரணத்தின் ஜன்னியமாகும்.ஆரபி இராகத்தில் வரும் சதுஸ்ருதி ரிஷபம்,சுத்த காந்தாரம்,சுத்த மத்திமம்,காகலி நிஷாதம் ஆகிய ஸ்வரஸ்தானங்கள் சங்கராபரணத்தின் ஸ்வரஸ்தானங்களாகும்.

❖ உபாங்க இராகங்களுக்கு உதாரணம்

மோஹனம் : ஆ : ஸரிகபதஸ்
அ : ஸ்தபகரிஸ } 28ன் ஜன்னியம்

ஹம்சத்வனி : ஆ : ஸரிகபதஸ்
அ : ஸ்தபகரிஸ } 29ன் ஜன்னியம்

## 2.4 பாஷாங்க இராகம்

❖ ஒரு ஜன்னிய இராகமானது தனது தாய் இராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்களுடன் ரஞ்சனையின் பொருட்டு தன்னை அழகுபடுத்துவதற்காக தாய் இராகத்திற்கு புறம்பான ஸ்வரத்தை அல்லது ஸ்வரஸ்தானங்களை எடுத்துக்கொள்ளும்.

❖ பாஷாங்க இராகத்தின் குறியீடு ( * )

❖ பாஷாங்க இராகங்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. ஆரோகண அவரோகணத்திலேயே அன்னிய ஸ்வரம் ஒலிக்கும் இராகம்

உதாரணம் பைரவி ஆ : ஸரிகமபதநிஸ்
அ : ஸ்நிதபமகரிஸ } 20ன் ஜன்னியம்

( அன்னியஸ்வரம் சதுஸ்ருதி தைவதம்)

முகாரி ஆ : ஸரிமபநிதஸ்
ஆ : ஸ்நிதபமகரிஸ் } 22ன் ஜன்னியம்

( அன்னியஸ்வரம் சுத்த தைவதம்)

2. ஆரோஹண அவரோஹணத்தில் அன்னிய ஸ்வரம் ஒலிக்காமல் சஞ்சாரங்களில் மட்டும் அன்னியஸ்வரம் ஒலிக்கும் இராகம்.

உதாரணம் : காம்போதி ஆ : ஸரிகமபதஸ் } 28ன் ஜன்னியம்
அ : ஸ்நிதபமகரிஸ

❖ பாஷாங்க இராகத்திற்கு உதாரணம் : கமாஸ்,பிலஹரி,அடாணா

## 2.5 வர்ஜ இராகம்

❖ வர்ஜ இராகம் ஜன்னிய இராகப் பிரிவுகளில் ஒன்றாகும்.

❖ ஆரோஹணத்திலோ அல்லது அவரோஹணத்திலோ அல்லது இரண்டிலுமோ ஸ்வரங்கள் விலக்கப்பட்டிருந்தால் வர்ஜ இராகம் எனப்படும்.

❖ உதாரணம் மோகனம் ஆ : ஸரிகபதஸ்
அ : ஸ்தபகரிஸ
ஹம்சத்வனி ஆ : ஸரிகபநிஸ்
அ : ஸ்நிபகரிஸ

❖ ஸப்த ஸ்வரங்களையுடைய ஆரோஹண அவரோஹணத்திற்கு சம்பூர்ணம் என்று பெயர்.

❖ ஆறு ஸ்வரங்களைக் கொண்ட ஆரோகண அவரோகணத்திற்கு ஷாடவம் என்று பெயர்.

❖ இரண்டு ஸ்வரம் விலக்கப்பட்டு ஐந்து ஸ்வரங்களைக் கொண்ட ஆரோஹண அவரோஹணத்திற்கு ஔடவம் என்று பெயர்.

❖ மூன்று ஸ்வரங்கள் விலக்கப்பட்டு நான்கு ஸ்வரங்களைக் கொண்ட ஆரோஹண அவரோஹணங்கள் ஸ்வராந்தர இராகங்கள் என அழைக்கப்படுகின்றன.இது அபூர்வமானது.

❖ ஸம்பூர்ண ஷாடவ ஔடவ பேதங்களினால் எட்டு வகையான வர்ஜ இராகங்கள் உண்டாகின்றன.



## வர்ஜ இராக பிரிவுகள்

| | பிரிவுகள் | உதாரணங்கள் | | |
|---|---|---|---|---|
| | ஆரோகணம் அவரோகணம் | இராகத்தின் பெயர் | ஆரோகணம் அவரோகணம் | ஜனக இராகத்தின் இலக்கமும் பெயரும் |
| 1. | ஷாடவ - சம்பூர்ணம் | காம்போதி | ஆ - ஸரிகமபதஸ் <br> அ - ஸ்நிபதமகரிஸ } 28 | ஹரிகாம்போதி |
| 2. | ஔடவ - சம்பூர்ணம் | ஸாவேரி | ஆ - ஸரிமபதஸ் <br> அ - ஸ்நிபதமகரிஸ } 15 | மாயாமாளவகௌளை |
| | | பிலஹரி | ஆ - ஸரிகபதஸ் <br> அ - ஸ்நிபதமகரிஸ } 29 | தீரசங்கராபரணம் |
| | | ஆரபி | ஆ - ஸரிமபதஸ் <br> அ - ஸ்நிபதமகரிஸ } 29 | தீரசங்கராபரணம் |
| 3. | சம்பூர்ணம் - ஷாடவம் | பைரவம் | ஆ - ஸரிகமபதநிஸ் <br> அ - ஸ்தாபமகரிஸ } 17 | சூர்யகாந்தம் |
| 4. | சம்பூர்ணம் - ஔடவம் | ஸாரமதி | ஆ - ஸரிகமபதநிஸ் <br> அ - ஸ்நிதமகஸ } 20 | நடபைரவி |
| | | கருடத்வனி | ஆ - ஸரிகமபதநிஸ் <br> அ - ஸ்தபகரிஸ } 29 | தீரசங்கராபரணம் |
| 5. | ஷாடவ - ஷாடவம் | மலயமாருதம் | ஆ - ஸரிகபதநிஸ <br> அ - ஸ்நிதபகரிஸ } 16 | சக்கரவாகம் |
| | | சுத்தசீமந்தினி | ஆ - ஸரிகமபதஸ் <br> அ - ஸ்தபமகரிஸ } 08 | ஹனுமதோடி |
| | | ஸ்ரீரஞ்சனி | ஆ - ஸரிகமதநிஸ் <br> அ - ஸ்நிதமகரிஸ } 22 | கரஹரப்ரியா |
| 6. | ஷாடவ - ஔடவம் | நாட்டைக்குறிஞ்சி | ஆ - ஸரிகமதநிஸ் <br> அ - ஸ்நிதமகஸ } 28 | ஹரிகாம்போதி |
| 7. | ஔடவம் - ஷாடவ | மலஹரி | ஆ - ஸரிமபதஸ் <br> அ - ஸ்தபமகரிஸ } 15 | மாயாமாளவகௌளை |
| | | ஜகன்மோஹினி | ஆ - ஸகமபநிஸ் <br> அ - ஸ்நிபமகாரிஸ } 15 | மாயாமாளவகௌளை |
| 8. | ஔடவம் - ஔடவம் | மோஹனம் | ஆ - ஸரிகபதஸ் <br> அ - ஸ்தபகரிஸ } 28 | ஹரிகாம்போதி |
| | | சுத்தசாவேரி | ஆ - ஸரிமபதஸ் <br> அ - ஸ்தபமரிஸ } 29 | தீரசங்கராபரணம் |
| | | ஹம்சத்வனி | ஆ - ஸரிகபநிஸ் <br> அ - ஸ்நிபகரிஸ } 29 | தீரசங்கராபரணம் |

**பயிற்சி 2.5**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. வர்ஜ இராகம் என்றால் என்ன?

   ..............................................................................................................

2. ஔடவ பேதம் என்றால் என்ன?

   ..............................................................................................................

3. எட்டு வகையான வர்ஜ இராகங்கள் எவ்வாறு உருவாகியது?

   ..............................................................................................................

4. எட்டு வகையான வர்ஜ இராக பிரிவுகளை உதாரணத்துடன் தருக.

   ..............................................................................................................

5. ஔடவ ஷாடவம் என்றால் என்ன?

……………………………………………………………………………………………………..........

6. சுத்த சீமந்தினி இராகத்தின் ஆரோஹண அவரோஹணங்களை தருக.

……………………………………………………………………………………………………..........

7. தீர சங்கராபரணத்திலிருந்து தோன்றிய மூன்று வர்ஜ இராகங்களைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………………………………..........

## 2.6 வக்ர இராகம்

- ஆரோஹணத்திலோ அவரோஹணத்திலோ அல்லது இரண்டிலுமோ ஸ்வரங்கள் நேராய் அதாவது கிரம கதியில் போகாமல் திரிந்து செல்லும் ராகங்கள் வக்ர இராகங்கள் எனப்படும்.
- ஆரோஹண அவரோஹண கதிக்கு பங்கம் ஏற்படும் ஸ்வரம் வக்ரஸ்வரம் எனப்படும்.
- உதாரணம் கதனகுதூகலம் ஆ : ஸரிமதாநிகபஸ்
  அ : ஸ்நிதபமகரிஸ
- இந்த இராகத்தில் ‘நி’ இல் இருந்து ஸ்வரகதி இறங்குவதனால் ‘நி’ வக்ரஸ்வரம் எனப்படும்.
- ‘க’ வில் இருந்து மீண்டும் ஸ்வரகதி ஆரோஹணமாக செல்வதால் ‘க’ வக்ராந்ய ஸ்வரமாகும்.
- ‘நி’ இல் இருந்து ‘க’ வரைக்கும் இறங்குவதில் ஏற்படும் இடைவெளிக்கு வக்ரத்துவ எல்லை எனப்படுகிறது.
- வக்ர இராகங்கள் 3 வகைப்படும்
  1. ஆரோஹணம் மட்டும் வக்ரமாய் உள்ள இராகம்
     உதாரணம் : ஆனந்தபைரவி ஆ : ஸகரிகமபதபஸ் } 29ன் ஜன்யம்
     அ : ஸ்நிதபமகரிஸ்
  2. அவரோஹணம் மட்டும் வக்ரமாய் உள்ள இராகம்
     உதாரணம் : ஶ்ரீராகம் ஆ : ஸரிமபநிஸ் } 22ன் ஜன்யம்
     அ : ஸ்நிபதநிபமரிகரிஸ
  3. ஆரோஹணமும் அவரோஹணமும் வக்ரமாய் உள்ள இராகங்கள் (உபய வக்ர இராகம்)
     உதாரணம் : ரீதிகௌளை ஆ : ஸகரிகமநிதமநிநிஸ் 22ன் ஜன்யம்
     அ : ஸ்நிதமகமபமகரிஸ
- வக்ர இராகங்களில் வரும் வக்ர ஸ்வரங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் 4 வகைப்படுகிறது
  1. ஏகஸ்வரவ வக்ர இராகம் - கமாஸ்
  2. திவிஸ்வர வக்ர இராகம் - ஶ்ரீராகம்
  3. திரிஸ்வர வக்ர இராகம் - கர்நாடக பெஹாக்
  4. சதுஸ்ரஸ்வர வக்ர இராகம் - அஸாவேரி

**பயிற்சி 2.6**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக**

1. வக்ர இராகம் என்றால் என்ன?

……………………………………………………………………………………………………..........

2. வக்ர ஸ்வரம் என்றால் என்ன?

…………………………………………………………………………………………………….......

3. வக்ராந்திய ஸ்வரம் என்றால் என்ன?

…………………………………………………………………………………………………….......

4. வக்ரத்துவத்தின் எல்லையை விளக்குக

…………………………………………………………………………………………………….......

5. வக்ர இராகம் எத்தனை வகைப்படும்? அவற்றை விளக்குக

…………………………………………………………………………………………………….......

6. உபய வக்ர இராகம் என்றால் என்ன?

…………………………………………………………………………………………………….......

7. வக்ர ஸ்வரங்கின் எண்ணிக்கையைக் கொண்டு வக்ர இராகங்களை எத்தனையாக பிரிக்கலாம்?

…………………………………………………………………………………………………….......

8. மூன்று வக்ரஸ்வரம் வந்தால் எவ்வாறு அழைக்கப்படும்?

……………………………………………………………………………………………………......

## 2.7 நிஷாதாந்திய,தைவதாந்திய,பஞ்சமாந்திய இராகங்கள்

- சில இராகங்களின் சஞ்சாரங்கள் தாரஸ்தாயி ஸட்ஜத்தை எட்டாமல் நின்று விடுகின்றன.
- அப்படியான இராகங்கள் மூன்று வகைப்படும்.
- நிஷாதாந்திய, தைவதாந்திய,பஞ்சமாந்திய இராகங்கள்

1. நிஷாதாந்திய இராகம் - மத்திய ஸ்தாயி நிஷாதத்திற்கு மேல் சஞ்சாரம் இல்லாத இராகம்

   உதாரணம் : நாதநாமக்கிரியை ஆ : ஸரிகமபதநி } 15ன் ஜன்யம்
   அ : நிதபமகரிஸநி

   புன்னாகவராளி ஆ : நிஸரிகமபதநி } 08ன் ஜன்யம்
   ஆ : நிதபமகரிஸநி

2. தைவதாந்திய இராகம் - மத்திய ஸ்தாயி தைவதத்திற்கு மேல் சஞ்சாரம் இல்லாத இராகம் இராகமாகும்.

   உதாரணம் : குறிஞ்சி ஆ : ஸநிஸரிகமபத } 29ன் ஜன்யம்
   அ : தபமகரிஸநிஸ

3. பஞ்சமாந்திய இராகம் - மத்திய ஸ்தாயி பஞ்சமத்திற்கு மேல் சஞ்சாரம் இல்லாத இராகம்
   உதாரணம் : நவரோஜ் ஆ. பதநிஸரிகமப } 29ன் ஜன்யம்
   அ. மகரிஸநிதப

**பயிற்சி 2.7**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக**

1. நிஷாதாந்திய இராகம் என்றால் என்ன?

…………………………………………………………………………………………………….......

2. தைவதாந்திய இராகம் என்றால் என்ன?

……………………………………………………………………………………………........

3. குறிஞ்சி இராகத்தின் ஆரோஹண அவரோஹணத்தை தருக.

……………………………………………………………………………………………........

4. பஞ்சமாந்திய இராகத்திற்கு உதாரணம் தருக

……………………………………………………………………………………………........

5. இவ்வாறான இராகங்களை எந்த சுருதியில் பாட வேண்டும்?

……………………………………………………………………………………………........

## 03. 72 மேளகர்த்தா

- 17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வெங்கடமகி என்பவரால் எழுதப்பட்ட " சதுர்த்தண்டிப்பிரகாசிகை" என்னும் நூலில் 72 மேளகர்த்தாக்களின் அமைப்புப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.
- எல்லா மேளங்களுக்கும் இவர் பெயர் கொடுக்கவில்லை.
- 18 ஆம் நாற்றாண்டில் தஞ்சையை ஆண்ட துளஜா மகாராஜாவினால் எழுதப்பட்ட " சங்கீத சாராம்ருதம்" என்னும்நூலில் வெங்கடமகியின் 72 மேள அமைப்புக் கூறப்பட்டுள்ளது.
- இந்நூலிலும் மேளங்களின் பெயர்கள் கொடுக்கப்படவில்லை.
- 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கோவிந்தாச்சாரியார் என்பவரால் எழுதப்பட்ட"சங்கிரகசூடாமணி" என்னும் நூலில் கிரம சம்பூர்ண ஆரோஹணஅவரோஹண முறையுடன் கூடிய 72 மேளங்களைக் குறிக்கும் " கனகாங்கி - ரத்னாங்கி "பெயர் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது.
- இப்பட்டியலில் கடபயாதி சக்கரத்திற்கு ஏற்ற வகையில் ஒவவொரு மேளத்தின் எண்ணைக் குறிக்கும் வகையில் பெயர்கள்அமைந்திருக்கின்றன.

### 3.1 72 மேளகர்த்தா அரமப்பு

- 72 மேளகர்த்தா சக்கரம் இரண்டு சம பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.
- முதல் பாகத்தில் வரும் 36 மேளகர்த்தாக்களைப் பூர்வ மேளகர்த்தாக்களென்றும்,இரண்டாம் பாகத்தில் வரும் 36 மேளகர்த்தாக்களை உத்தர மேளகர்த்தாக்களென்றும்அழைப்பர்.
- 1-36 மேளகர்த்தாக்களில் சுத்தமத்யமஸ்வரமும், 37-72 மேளகர்த்தாக்களில் பிரதிமத்யமஸ்வரமும் வருவதனால் பூர்வ மேள கர்த்தாக்கள் சுத்தமத்யம மேளகர்த்தாக்களென்றும், உத்தர மேளகர்த்தாக்கள், பிரதி மத்யம மேளகர்த்தாக்களென்றும் அழைக்கப்படுகின்றது.
- 72 மேளகர்த்தாக்கள் பன்னிரண்டு சக்கரங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றன.
- **சக்கரங்களும் அவற்றின் பெயர்களும்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. இந்து | - | 01 - 06 | 7. ரிஷி | - | 37 - 42 |
| 2. நேத்ர | - | 07 - 12 | 8. வஸு | - | 43 - 48 |
| 3. அக்கினி | - | 13 - 18 | 9. ப்ரஹ்ம | - | 49 - 54 |
| 4. வேத | - | 19 - 24 | 10. திசி | - | 55 - 60 |
| 5. பாண | - | 25 - 30 | 11. ருத்ர | - | 61 - 66 |

6. ருது - 31 - 36 12. ஆதித்ய - 67 - 72

- 1-6 சக்கரங்களும் சுத்தமத்யம மேள கர்த்தாக்களாகவும் 7-12 சக்கரங்களும் பிரதிமத்யம மேளகர்த்தாக்கள் எனப்படுகிறது.
- ஸட்ஜ,பஞ்சம,மத்திமத்தை தவிர ஏனைய ஸ்வரங்களில் 'ரிஷபம்,காந்தாரம்' சக்கரத்திற்கு சக்கரம் மாறும்.

| சக்கர இலக்கம் | ஸ்வரப் பெயர்கள் | சங்கேதம் |
|---|---|---|
| **1வது, 7வது சக்கரங்களில்** | சுத்தரிஷபம், சுத்த காந்தாரம் | ர.க |
| **2வது, 8வது சக்கரங்களில்** | சுத்தரிஷபம், சாதாரண காந்தாரம் | ர.கி |
| **3வது, 9வது சக்கரங்களில்** | சுத்தரிஷபம், அந்தர காந்தாரம் | ர.கு |
| **4வது, 10வது சக்கரங்களில** | சதுஸ்ருதி ரிஷபம், சாதாரண காந்தாரம் | ரி.கி |
| **5வது, 11வது சக்கரங்களில்** | சதுஸ்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம் | ரி.கு |
| **6வது, 12வது சக்கரங்களில** | ஷட்சுருதி ரிஷபம், அந்தர காந்தாரம் | ரு.கு |

- **தைவதமும் நிஷாதமும் இராகத்திற்கு இராகம் மாறும்**

| இராக இலக்கம் | ஸ்வரப் பெயர்கள் | சங்கேதம் |
|---|---|---|
| **1ஆம் கர்த்தா இராகத்தில** | சுத்த தைவதம், சுத்த நிஷாதம் | த.ந |
| **2ஆம் கர்த்தா இராகத்தில** | சுத்த தைவதம், கைஷிகி நிஷாதம | த.நி |
| **3ஆம் கர்த்தா இராகத்தில்** | சுத்த தைவதம், காகலி நிஷாதம் | தி.நி |
| **4ஆம் கர்த்தா இராகத்தில** | துஸ்ருதி தைவதம், கைஷிகி நிஷாதம் | த.நு |
| **5ஆம் கர்த்தா இராகத்தில** | சதுஸ்ருதி தைவதம், காகலி நிஷாதம | தி.நு |
| **6ஆம் கர்த்தா இராகத்தில** | ஷட்சுருதி தைவதம், காகலி நிஷாதம் | து.நு |

❖ 72 மேளகர்த்தா இராகங்களில் 16 ஸ்வரப் பெயர்களும் காணப்படுகின்றன. 16 ஸ்வரப் பெயர்களில் ரிஷப, காந்தார, தைவத, நிஷாத ஸ்வரங்கள் 3 பேதங்களைக் கொண்டுள்ளன. அவற்றின் பெயர்களும் சங்கேதாட்சரங்களும் பின்வருமாறு.

| ஸ்வரம் | ஸ்வரப் பெயர் | சங்கேதம் |
|---|---|---|
| ரிஷபம் | சுத்த ரிஷபம் | ர |
| | சதுஸ்ருதி ரிஷபம் | ரி |
| | ஷட்சுருதி ரிஷபம் | ரு |
| காந்தாரம் | சுத்த காந்தாரம் | க |
| | சாதாரண காந்தாரம் | கி |
| | அந்தர காந்தாரம் | கு |
| தைவதம் | சுத்த தைவதம் | த |
| | சதுஸ்ருதி தைவதம் | தி |
| | ஷட்சுருதி தைவதம் | து |
| நிஷாதம் | சுத்த நிஷாதம் | ந |
| | கைஷிகி நிஷாதம் | நி |
| | காகலி நிஷாதம் | நு |

❖ ஒவ்வொரு சக்கரத்திலுமுள்ள ஆறு மேளங்களும், முறையே பா, ஸ்ரீ, கோ, பூ, மா,ஷா என்னும் சங்கேத அட்சரங்களால் குறிக்கப்படுகின்றன.

## 3.2 விவாதி மேளங்கள்

❖ விவாதி மேளங்கள் என்பவை, விவாதி ஸ்வரங்களை உடைய மேளங்களாகும்.

❖ விவாதி தோஷத்திற்கு உட்பட்டவை.

❖ அவற்றில் சுத்த காந்தாரமும், ஷட்சுருதி ரிஷபமும்,சுத்தநிஷாதம், ஷட்சுருதி தைவதமும் ஆகிய நான்கு விவாதி ஸ்வரங்களில் ஏதாவது ஒன்று அல்லது இரண்டு ஸ்வரங்கள் வரும்.

❖ இரண்டு விவாதிஸ்வரங்களுக்கு மேல் ஒரு மேளத்தில் வராது. இரண்டு விவாதிஸ்வரங்கள் வரின், அவற்றில் ஒன்று பூர்வாங்கத்தைச் சேர்ந்ததாகவும், மற்றொன்று உத்தராங்கத்தைச் சேர்ந்ததாகவும் இருக்கும்.

❖ இரண்டு விவாதி ஸ்வரங்களை எடுத்துக்கொள்ளும் மேளங்களின் எண்கள் 1, 6, 31,36, 37, 42, 67, 72

❖ விவாதி தோஷத்திற்குட்பட்ட மேளங்களின் இலக்கங்கள்

1-6 வரை - 1 ஆவது சக்கரம்
31-36 வரை - 6 ஆவது சக்கரம்
37-42 வரை - 7 ஆவது சக்கரம்
67-72 வரை - 8 ஆவது சக்கரம்

❖ நான்கு சக்கரங்களிலும் வரும் 24 விவாதி மேளங்களைத் தவிர மீதி எட்டுச்சக்கரங்களில் ஒவ்வொரு சக்கரத்திலும் ஆரம்ப மேளமும் (சங்கேதாட்சரம் பா)கடைசி மேளமும் (சங்கேதாட்சாரம் ஷா) விவாதி தோஷத்திற்கு உட்பட்டவை.

❖ தைவதமும் நிஷாதமும் இராகத்திற்கு இராகம் மாறும்.

❖ விவாதி மேளங்களின் தொகை 40 ஆகும். விவாதி தோஷமற்ற மேளங்களின் தொகை 32

# 72 மேளகர்த்தா அட்டவணை

| சக்கரம் | இராக எண் | பூர்வ மேளகர்த்தா சுத்த மத்தியம மேளகர்த்தா | ரிஸப, காந்தார, தைவத, நிஷாத பேதங்கள் | | | | உத்ர மேளகர்த்தா பிரதி மத்தியம மேளகர்த்தா | இராக எண் | சக்கரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரி | கா | த | நி | | | |
| 01 - இந்து | 01 -பா | கனகாங்கி | சுத்த | சுத்த | சுத்த | சுத்த | ஸாலகம் | 37 -பா | 07 – ரிஷி |
| | 02 -ஸ்ரீ | ரத்னாங்கி | சுத்த | சுத்த | சுத்த | கைசிகி | ஜலார்ணவம் | 38 -ஸ்ரீ | |
| | 03 -கோ | கானமூர்த்தி | சுத்த | சுத்த | சுத்த | காகிலி | ஜாலவராளி | 39 -கோ | |
| | 04 -பூ | வனஸ்பதி | சுத்த | சுத்த | சதுஸ் | கைசிகி | நவனீதம் | 40 -பூ | |
| | 05 -மா | மானவதி | சுத்த | சுத்த | சதுஸ் | காகிலி | பாவனி | 41 -மா | |
| | 06 -ஷா | தானரூபி | சுத்த | சுத்த | ஷட்சு | காகிலி | ரகுப்பிரியா | 42 -ஷா | |
| 02 – நேத்ர | 07 -பா | ஸேனாவதி | சுத்த | சாதாரண | சுத்த | சுத்த | கவாம்போதி | 43 -பா | 08 – வஸு |
| | 08 -ஸ்ரீ | ஹனுமதோடி | சுத்த | சாதாரண | சுத்த | கைசிகி | பவப்பிரியா | 44 -ஸ்ரீ | |
| | 09 -கோ | தேனுகா | சுத்த | சாதாரண | சுத்த | காகிலி | சுபபந்துவராளி | 45 -கோ | |
| | 10 -பூ | நாடகபிரியா | சுத்த | சாதாரண | சதுஸ் | கைசிகி | ஷட்விதமார்க்கினி | 46 -பூ | |
| | 11 -மா | கோகிலபிரியா | சுத்த | சாதாரண | சதுஸ் | காகிலி | ஸுவர்ணாங்கி | 47 -மா | |
| | 12 -ஷா | ரூபவதி | சுத்த | சாதாரண | ஷட்சு | காகிலி | திவ்யமணி | 48 -ஷா | |
| 03 – அக்னி | 13 -பா | காயகப்பிரியா | சுத்த | அந்தர | சுத்த | சுத்த | தவளாம்பரி | 49 -பா | 09 – ப்ரம்ம |
| | 14 -ஸ்ரீ | வகுளாபரணம் | சுத்த | அந்தர | சுத்த | கைசிகி | நாமநாராயணி | 50 -ஸ்ரீ | |
| | 15 -கோ | மாயாமாளவகௌளை | சுத்த | அந்தர | சுத்த | காகிலி | காமவர்த்தினி | 51 -கோ | |
| | 16 -பூ | சக்ரவாகம் | சுத்த | அந்தர | சதுஸ் | கைசிகி | ராமப்பிரியா | 52 -பூ | |
| | 17 -மா | ஸுர்யகாந்தம் | சுத்த | அந்தர | சதுஸ் | காகிலி | கமனச்சரம் | 53 -மா | |
| | 18 -ஷா | ஹடகாம்பரி | சுத்த | அந்தர | ஷட்சு | காகிலி | விச்வம்பரி | 54 -ஷா | |
| 04 - வேத | 19 -பா | ஜங்காரத்வனி | சதுஸ் | சாதாரண | சுத்த | சுத்த | சயாமளாங்கி | 55 -பா | 10 - திசி |
| | 20 -ஸ்ரீ | நடைபைரவி | சதுஸ் | சாதாரண | சுத்த | கைசிகி | ஷண்முகப்பிரியா | 56 -ஸ்ரீ | |
| | 21 -கோ | கீரவாணி | சதுஸ் | சாதாரண | சுத்த | காகிலி | ஸிம்ஹேந்திரமத்யமம் | 57 -கோ | |
| | 22 -பூ | கரஹரபிரியா | சதுஸ் | சாதாரண | சதுஸ் | கைசிகி | ஹேமாவதி | 58 -பூ | |
| | 23 -மா | கௌரிமனோஹரி | சதுஸ் | சாதாரண | சதுஸ் | காகிலி | தர்மவதி | 59 -மா | |
| | 24 -ஷா | வருணப்பிரியா | சதுஸ் | சாதாரண | ஷட்சு | காகிலி | நீத்மதி | 60 -ஷா | |
| 05 - பாண | 25 -பா | மாரரஞ்சனி | சதுஸ் | அந்தர | சுத்த | சுத்த | காந்தாமணி | 61 -பா | 11 – ருத்ர |
| | 26 -ஸ்ரீ | சாருகேசி | சதுஸ் | அந்தர | சுத்த | கைசிகி | ரிஷபப்பிரியா | 62 -ஸ்ரீ | |
| | 27 -கோ | ஸரஸாங்கி | சதுஸ் | அந்தர | சுத்த | காகிலி | லதாங்கி | 63 -கோ | |
| | 28 -பூ | ஹரிகாம்போஜி | சதுஸ் | அந்தர | சதுஸ் | கைசிகி | வாசஸ்பதி | 64 -பூ | |
| | 29 -மா | தீரசங்கராபரணம் | சதுஸ் | அந்தர | சதுஸ் | காகிலி | மேசக்கல்யாணி | 65 -மா | |
| | 30 -ஷா | நாகநந்தினி | சதுஸ் | அந்தர | ஷட்சு | காகிலி | சித்ராம்பரி | 66 -ஷா | |
| 06 - ருது | 31 -பா | யாகபிரியா | ஷட்சு | அந்தர | சுத்த | சுத்த | ஸுசரித்ர | 67 -பா | 12 – ஆதித்ய |
| | 32 -ஸ்ரீ | ராகவர்த்தனி | ஷட்சு | அந்தர | சுத்த | கைசிகி | ஜ்யோதி ஸ்வரூபினி | 68 -ஸ்ரீ | |
| | 33 -கோ | காங்கேயப்பூஷனி | ஷட்சு | அந்தர | சுத்த | காகிலி | தாதுவர்தனி | 69 -கோ | |
| | 34 -பூ | வாகதீஸ்வரி | ஷட்சு | அந்தர | சதுஸ் | கைசிகி | நாஸிகாபூஷணி | 70 -பூ | |
| | 35 -மா | சூலினி | ஷட்சு | அந்தர | சதுஸ் | காகிலி | கோஸலம் | 71 -மா | |
| | 36 -ஷா | சலநாட | ஷட்சு | அந்தர | ஷட்சு | காகிலி | ரஸிகப்பிரியா | 72 -ஷா | |

**பயிற்சி**

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. 72 மேளகர்த்தா சக்கரத்தை அறிமுகப்படுத்தியவர் யார்? அவரது நூல் யாது?

   ……………………………………………………………………………………………………

2. தற்போதுள்ள 72 மேள பெயர் பட்டியலை தொகுத்தவரின் பெயரையும் நூலையும் தருக.

   ……………………………………………………………………………………………………

3. துளஜாமகாராஜா வாழ்ந்த காலம் யாது? அவர் இயற்றிய நூலின் பெயர் யாது ?

   ……………………………………………………………………………………………………

4. 12 சக்கரங்களையும் தருக.

   ……………………………………………………………………………………………………

5. சுத்த மத்திம மேளகர்த்தாக்கள் எத்தனை?

   ……………………………………………………………………………………………………

6. பிரதி மத்திம மேளகர்த்தாக்களை வேறு எவ்வாறு அழைப்பர்?

   ……………………………………………………………………………………………………

7. பிரதி மத்திம மேளகர்த்தாக்கள் எத்தனை?

   ……………………………………………………………………………………………………

8. பிரதி மத்திம மேளங்களை வேறு எப்பெயரால் அழைப்பர்?

   ……………………………………………………………………………………………………

9. ஒவ்வொரு சக்கரத்திலுமுள்ள ஆறு மேளங்களினதும் சங்கேத அட்சரங்களை தருக.

   ……………………………………………………………………………………………………

10. 16 ஸ்வரப் பெயர்களினதும் சங்கேதாட்சரங்களைத் தருக.

    ……………………………………………………………………………………………………

11. சக்கரத்துக்கு சக்கரம் மாறும் ஸ்வரங்கள் எவை?

    ……………………………………………………………………………………………………

12. இராகத்துக்கு இராகம் மாறும் ஸ்வரங்கள் எவை?

    ……………………………………………………………………………………………………

13. விவாதி ஸ்வரங்களை தருக.


    ……………………………………………………………………………………………………

14. விவாதி தோஷத்திற்கு உட்பட்ட மேளங்களின் இலக்கங்களை தருக.

    ……………………………………………………………………………………………………

15. விவாதி மேளங்கள் எத்தனை?

    ……………………………………………………………………………………………………



## 3.3 கடபயாதி சக்கரம்

| கடபயாதிச் சக்கரம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 0 |
| காதி நவ | க Ka | க்க kha | க ga | க்க gha | ங nga | ச cha | ச்ச chha | ஜ ja | ஜ்ஜ jha | ஞ gna |
| டாதி நவ | ட ṭa | ட்ட ṭha | ட ḍa | ட்ட ḍha | ண ṇa | த ta | த்த tha | த் da | த்த dha | ந,ன na |
| பாதி பஞ்ச | ப pa | ப்ப pha | ப ba | ப்ப bha | ம ma | | | | | |
| யாதி யஷ்ட | ய ya | ர ra | ல la | வ va | ச 'sa | ஷ sha | ஸ sa | ஹ ha | | |

- 72 மேளகர்த்தாக்களின் பெயரமைப்பு மேலே கொடுக்கப்பட்ட கடபயாதிச் சக்கர முறைப்படியே அமைக்கப்பட்டுள்ளது.
- இச்சக்கரம் 4 பிரிவுகளைக் கொண்டது
  1. க முதல் 9 எழுத்துக்கள் காதி நவ என்றும்
  2. ட முதல் 9 எழுத்துக்கள் டாதி நவ என்றும்
  3. ப முதல் 5 எழுத்துக்கள் பாதி பஞ்ச என்றும்
  4. யா முதல் 8 எழுத்துக்கள் யாதி யஷ்ட என்றும்
- இந்நான்கு வகையிலுள்ள முதல் எழுத்துக்களகன கடபய என ஒன்று சேர்ந்து கடபயாதி சக்கரம் எனப்படுகிறது.
- கடபயாதி சக்கரத்தைக் கொண்டு ஒரு மேளத்தின் பெயரைக் கூறினால் அதன் மேள எண்ணை கூற முடியும்.
- ஒரு மேளகர்த்தா இராகத்தின் முதலிரண்டு எழுத்துக்களை மேலே குறிப்பிட்ட சக்கரத்தில் எந்த இலக்கங்களில் வருகின்றதோ அந்த இலக்கங்களை முறையே எழுதி வந்த எண்ணை திருப்பினால் மேளகர்த்தா எண் வரும்.
- உதாரணம் : மாயாமாளவகௌளை இராகத்தின் முதலிரண்டு எழுத்துக்கள் மா,யா என்பதனை
  மா என்ற எழுத்தின் எண் (பாதி பஞ்சவில் 5)
  யா என்ற எழுத்தின் எண் (யாதி யஷ்ட வில் 1)
  ஆகவே 51 என்ற எண்ணை திருப்பி வாசித்தால் 15 என்ற எண் உருவாகும்.

# 04. உருப்படிகளின் இலட்சணம்

## 4.1 சூளாதி

- சூட எனும் கன்னட சொல்லில் இருந்து தோன்றிய உருப்படி.
- தாதுவின் அமைப்பில் கீதத்தை ஒத்திருக்கும்.
- ஸாஹித்தியம் பக்தி ரசம் பொருந்தியிருக்கும்.
- ஒரே இராகத்தில் 2,5,7 தாளங்கள் சேர்ந்து தாளமாலிகையாக அமைந்து காணப்படும்.
- சூளாதிகள் இராக தாளமாலிகையாகவும் இயற்றப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு தாளத்தின் முடிவிலும் இயற்றியவரின் பெயர் அல்லது தெய்வத்தின் பெயர் முத்திரையாக இடம்பெற்றிருக்கும்.
- ஆதி தாளமும் இரட்டித்த மட்டிய தாளமும் சூளாதிகளில் காணப்படும்
- சூளாதிகள் மத்திம காலத்தில் பாடப்படும்.
- கன்னட மொழி சூளாதி – புரந்தரதாஸர்
- தெலுங்கு மொழி சூளாதி – திருப்பதி அன்னமாச்சியார் (இராக தாளமாலிகை சூளாதிகளை இயற்றியுள்ளார்)
- கலாநிதி கே.பொன்னையாபிள்ளை – தமிழில் பஞ்சதாள சூளாதிகளை இயற்றியுள்ளார்.

**உதாரணம்**

1. கதிரவன் குணதிசை -பௌளி -சதுஸ்ர துருவம்
2. உழவர்களுடை -பௌளி -சதுஸ்ர மட்டியம்
3. ஆவினமெலாம் -பௌளி -மிஸ்ர திரிபுடை
4. தித்தி தனன -பௌளி -திஸ்ர அட
5. பெருமானினதினை -பௌளி -சதுஸ்ர ஏகம்

**பயிற்சி 4.1**

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. ஸுட என்ற கன்னட மொழிப் பதத்திலிருந்து தோன்றிய உருப்படி எது?

   ..........................................................................................................

2. தாதுவின் அமைப்பில் கீதத்தை ஒத்திருக்கும் உருப்படி எது?

   ..........................................................................................................

3. சூளாதியின் முடிவில் முத்திரையாக இடம்பெறுவது யாது?

   ..........................................................................................................

4. சூளாதிகள் இடம்பெறும் தாளங்கள் எவை?

   ..........................................................................................................

5. கன்னட மொழியில் சூளாதிகளை இயற்றியவர் யார்?

   ..........................................................................................................

6. தெலுங்கில் இராக,தாள மாலிகையாக அமைந்துள்ள சூளாதியை இயற்றியவர் யார்?

   ..........................................................................................................

7. தமிழில் பஞ்சதாள சூளாதியை இயற்றியவர் யார்?

..........................................................................................................

8. பெருமாளின்திணை எனும் சூளாதியின் இராகம் யாது?

..........................................................................................................

9. உழவர்களுடை எனும் பௌளி இராக சூளாதியின் தாளம் யாது?

..........................................................................................................

10. சூளாதியை கற்பதனால் மாணவர்களிடத்தில் விருத்தி அடையும் திறன் யாது?

..........................................................................................................

## 4.2 கிருதி

- ❖ கிருதி அரங்கிசை வடிவங்களில் மிக முக்ககியமானதும்,இசை வடிவங்களில் மிக சிறந்தானதாகும்.
- ❖ தற்கால அரங்கிசை நிகழ்ச்சிகளில் கிருதியை பாடுவதற்க அதிக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.
- ❖ கிருதிகளில் கற்பனாஸ்வரம்,நிரவல் பாடுவதற்கு ஏற்ற இடங்கள் உண்டு.
- ❖ கிருதிகளில் சம,அனாகத,அதீத எடுப்புகள் கையாளப்படுகின்றன.
- ❖ பல்லவி,அனுபல்லவி,சரணம் என்ற பகுதிகளை கொண்டவை
- ❖ சில கிருதிகளில் அனுபல்லவி இருக்காது.அச்சரணத்திற்கு சமஷ்டி சரணம் என்று பெயர்
- ❖ சரணங்கள் ஒன்றுக்கு மேற்பட்டவையாகவும் ஒரே தாதுவாய் அல்லது வெவ்வேறு தாதுக்களால் அமைந்திருக்கும்.
- ❖ இதன் சாகித்தியம் இறைவனை பற்றியதாகவோ உலகியலை பற்றியதாகவோ இருக்கும்.
- ❖ கிருதிகளுக்கு மதிப்பு கொடுப்பது தாதுவாகும்.
- ❖ தாதுவை பாடுவதாற்கு சாகித்தியம் ஒரு கருவியாக பயன்படுகிறது.
- ❖ கிருதிகளில் மூன்று ஸ்தாயிகளை தழுவிய சஞ்சாரங்களை காணலாம்.
- ❖ கிருதிகளை இயற்றுபவர்கள் சங்கீதத்திலும் சாகித்தியத்திலும் வல்லவர்களாக இருக்க வேண்டும்.
- ❖ கிருதியின் எல்லை 1 1/2– 2 ஸ்தாயி வரை காணப்படும்.
- ❖ **கிருதிகளுக்கு அணிகளாக விளங்குபவை**
  1. சங்கதிகள்
  2. மத்திமகால சாஹித்தியம்
  3. சிட்டை ஸ்வரம்
  4. அநுலோம சிட்டைஸ்வரம்
  5. ஸ்வரசாகித்தியம்
  6. சொற்கட்டு ஸ்வரம்
  7. ஸ்வராட்ஸரம்
  8. கமகம்
  9. கோபுச்சயதி,ஸ்ரோத்தோவகயதி
  10. மணிப்பிரவாளம்
- ❖ **கிருதிகளை இயற்றிய வாக்கேயகாரர்கள்**
  1. தியாகராஜ சுவாமிகள்
  2. சியாமாசாஸ்திரிகள்
  3. முத்துஸ்வாமி தீட்சிதர்
  4. சுவாதித்திருநாள் மகாராஜா
- ❖ **கிருதிகளுக்கு உதாரணம்**
  1. சக்கனிராஜ - கரஹரப்பிரியா -ஆதி
  2. ஏதாவுனரா - கல்யாணி -ஆதி
  3. ஜெகதீஸ்வரி - மோகனம் -ஆதி

**பயிற்சி 4.2**

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. அரங்கிசை வடிவங்களில் மிகவும் முக்கியமான உருப்படி எது?

   ……………………………………………………………………………………………

2. கிருதிகள் எந்தெந்த எடுப்புகளில் அமைந்துள்ளன?

   ……………………………………………………………………………………………

3. கிருதி எனும் உருப்படியில் இடம்பெறும் அங்கங்கள் எவை?

   ……………………………………………………………………………………………

4. சமஷ்டி சரணம் என்றால் என்ன?

   ……………………………………………………………………………………………

5. கிருதியின் சாகித்தியம் எவ்வாறு இருக்கும்?

   ……………………………………………………………………………………………

6. கிருதிகளை இயற்றுபர்களிடம் காணப்பட வேண்டிய திறன்கள் எவை?

   ……………………………………………………………………………………………

7. கிருதியின் எல்லை யாது?

   ……………………………………………………………………………………………

8. கிருதிகளின் அலங்கரிக்கும் அணிகள் எவை?

   ……………………………………………………………………………………………

9. கிருதிகளை இயற்றிய வாக்கேயகாரர்கள் மூவரை குறிப்பிடுக.

   ……………………………………………………………………………………………

10. கிருதிகளுக்கு 3 உதாரணங்கள் தருக.

    ……………………………………………………………………………………………

11. நகுமோமுகனலே எனும் கிருதியின் இராகம் யாது?

    ……………………………………………………………………………………………

12. பாலிஞ்சு காமாட்சி எனும் கிருதியின் இராகம் யாது?

    ……………………………………………………………………………………………

## 4.3 இலட்சண கீதம்

- பல்லவி,அனுபல்லவி,சரணம் எனும் அங்கவித்தியாசம் இல்லாத உருப்படி.
- கீதம் இரு வகைப்படும்
  1. சஞ்சாரி கீதம் 2. இலட்சண கீதம்
- **இலட்சண கீதம்** - கீதம் எந்த இராகத்தில் அமைக்கப்பட்டுள்ளதோ அந்த இராகத்தின் இலட்சணத்தை சாகித்தியம் மூலம் விளக்குவது.
- ஜன்னிய இராகத்தில் அமைந்த இலட்சண கீதத்தில் எந்த இராகத்தின் ஜன்யம் என்ற குறிப்பும் அதன் வர்ஜஸ்வரங்கள்,வக்ரஸ்வரங்கள்,கம்பிதஸ்வரங்கள்,இராகத்தின் வகை முதலிய செய்திகள் சாகித்தியத்தின் வாயிலாக வெளிப்படும்.
- ஜனக இராகத்திலமைந்த இலட்சண கீதம் இராகாங்க இலட்சண கீதம் எனப்படும்.
- இராகாங்க இலட்சண கீதம் மூன்று வகைப்படும்

1. சூத்திர காண்டம்
2. உபாங்க காண்டம்
3. பாஷாங்க காண்டம்

- இராகாங்க இராக இலட்சண கீதத்தில் சூத்திர காண்டத்தில் அந்த இராகத்தில் வரும் ஸ்லரஸ்ரஸ்தானங்களைக் குறிக்கும் எழுத்துக்களைக் குறிக்கும் எழுத்துக்கள் வரிசையாக கொடுக்கப்பட்டிருக்கும்.
- உதாரணம் : ரவிகோடி - மாயாமாளவகௌளை
- உபாங்க கண்டத்தில் கீதம் அமைக்கப்பட்டுள்ள ஜனக இராகத்திலிருந்து தோன்றிய உபாங்க இராகங்களின் பெயர்களும் பாஷாங்க இராகங்களின் பெயரும் காணப்படும்.
- ஜனக இராக இலட்சண கீதமானது பழங்காலத்தில் இராகாங்க இலட்சணகீதம் என்று அழைக்கப்பட்டது.
- இலட்சண கீதம் வழியாக பழங்கால வழக்கத்தில் இருந்த இராகங்களின் ஸ்வரஸ்தானங்கள்,ஜன்னிய இராக பெயர்கள்,எண்ணிக்கை போன்ற வரலாற்று குறிப்புகளை அறியலாம்.
- **இலட்சண கீதம் இயற்றியவர்கள்**

1. பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள்
2. வேங்கடமகி
3. கோவிந்த தீட்சிதர்
4. தஞ்சை பொன்னையாபிள்ளை

- **இலட்சண கீதத்திற்கு உதாரணம்**
- ரேவதி ராகம் - ரேவதி
- முகாரி ராகம் - முகாரி
- ரவிகோடி – மாயாமாளவகௌளை

**பயிற்சி 4.3**

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. அங்க வித்தியாசம் அற்ற உருப்படி எது?

   ………………………………………………………………………………………………………

2. மாத்ருகா பதங்கள் இடம்பெறும் உருப்படி எது?

   ………………………………………………………………………………………………………

3. கீதத்தின் வகைகள் எத்தனை?அவை எவை

   ………………………………………………………………………………………………………

4. இலட்சண கீதம் என்பதை வரைவிலக்கணப்படுத்துக.

   ………………………………………………………………………………………………………

   ………………………………………………………………………………………………………

5. ஜனக இராகத்தில் அமைந்த இலட்சண கீதத்தை எவ்வாறு அழைப்பர்

   ………………………………………………………………………………………………………

6. இராகாங்க இலட்சண கீதம் எத்தனை பகுதிகளைக் கொண்டது? அவை எவை

   ………………………………………………………………………………………………………

7. ரவிகோடி எனும் இலட்சண கீதத்தின் இராகம் யாது?

..........................................................................................................

8. சூத்திர கண்டம் என்றால் என்ன? இலட்சண கீதம் இயற்றியோர் மூவரின் பெயர்களை தருக.

..........................................................................................................

..........................................................................................................

9. வாரண முகனே என்ற இலட்சண கீதத்திற்கு 3 உதாரணங்கள் தருக.

..........................................................................................................

## 4.4 ஜாவளி

- ❖ நாட்டிய இசைக்கு பயன்படுத்தும் சிருங்கார ரஸத்தை வெளிப்படுத்தும் உருப்படி.
- ❖ நாயகன்,நாயகி,தோழி ஆகியோர் பாடும் வகையில் இயற்றப்பட்டுள்ளது.
- ❖ பச்சை சிருங்கார ரசத்தை வெளிப்படுத்தும் உருப்படி.
- ❖ இதன் அமைப்பு விறு விறுவிறுப்புள்ளதாக இருக்கும்.
- ❖ இதன் வேகம் மத்யம காலத்தில் இருக்கும்.
- ❖ கொச்சை சொற்கள் வழியாக காதல் உணர்ச்சியை வெளிப்படுத்தும்.
- ❖ 19ம் நூற்றாண்டு இயற்றப்பட்ட உருப்படியாகும்.
- ❖ ஜாவடி எனும் கன்னட மொழிப் பதத்திலிருந்து வந்த உருப்படி.
- ❖ ஹிந்துஸ்தான் இசையில் கஜல் (GHAZAL) என்ற உருப்படி வகையை சேர்ந்தது.
- ❖ பல்லவி,அனுபல்லவி,சரணம் எனும் அங்க வித்தியாசம் கொண்டது.
- ❖ சில ஜாவளிகள் அனுபல்லவி இல்லாமல் இருக்கும்.
- ❖ ஜாவளி சாதாரண இராகங்களிலும் காபி,பெஹாக்,பரஸ்,ஹமீர்கல்யாணி போன்ற தேசிய இராகங்களிலும் இயற்றப்பட்டுள்ளது.
- ❖ ஜாவளிகள் அநேகமாக ஆதி,ரூபக தாளங்களில் இயற்றப்பட்டுள்ளது.
- ❖ நீ மாடலே மாயன்னுரா என்னும் பூர்வி இராகத்திலமைந்த ஜாவளி விலோம சாபு தாளத்தில் அமைந்துள்ளது.
- ❖ ஸகிபிராண எனும் செஞ்சுருட்டி இராக ஜாவளி சௌக காலத்தில் அமைந்துள்ளது.
- ❖ **ஜாவளி இயற்றிய வாக்கேய காரர்கள்**
  1. தர்மபுரி சுப்பராயர்
  2. பட்டாபி ராமய்யர்
  3. ஸ்வாதித்திருநாள் மகாராஜா
- ❖ ஜாவளிக்கு உதாரணங்கள்
  1. சமயமிதே - ஹிந்துஸ்தான் பெஹாக் - பட்டணம் சுப்ரமணிய ஐயர்
  2. வகலாடி - ஹிந்துஸ்தான் பெஹாக் - திருப்பதி நாராயணசாமி
  3. சகிப்ராண – செஞ்சுருட்டி – தர்மபுரி சுப்பராயர்

**பயிற்சி 4.4**

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. நாட்டிய இசைக்குப் பயன்படுத்தும் சிருங்கார ரஸத்தை வெளிப்படுத்தும் இரண்டு உருப்படிகளின் பெயர்களைத் தருக.

   ..............................................................................................................

2. பச்சை சிருங்கார ரஸத்தை வெளிப்படுத்தும் உருப்படி எது?

   ..............................................................................................................

3. ஜாவளி எத்தனையாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட உருப்படி ?

   ..............................................................................................................

4. ஜாவளியின் வேகம் எந்த காலத்தில் அமைந்திருக்கும்?

   ..............................................................................................................

5. கொச்சை சொற்கள் வழியாக காதல் உணர்ச்சியை வெளிப்படுத்தும் உருப்படி எது?

   ..............................................................................................................

6. ஜாவளி எந்த மொழிப் பதத்திலிருந்து தோன்றியது?

   ..............................................................................................................

7. ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் ஜாவளி எந்த உஷரப்படி வகைக்கு ஒப்பானது?

   ..............................................................................................................

8. ஜாவளி இயற்றப்பட்டுள்ள தேசிய இராகங்கள் எவை?

   ..............................................................................................................

9. ஜாவளியின் அங்கங்களைக் குறிப்பிடுக.

   ..............................................................................................................

10. ஜாவளி பெரும்பாலும் இயற்றப்பட்டுள்ள தாளங்கள் எவை?

    ..............................................................................................................

11. நீமாடலே மாயன்னுரா எனும் ஜாவளியின் இராக,தாளத்தை தருக.

    ..............................................................................................................

12. ஸகிபிரான எனும் ஜாவளியின் இராகம் யாது?

    ..............................................................................................................

13. ஜாவளி இயற்றிய வாக்கேயகாரர்கள் மூவரின் பெயர்களை குறிப்பிடுக.

    ..............................................................................................................

14. ஜாவளிக்கு 3 உதாரணங்கள் தருக.

    ..............................................................................................................

15. வகலாடி எனும் ஜாவளியின் ஆசிரியர் யார்?

    ..............................................................................................................

16. சமயமிதே எனும் ஜாவளி பாடப்பட்டுள்ள இராகம் யாது?

    ..............................................................................................................

## 4.5 தில்லானா

- மனத்திற்கு உற்சாகத்தையும்,ஊக்கத்தையும்,மனமகிழ்ச்சியையும் கொடுக்கக் கூடியது.
- நாட்டியத்திற்குரிய உருப்படியாக அமைந்த போதிலும் இதன் கவர்ச்சி காரணமாக இசைக்கச்சேரிகளின் இறுதியில் பாடப்படுகிறது.
- திரிதில்லானா என்ற தேசிய இசை முறையிலிருந்து தோன்றியது.
- 18ம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது.
- இதன் தாது கவர்ச்சிகரமாகவும்,மாது ஸ்வரங்கள் கலந்த ஜதிகளாகவும் சிற்சில இடங்களில் வார்த்தைகளாவும் அமைந்திருக்கும்.
- இதன் வேகம் பெரும்பாலும் மத்திம காலமாக இருக்கும்.
- பல்லவி,அனுபல்லவி,சரணம் எனும் அங்க வித்தியாசங்களை கொண்டது.
- பல்லவி,அனுபல்லவி ஜதிகளை கொண்டதாகவும் சரணம் ஸ்வரங்களையும்,வார்த்தைகளையும் ,ஜதிகளையும் கொண்டதாகவும் அமைந்திருக்கும்.
- நாட்டிய நிகழ்வில் 7வது இடத்தை பெறுகின்றது.
- நாட்டிய நிகழ்வுகளில் முக்கிய அம்சமாக திகழ்வதுடன் இசைக்கச்சேரிகளில் இறுதியிலும் காலஷேபங்களிலும் இடம்பெறும்.
- தில்லானாக்கள் பொதுவாக ஆதி,ரூபக தாளங்களில் அமைந்திருக்கும்.
- மஹா வைத்தியநாதய்யர் கௌரிநாயக எனும் தில்லானாவை கானடா இராகத்தில் ஸிம்நந்தன தாளத்தில் இயற்றியுள்ளார்.
- தில்லானாக்கள் தமிழ்,தெலுங்கு,சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் இயற்றப்பட்டுள்ளது.
- ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் தரானா என்னும் உருப்படி வகை தில்லானாவிற்கு ஒப்பானது.
- **தில்லானா இயற்றியோர்**
  1. மஹா வைத்தியநாதய்யர்
  2. குன்றக்குடி கிருஷ்ணய்யர்
  3. வீரபத்திர ஐயர்
  4. லால்குடி ஜெயராமன்
  5. பாலமுரளி கிருஷ்ணா
- **தில்லானாவிற்கு உதாரணம்**
  1. ஜம்.ஜம்.தரித – வசந்தா – பல்லவி சேஷய்யர்
  2. நாதிரனாதொம்திரர – பிலஹரி – கே.பொன்னையா பிள்ளை
  3. தீம் தானனன - ஹிந்தோளம் - திருக்கோகர்ணம் சுப்பையா

**பயிற்சி 4.5**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தில்லானா என்பதை வரைவிலக்கணம் படுத்துக.

   ……………………………………………………………………………………………

2. தில்லானா எத்தனையாம் நூற்றாண்டு வழக்கத்திற்கு வந்தது?

   ……………………………………………………………………………………………

3. ஹிந்துஸ்தானி இசையில் தரானா என அழைக்கப்படும் உருப்படி எது?

   ……………………………………………………………………………………………

4. தில்லானாவின் வேகம் எக்காலத்தில் அமைந்திருக்கும்

…………………………………………………………………………………………………………

5. தில்லானாவின் அங்கங்கள் எவை?

…………………………………………………………………………………………………………

6. தில்லானாவின் சரணப்பகுதியில் காணப்படும் விடயங்கள் எவை?

…………………………………………………………………………………………………………

7. நாட்டிய நிகழ்வில் தில்லானா எத்தனையாம் இடத்தை வகிக்கின்றது?

…………………………………………………………………………………………………………

8. தில்லானாக்கள் பெறும்பாலும் எந்தெந்த தாளங்களில் அமைந்திருக்கும்?

…………………………………………………………………………………………………………

9. கௌரிநாயக் எனும் கானடா இராக தில்லானாவின் ஆசிரியர் யார்?

…………………………………………………………………………………………………………

10. தில்லானா இயற்றிய வாக்கேயகாரர்கள் மூவரை குறிப்பிடுக.

…………………………………………………………………………………………………………

11. தில்லானாவிற்கு 4 உதாரணங்கள் தருக.

…………………………………………………………………………………………………………

12. ஜம் ஜம் தரித என்ற தில்லானாவின் ஆசிரியர் யார்?

…………………………………………………………………………………………………………

13. திருக்கோகர்ணம் சுப்பயா இயற்றிய தீம் தானனன என்ற தில்லானாவின் இராகம் யாது?

…………………………………………………………………………………………………………

14. பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| இல | உருப்படி | வகை | இராகம் | தாளம் | இயற்றியவர் |
|---|---|---|---|---|---|
| 1. | தாத்ததீம்த | | | | |
| 2. | நாதிரனாதொம்திர | | | | |
| 3. | ஜெகதீஸ்வரி | கிருதி | | | |
| 4. | சக்கனிராஜ | | | | |
| 5. | வகலாடி | | | | |
| 6. | வேகநீவு | | | | |
| 7. | சமயமிதே | | | | |
| 8. | உழவர்களுடை | சூளாதி | | | |
| 9. | வாரணமுகனே | | | | |
| 10. | முகாரி | | முகாரி | | |

## 5.1 ஷண்முகப்பிரியா – தாய் இராகம்

| | |
|---|---|
| மேள எண் | 56 |
| சங்கேதக் குறியீடு | திசி என்றழைக்கப்படும் 10 வது சக்கரத்தில் 2 ஆவது மேளம்<br>(திசி - ஸ்ரீ) 20 ஆவது மேளமாகிய நடபைரவியின் நேர் பிரதி மத்யம இராகம் |
| ஆரோஹணம்<br>அவரோஹணம் | ஆ : ஸரிகமபதநிஸ்<br>அ : ஸ்நிதபமகரிஸ |
| ஸ்வரஸ்தானங்கள் | ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், சாதாரண காந்தாரம், பிரதி மத்யமம்,பஞ்சமம், சுத்த தைவதம், கைசிகி நிஷாதம் |
| இரஞ்சகப் பிரயோகங்கள் | ▪ ப த நி இதன் ஸ்வரஸ்தான சங்கேதமாகும்.<br>▪ ஜீவ ஸ்வரம் : ரி, க, ம, நி<br>▪ நியாச ஸ்வரம் : ரி, ம, ப<br>▪ கிரஹ ஸ்வரம் : ஸ, ப |
| இதர அம்சங்கள் | ▪ மூர்ச்சனாகாரக மேளம். இதன் க, ப, த கிரஹ பேதத்தின் வழியாக முறையே சூலினி, (35), தேனுகா (9), சித்ராம்பரி (66) ஆகிய மேளங்களைத் தோற்றுவிக்கும்.<br>▪ பிரத்தியாகத கமகம் இந்த இராகத்தின் சாயலை நன்கு வெளிப்படுத்தும்.<br>▪ பக்திச் சுவை நிரம்பிய இராகம். எல்லா நேரங்களிலும் பாடலாம்.<br>▪ முக்கிய பிரதிமத்யம இராகங்களில் இதுவுமொன்று.<br>▪ இந்த இராகத்தின் ஜன்யமான சாமரமே அசம்பூர்ண மேள பத்ததியில் 56 வதுமேளமாக விளங்குகின்றது.<br>▪ விரிவான ஆலாபனைக்கு இடம் கொடுக்கும் இராகம். |
| சஞ்சாரம் | பாபமபதநிதநிநி - ஸ்நிநிததபபம - பதநிஸ்ரீ, ஸ்ா - ஸ்நிநிததபபம - பதநிஸ்ரீக்ரீ - ஸ்ரி க்ரிஸ்ா ஸ்நிதபம பதநிஸ்ரிக்ரி ஸ்ரிக்ம் பா பம்க்க்ரீ-க்ரி க்ரி ஸ்ா - நிஸ்க்க்ரிஸ்ா - ஸ்க்ரி ஸ்ா - ஸ்நிநீதபமா - பாரீ ஸ்நீதபம - பாபமபதபம - பதபமககரீ - பாபமககரிரிஸா ஸ்நி நி த த ப மா - ப த நி த நி ஸா |
| இசை வடிவங்கள் | ▪ கிருதி : வத்தனே வாரு - ஆதி - தியாகராஜஸ்வாமிகள்<br>▪ கிருதி : மரி வேறே - ஆதி - பட்டணம் சுப்ரமண்ய ஐயர்.<br>▪ கிருதி : வல்லீ நாயக - ஆதி - முத்தையா பாகவதர்<br>▪ கிருதி : அரஹரசிவா - ஆதி - முத்துத்தாண்டவர்<br>▪ கிருதி : பவஸாகரம் - ஆதி - கோபால கிருஷ்ணபாரதியார் |

## 5.2 வசந்தா – ஜன்னிய இராகம்

| | |
|---|---|
| மேள எண் | 17 |
| சங்கேதக் குறியீடு | 17 வது மேளமாகிய சூர்யகாந்தத்தின் ஜன்யம், ஔடவ ஷாடவ இராகம் - உபாங்க இராகம் |
| ஆரோஹணம்<br>அவரோஹணம் | ஆ : ஸகமதநிஸ்<br>ஆ : ஸ்நிதமகரிஸ |
| ஸ்வரஸ்தானங்கள் | ஸட்ஜம், சுத்தரிஷபம், அந்தர காந்தாரம், சுத்த மத்யமம், சதுஸ்ருதி தைவதம் காகலி நிஷாதம் |
| இரஞ்சகப் பிரயோகங்கள் | ▪ ஜீவ ஸ்வரம் : க, ம, த, நி<br>▪ நியாச ஸ்வரம் : ம, த<br>▪ கிரக ஸ்வரம் : ஸ, க, ம |
| இதர அம்சங்கள் | ▪ பிரத்தியாகமத கமகம் இந்த இராகத்திற்கு அழகைக் கொடுக்கின்றது.<br>▪ கமகம ரி நிதம ஆகியவை இரஞ்சகப் பிரயோகங்களாகும்.<br>▪ வசந்தா இராகத்தின் மத்யமத்தைக் கிரகபெதம் செய்தால் ரமணி (63) என்ற இராகம்கிடைக்கின்றது. (ஸகமபநிஸ் - ஸ்நிதபமகஸ)<br>▪ பழமையான இராகம். மாலை நேரத்திற்கேற்ற இராகம். தனிமை, வர்ணனை முதலியஅம்சங்களை வெளிப்படுத்தும் இராகம்.<br>▪ வசந்தா இராகத்தில் திரிஸ்ருதி தைவதம் (5.˙.3) வருவது கவனிக்கத்தகக்து.<br>▪ ஹாஸ்ய ரஸத்திற்குரிய இராகம். |
| சஞ்சாரம் | ஸா, ஸமகமா, ம - ஸமதநிதம - கமதநிஸ்ா, - ஸ்நிஸ்ரீ ஸ் - ஸ்நிதா - ஸ்ா ஸ்நிஸ்ரி ஸ்நி ஸ்க்ம்க்ரி ஸ்ா - நிஸ்ரி ஸ்ஸ்நிதா - தநிதா தநிதா - தமா - கமதநிஸ்ரீ, ஸ்ா ஸ்நிநிததம கமதநிரி நிதம - கமதம - கமமககரிரிஸா - ஸநி தா மதாநி ஸரிஸா |
| இசை வடிவங்கள் | ▪ வர்ணம் : நின்னுகோரி - ஆதி - தச்சூர் பெரிய சிங்கராச்சாரியார்<br>▪ வர்னம் : நேற்றிரவு - ஆதி - டைகர் வரதாச்சாரியார்<br>▪ கிருதி : சீதம்மா மாயம்மா - ரூபகம் - தியாகராஜஸ்வாமிகள்<br>▪ கிருதி : இராமச்சந்திரம் - ரூபகம் - தியாகராஜஸ்வாமிகள்<br>▪ கிருதி : தரிசனம் செய்வேனே - ஆதி - முத்துத்தாண்டவர்<br>▪ கிருதி : நடனமாடிடினார் - அட - கோபால கிருஷ்ண பாரதியார்<br>▪ கிருதி : வந்தாதரித்தருள் - ஆதி - சேவற்குளம் கந்தஸ்வாமிப் புலவர்<br>▪ கிருதி : ஏதுகோபமோ - ஆதி - இலட்சுமணப்பிள்ளை<br>▪ தில்லானா : ஜம் ஜம் தரித - ஆதி - பல்லவி சேஷய்யர். |

## 5.3 ஸாவேரி – ஜன்னிய இராகம்

| | |
|---|---|
| மேள எண் | 15 |
| சங்கேதக் குறியீடு | மாயாமாளவகௌளை இராகத்தின் ஜன்யம். ஔடவ சம்பூர்ண இராகம் |
| ஆரோஹணம்<br>அவரோஹணம் | ஆ : ஸரிமபதஸ்<br>அ : ஸ்நிதபமகரிஸ |
| ஸ்வரஸ்தானங்கள் | ஸட்ஜம், சுத்த ரிஷபம், அந்தர காந்தாரம், சுத்த மத்திமம், பஞ்சமம், சுத்த தைவதம், காகலி நிஷாதம |
| இரஞ்சகப் பிரயோகங்கள் | ▪ ஜீவ ஸ்வரம் : ரி, ம, த (ம, த கம்பித ஸ்வரங்கள்)<br>▪ நியாச ஸ்வரம் : ம, ப, த<br>▪ கிரஹ ஸ்வரம் : ஸ, ப, த (க - அபூர்வம்) |
| இதர அம்சங்கள் | ▪ பழமையான இராகம்.<br>▪ கருணைச் சுவையை வெளிப்படுத்தும் இராகம். எக்காலமும் பாடலாம்.<br>▪ பல்லவி சேஷய்யர் இவ்விராகத்தை 8 மணி நேரம் பாடியதாகச் சொல்லப்பட்டுகின்றது.<br>▪ ஸரிமபதா என்னும் ஸ்வரக் கோர்வையில் ஏகஸ்ருதி தைவதம் வருகிறது. (இதற்கு ஸாவேரி தைவதம் என்றே பெயருமுண்டு)<br>▪ நி நி தமகரிகா - தமகரிஸா போன்ற பஞ்சம வர்ஜ ஸ்வரக்கோர்வைகள் இந்த இராகத்திற்கு இனிமையைக் கொடுக்கின்றன.<br>▪ ஸரி கரிகமகரிஸா என்னும் ஸ்வரக்கோர்வை அபூர்வமாக வரும். ஸரிஸமா – ரிமரிதா பதபரீ என்னும் தாட்டு ஸ்வரக்கோர்வைகள் இந்த இராகத்திற்கு அழகைக் கொடுக்கின்றன.<br>▪ ஸரிமாகரி - ஸரிமகாரி - ஸரிமபதபமகரி முதலிய ஸ்வரக்கோர்வைகளில் ரி அற்ப நியாஸ ஸ்வரமாக ஒலிக்கின்றது.<br>▪ இதே ஆரோஹண அவரோஹண முறையை 22 வது மேளத்தில் கையாண்டால் ஸாலகபைரவியும், 28ஆம் மேளத்தில் கையாண்டால் யதுகுலகாம்போஜியும் 29வது மேளத்தில் கையாண்டால் ஆரபியும் கிடைப்பதைக் காணலாம். |
| சஞ்சாரம் | ஸரிமபதா - பமா - பதஸ்ா ஸ்ா ஸ்நிதா - பதஸ்ரி க்ரிம்ா க்ரி ஸ்ாஸ்நிதா - பதஸ்ரி ரிஸ்ஸ்நிதா - பமபதநிதபமகரிஸா - நிநிதமகரிஸா - ஸநிதா புமபுத ஸரீ - ஸரிமா - ரிமதா மதரீ - ஸ்நிதா - பதஸ்ரிஸ்ா |
| இசை வடிவங்கள் | 1. கீதம் - ஜனகசுதா - ரூபகம்<br>2. வர்ணம் - ஸரஸூட - ஆதி - கொத்தவாசல் வெங்கடராமையர்<br>3. வர்ணம் - மானே மோஹம் - ஆதி - கோடீஸ்வர ஐயர்<br>4. கிருதி - சங்கரி சங்குரு - ரூபகம் - சியாமாசாஸ்திரி<br>5. கிருதி - வர்மமா என்மீதில் - ரூபகம் - ஆனைய்யா<br>6. கிருதி - முருகா முருகா - மிஸ்ர சாபு - பெரியசாமிதூரன். |

## 5.4 ஆனந்த பைரவி – ஜன்னிய இராகம்

| | |
|---|---|
| மேள எண் | 20 |
| சங்கேதக் குறியீடு | நடபைரவி இராகத்தின் ஜன்யம். வக்ர ஷாடவ சம்பூர்ண இராகம், பாஷாங்க இராகம் |
| ஆரோஹணம்<br>அவரோஹணம் | ஆ : ஸகரிகமபதபஸ்<br>அ : ஸ்நிதபமகரிஸ |
| ஸ்வரஸ்தானங்கள் | ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், சாதாரண காந்தாரம், சுத்த மத்யமம்,பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், கைசிகி நிஷாதம் |
| இரஞ்சகப் பிரயோகங்கள் | ▪ ஜீவ ஸ்வரம் : க, ம, நி<br>▪ நியாச ஸ்வரம் : க, ம, ப, நி<br>▪ கிரஹ ஸ்வரம் : ஸ, க, ப |
| இதர அம்சங்கள் | ▪ ஆரோஹண அவரோஹணத்திலேயே அந்நிய ஸ்வரத்தைச் சேர்த்துப் பாடப்படும்.<br>▪ பாஷாங்க இராகங்களில் இதுவுமொன்று.<br>▪ அந்நிய ஸ்வரமாகிய சதுஸ்ருதி தைவதம், சுத்த தைவதத்திற்கும்,சதுஸ்ருதி தைவதத்திற்கும் இடையில் ஒலிக்கும் ஒரு நுட்ப சுருதியாகும். இந்த அந்நிய ஸ்வரம் ஸ்வரம் ஸ்நிதப - பதநிபாத என்னும் பிரயோகங்களில் வரும் " பதபம " - " மதபம "ஆகிய பிரயோகங்களில் வரும் தைவதம் சுத்த தைவதமே.<br>▪ ஸகம - பநிமப - பநிப - நிஸ்ரி - ஸ்நிதபா முதலியவை விசேஷ அபூர்வ பிரயோகங்களாகும்.<br>▪ ஸாபாஸா என்னது அழகான பிரயோகம். பநிஸ்ா - ஓர் அபூர்வ பிரயோகம்.<br>▪ சில இசை வடிவங்களில் அந்தர காந்தாரமும், காகலி நிஷாதமும் அந்நிய ஸ்வரங்களாக ஒலிப்பதையும் காணலாம்.<br>▪ எல்லா இசை வடிவங்களையும் இந்த இராகத்தில் காணலாம்.<br>உதாரணம் - தாலாட்டுப்பாடல்கள், ஊஞ்சல் பாடல்கள்<br>▪ இது ஒரு பழமையான இராகம். எப்போதும் பாடலாம். |
| சஞ்சாரம் | கமபாபாபம - கமபமகரிகா - கமபதமப - கமபபாமகரிஸா - ஸகரிஸநீ - ஸமகரி - கமபதமப - கமபபாமகரிஸா - நிஸகமபா - கமபஸ்ா - ஸ்ஸ் நிநீ - ஸ்ம்க்ரீ - க்ம்ப்ம்க்ரீ - ஸ்ா - க்ாக்ரி ஸ்ா - நிஸ்க்ரிஸ்ா - நிதபா - பாபமபரி ஸ்ா - நிதபா - பாத நித நிபம - கமபமக ரிஸா - கமபபாமகரிஸா |
| இசை வடிவங்கள் | ▪ கீதம் - கமல சலோச்சன - ஆதி<br>▪ ஸ்வரஜதி - ராவேமேமகுவா - ஆதி - சோபநாத்ரி<br>▪ வர்ணம் - அம்பா நின்னை - ஆதி - கோமதி சங்கரய்யர்<br>▪ வர்ணம் - சாமினிரம்மனவே - அட - சியாமாசாஸ்திரி<br>▪ கிருதி - மரிவேறகதி - தி. சாபு - சியாமாசாஸ்திரி<br>▪ கிருதி - ஓஜகதம்பா - ஆதி - சியாமாசாஸ்திரி<br>▪ கிருதி - நிகே தெலியக - ஆதி - தியாகராஜர்<br>▪ கிருதி - மானஸ குருகுஹ - ரூபகம் - முத்தஸ்வாமி திட்சிதர் |

## 5.5 ஹிந்தோளம் – ஜன்னிய இராகம்

| | |
|---|---|
| மேள எண் | 20 |
| சங்கேதக் குறியீடு | ▪ தாய் இராகம் 20 ஆவது மேளமாகிய நடைபைரவியின் ஜன்னியம்<br>▪ இது ஒரு ஔடவ இராகம். ரி, ப வர்ஜ ஸ்வரங்கள். இது ஒரு உபாங்க இராகம். மத்திமம் அம்ஸ ஸவரம். மோகன இராகத்தின்காந்தார மூர்ச்சனையே ஹிந்தோளமாகும். |
| ஆரோஹணம்<br>அவரோஹணம் | ஆ: ஸகமதநிஸ்<br>அ: ஸ்நிதமகஸ |
| ஸ்வரஸ்தானங்கள் | ஸட்ஜம், சாதாரண காந்தாரம்,சுத்தமத்திமம், சுத்ததைவதம், கைசிகி நிஷாதம் |
| இரஞ்சகப் பிரயோகங்கள் | ▪ ம, த, நி ஜீவஸ்வரங்கள்<br>▪ த, நி நியாஸ் ஸ்வரங்கள்<br>▪ ஸ, ம, நி கிரகஸ்வரங்கள் |
| இதர அம்சங்கள் | ▪ ஸர்வஸ்வர மூர்ச்சனாகாரக ஜன்ய இராகம் ஹிந்தோளத்திலிருந்து கிரஹ பேதம் அடையக்கூடிய இராகங்கள் மோகனம், மத்தியமாவதி, சுத்தசாவேரி, உதயரவிச்சந்திரிகா.<br>▪ எப்பொழுதும் பாட ஏற்ற இராகம். பக்திச் சுவை உள்ள இராகம்.<br>▪ ஹிந்துஸ்தானி இசையில் இதற்கு மால்கௌஸ் என்று பெயர். ஓரளவுக்கு ஆலாபனை செய்ய ஏற்ற இராகம்.<br>▪ ராக தரங்கிணி, ஸ்வர மேளகலாநிதி, இராகதாள சிந்தாமணி, ராகதத்வவிபோதம் ஆகிய நூல்களில் இந்த இராகத்தைப் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| சஞ்சாரம் | மாகஸா - நிதநிஸாஸா - மகமாமா - மகம கமதநிதம - கமதநிஸ்நிஸ்ா - ம்க்ஸ்ா நிதநீ ஸ்ாநிதம கா, மதநி ஸ்ம்க்ஸ்ா ஸ்நிதமா கமதநிதநி ஸ்ா நிதமகஸா நி த நீஸா |
| இசை வடிவங்கள் | கிருதி - ஸாமஜவரகமன - ஆதி - தியாகராஜர்<br>கிருதி - கருணாலய நிதியே - ஆதி - வேதநாயகம் பிள்ளை<br>கிருதி - தில்லையில் ஆடும் - ஆதி - பெரியசாமித்தூரன்<br>கிருதி - நம்பிக் கெட்டவர் - ஆதி - பாபநாசம் சிவன்<br>கிருதி - மாரமணன் - ரூபகம் - பாபநாசம் சிவன்<br>கீர்த்தனை - இராமனுக்கு மன்னன் - ஆதி - அருணாச்சலக்கவிராயர் |

## 5.5 ஹம்சத்வனி – ஜன்னிய இராகம்

| | |
|---|---|
| மேள எண் | 29 |
| சங்கேதக் குறியீடு | தீரசங்கராபரணத்தின் ஜன்னியம் |
| ஆரோஹணம்<br>அவரோஹணம் | ஆ: ஸரிகபநிஸ்<br>அ: ஸ்நிபகரிஸ |
| ஸ்வரஸ்தானங்கள் | ஸட்ஜம், சதுஸ்ருதிரிஷபம்,அந்தரகாந்தாரம், பஞ்சமம், காகலிநிஷாதம் |
| இரஞ்சகப் பிரயோகங்கள் | ▪ ஜீவஸ்வரங்கள் - க, ரி<br>▪ நியாஸ ஸ்வரங்கள் - ஸ, ரி, க, ப, நி<br>▪ கிரகஸ்வரங்கள் - ஸ, க, ப |
| இதர அம்சங்கள் | ▪ அவரோகணத்திலும் ம, த வர்ஜ ஸ்வரம். ஔடவ இராகம். உபாங்க இராகம். திரிஸ்தாயி இராகம்.<br>▪ கச்சேரியின் ஆரம்பத்தில் பாட ஏற்ற இராகம். வீர ரசமான இராகம். கம்பீரம் நிறைந்த இராகம்.<br>▪ ஸர்வஸ்வர கமக வரிக ரக்தி இராகம். நீண்ட நேர ஆலாபனைக்கு இடம் கொடுக்கும் இராகம். மூர்ச்சனாகாரக இராகம். இதன் பஞ்சம மூர்ச்சனையே நாகஸ்வராவளி இராகம்.<br>▪ (28 இன் ஜன்யம் ஸகமபதஸ் - ஸ்தபகஸ) நிக்ரி நிரிநி - பநிரிநிப - கநிபகரி - ரிபகரிஸ போன்ற தாட்டுச் ஸ்வரக்கோர்வைகளும் ரிரிககபபநிநி - ககபபநிநிரிரி - பபநிநிரிரிக்க் போன்ற ஜண்டைச் ஸ்வரக் கோர்வைகளும் இந்த இராகத்துக்கு இனிமையைக் கொடுக்கின்றன.<br>▪ இந்த இராகத்தில் எல்லா வகையான உருப்படிகளும் உண்டு<br>▪ இசை நாடகம், நாட்டிய நாடகங்களில் உபயோகிக்கப்படும் இராகம் |
| சஞ்சாரம் | கபநிஸ்ாஸ் - பநிஸ்ரி ஸ்ா ஸ்நிபா - கபகநீபகரி - கபநிஸ்ா ஸ் -<br>பநிஸ்ரீரி - பநிஸ்ரி காக் ரி - பநிஸ்ரி க்ப்க்ா க்ரிஸ்ா<br>ஸ்நிபா - கபகநீபா - கநிபகா ரி - ரி ரி கப கா கரி - ஸாஸநி பா<br>க ப நி ஸரிஸா |
| இசை வடிவங்கள் | ▪ வர்ணம் - ஜலஜாஷா - ஆதி - மானம்புசாவடி வெங்கடசுப்பய்யர்<br>▪ வர்ணம் - ஆனைமாமுகனே - அட - கூரைநாடு நடேச பிள்ளை<br>▪ கிருதி - வாதாபிகணபதிம் - ஆதி - முத்துசுவாமிதீட்சிதர்<br>▪ கிருதி - விநாயகா நின்னு - ஆதி - வீணை குப்பய்யர்<br>▪ கிருதி - கஜவதனா - ஆதி - புரந்தரதாசர்<br>▪ கிருதி - வந்தேநிஸமகம் - ஆதி - வாசுதேவாச்சாரியார்<br>▪ கீர்த்தனை - மூலாதார மூர்த்தி - ஆதி - பாபநாசம் சிவன்<br>▪ கிருதி - வாரணமுகவா - ஆதி - கோடிஸ்வர ஐயர் |

## 5.6 ஆபோகி – ஜன்னிய இராகம்

| | |
|---|---|
| மேள எண் | 22 |
| சங்கேதக் குறியீடு | 22 வது மேளகர்த்தாவாகிய கரஹரப்பிரியா இராகத்தின் ஜன்யம். ஔடவ இராகம், உபாங்க இராகம் |
| ஆரோஹணம்<br>அவரோஹணம் | ஆ : ஸரிகமதஸ்<br>அ : ஸ்தமகரிஸ |
| ஸ்வரஸ்தானங்கள் | ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், சாதாரண காந்தாரம், சுத்த மத்யமம்,பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம் |
| இரஞ்சகப் பிரயோகங்கள் | ▪ ஜீவ ஸ்வரம் : க, ம, த<br>▪ நியாச ஸ்வரம் : ரி, ம, த<br>▪ கிரஹ ஸ்வரம் : ஸ, ரி<br>▪ |
| இதர அம்சங்கள் | ▪ மூர்ச்சனாகாரக இராகம். இதன் மத்யம மூர்ச்சனையே வலஜி (28) இராகமாகும். (ஸகபதநிஸ்<br>▪ ஸ்நிதபகஸ) நீண்ட ஆலாபனைக்கு இடம் கொடாத இராகம்.<br>▪ கரணைச் சுவை கொண்ட இராகம்.<br>▪ இது காலையில் பாடக்கூடிய இராகமாகும். பக்தி இரசம் பொருந்திய இராகம்.<br>▪ திரிஸ்தாயி இராகம். |
| சஞ்சாரம் | ஸரிக மாம - தமகமதா - தாஸ்ாஸ்ா - மதஸ்ா - ஸ்ர்ிர்ிஸ்தா - தஸ்ர்ிக்ர்ிர் - ஸ்ர்ிக்ம்ா - ம்க்க்ர்ி ர்ீஸ்ா - ர்ிக்ர்ிஸ்ா - தஸ்ததமா - கமதஸதமா - கமகரீ - ரிகரிஸாஸ - தாமா தாஸா |
| இசை வடிவங்கள் | ▪ வர்ணம் - எவரி போதன - ஆதி - பட்டணம் சுப்ரமணி அய்யர்<br>▪ வர்ணம் - மாயேமனமுவந்தருள் - அட - மாயூரம் விஸ்வநாத சாஸ்திரி<br>▪ கிருதி - மனஸுநில்பசக்தி - ஆதி - தியாகராஜர்<br>▪ கிருதி - நன்னுப்ரோவ - ஆதி - தியாகராஜர்<br>▪ கிருதி - சபாபதிக்கு - ரூபகம் - கோபாலகிருஸ்ண பாரதியார்<br>▪ கிருதி - செவிக்க வேண்டுமையா - ஆதி - முத்துத்தாண்டவர்<br>▪ கிருதி - மனசாவ்ருதா - ஆதி - பட்டணம் சுப்ரமணி அய்யர்<br>▪ கிருதி - ஆனை முகனே - மிஸ்ரசாபு - இராமசாமி சிவன்<br>▪ கிருதி - நானறியாதெனை - ஆதி - இலட்சுமணப் பிள்ளை |

## 5.7 ஸ்ரீரஞ்சனி – ஜன்னிய இராகம்

| | |
|---|---|
| மேள எண் | 22 வது மேளமாகிய கரஹரப்பிரியாவின் ஜன்யம் |
| சங்கேதக் குறியீடு | ஷாடவ இராகம், உபாங்க இராகம் |
| ஆரோஹணம்<br>அவரோஹணம் | ஆ : ஸரிகமதநிஸ்<br>ஆ : ஸ்நிதமகரிஸ |
| ஸ்வரஸ்தானங்கள் | ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், சாதாரண காந்தாரம், சுத்த மத்யமம், சதுஸ்ருதி தைவதம், கைசிகி நிஷாதம |
| இரஞ்சகப் பிரயோகங்கள் | ▪ ஜீவ ஸ்வரம் : ரி, க, த, நி<br>▪ நியாச ஸ்வரம் : ம<br>▪ கிரகஸ்வரம் : ஸ, ரி, ம, நி |
| இதர அம்சங்கள் | ▪ வர்ஜ இராகம். ஆரேகஹண அவரோஹணங்களில் பஞ்சமம் வர்ஜ ஸ்வரமாகும்.<br>▪ பூர்வாங்கமும், உத்தராங்கமும் ஒரே சீராய் அமைந்த இராகம்.<br>▪ பிரத்தியாகத கமகம் இந்த இராகத்திற்கு அழகைக் கொடுக்கின்றது.<br>▪ ரிகமரிகஸ - மரிகரிஸ - மநிதநிஸ் இவை விஷேசமான சஞ்சாரங்கள்<br>▪ பக்திச் சுவையை வெளிப்படுத்தும் இராகம். எந்நேரமும் பாடலாம்.<br>▪ கமக வரிக ரக்தி இராகம், திரிஸ்தாயி இராகம்.<br>▪ ஸ்ரீரஞ்சனி என்றால் திருமகள் நினைவுடன் மனதில் நிறைந்துள்ள சுகமான அனுபவம் என்று பொருள் |
| சஞ்சாரம் | ஸா, ரிகமா, ம ▪ மாமகரிகமா, ம ▪ கமதநிதமகரி ▪ கமதநிஸ்ா, ▪ ஸ் ▪ நிஸ்க்ரிஸ்ா நிஸ்க்ரி க்ம்க்ரி ஸ்ா ▪ ஸ்ா ஸ்நிதம கரி ▪ கமதநிஸ்ா, நிதமகரி ▪ கமநிநிதமகரி நிததமமககரிரிஸா ▪ நிநிதமதநிஸா |
| இசை வடிவங்கள் | 1. கிருதி - மாருபல்க - ஆதி - தியாகராஜர்<br>2. கிருதி - சொகசுகா மிருதங்க - ரூபகம் - தியாகராஜர்<br>3. கிருதி - பர்வத ராஜகுமாரி - ஆதி - முத்துஸ்வாமி தீட்சிதர்<br>4. கிருதி - கண்டவர் விண்டில் - மிஸ்ரசாபு - முத்துத்தாண்டவர்<br>5. கிருதி - காணவேண்டாமோ - மிஸ்ரசாபு - கோபாலகிருஷ்ண பாரதியார்<br>6. கிருதி - குஞ்சர முகனே - மட்டியம் - இராமஸ்வாமிசிவன்<br>7. கிருதி - உளம் அறியாத - ஆதி - கோடீஸ்வர ஐயர்.<br>8. கிருதி - கஜவதனா - ஆதி - பாபநாசம் சிவன் |



**பயிற்சி 5.1 – 5.7**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. திசி-ஶ்ரீ என அழைக்கப்படும் இராகம் எது?

.............................................................................................................

2. நடைபைரவியின் நேர்பிரதி மத்திம இராகம் எது?

.............................................................................................................

3. ஷண்முகப்பிரியா இராகத்தின் ஸ்வரஸ்தானங்கள் எவை ?

.............................................................................................................

4. ஸரிகிபதநி எனும் ஸ்வரஸ்தான சங்கேதம் யாது?

.............................................................................................................

5. ஷண்முகப்பிரியா இராகத்தின் ஜீவ,நியாச ஸ்வரங்கள் எவை?

.............................................................................................................

6. ஷண்முகப்பிரியா இராகத்தில் வெளிப்படுத்தப்படும் சுவை யாது?

.............................................................................................................

7. வள்ளிநாக எனும் ஷண்முகப்பிரியா இராக கிருதியின் ஆசிரியர் யார்?

.............................................................................................................

8. பவசாகர எனும் ஷண்முகப்பிரியா இராக கிருதியின் ஆசிரியர்,தாளம் என்பவற்றை தருக.

.............................................................................................................

9. வசந்தா இராகத்தின் தாய் இராகம் எது?

.............................................................................................................

10. வசந்தா இராகத்தின் ஆரொஹண அவரோஹங்களை தருக.

.............................................................................................................

11. வசந்தா இராகத்தின் ஸ்வரஸ்தானங்களை தருக.

.............................................................................................................

12. தனிமை வர்ணனை முதலிய அம்சங்களை வெளிப்படுத்தும் இராகம் எது?

.............................................................................................................

13. ஹாஸ்ய இரசத்திற்குறிய இராகம் எது ?

.............................................................................................................

14.சாவேரி இராகத்தின் தாய் இராகம் எது?

.............................................................................................................

15.பல்வலி சேஷய்யரால் 8 மணி நேரம் பாடப்பட்ட இராகம் எது?

.............................................................................................................

16.சாவேரி தைவதம் என அழைக்கப்படம் தைவதம் எது?

.............................................................................................................

17.மானேமோகம் எனும் சாவேரி இராக வர்ணத்தின் ஆசிரியர் யார்?

.............................................................................................................

18. சாவேரியின் ஆரோஹண அவரோஹணத்தை 28வது மளத்தில் கையாண்டால் கிடைக்கும் இராகம் எது?

……………………………………………………………………………………………………

19.சியாமாசாஸ்திரிகளின் சொத்து என சிறப்பு பெறும் இராகம் எது?

……………………………………………………………………………………………………

20.ஆரோஹண அவரோஹணங்களில் அன்னியஸ்வரங்களை சேர்த்து பாடப்படும் பாஷாங்க இராகம் ஒன்று தருக.

……………………………………………………………………………………………………

21.ஆனந்தபைரவி இராகத்தில் இடம்பெறும் விசேட அபூர்வ பிரயோகங்கள் எவை?

……………………………………………………………………………………………………

22.தாலாட்டு பாடல்கள்,ஊஞ்சல் பாடல்கள் பாடப்படும் பழமையான இராகம் எது?

……………………………………………………………………………………………………

23.மரிவேறகதி எனம் ஆனந்தபைரவி இராக கிரதியின் தாளம் எது?

……………………………………………………………………………………………………

24.ஹிந்துஸ்தானி மால்கௌஸ் என அழைக்கப்படும் இராகம் எது?

……………………………………………………………………………………………………

25.ஹிந்தோள இராகத்தின் தாய் அதன் மேள என் என்பவற்றை தருக.

……………………………………………………………………………………………………

26.மோகன காந்தர்வ மூர்ச்சைனையான இராகம் எது?

……………………………………………………………………………………………………

27.ஹிந்தோள இராகத்திலிருந்து கிரகபேதம் அடையக்கூடிய இராகங்கள் எவை?

……………………………………………………………………………………………………

28.ஹிந்தோள இராகத்தின் கிரகஸ்வரங்கள் எவை?

……………………………………………………………………………………………………

29.ஹிந்தோள இராகத்தின் சிறப்புபற்றி கூறிப்பட்டுள்ள நூல்கள் எவை?

……………………………………………………………………………………………………

30.ஹம்சத்வனி இராகத்தின் தாய் இராகம் எது?

……………………………………………………………………………………………………

31.இவ் ராகத்தின் ஆரோஹண அவரோஹணம்,ஸ்வரஸ்தானங்களை குறிப்பிடுக.

……………………………………………………………………………………………………

32.ஹம்சத்வனி இராகத்தின் பஞ்சம மூர்ச்சனையான இராகம் எது?

……………………………………………………………………………………………………

33.உரைநாடு நடேசபிள்ளை என்பவரால் இயற்றப்பட்ட வர்ணம் ஒன்றை தருக.

……………………………………………………………………………………………………

34.இவ்ராகத்தில் வெளிப்படுத்தப்படும் ரஸம் எது?

……………………………………………………………………………………………………

35. ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளால் பிரசித்திப்பெற்ற திரிஸ்தாயி இராகம் 1 தருக.

……………………………………………………………………………………………………

36. ஆபோகியின் மத்திம மூர்ச்சனையான இராகம் எது?

……………………………………………………………………………………………………

37. ஆபோகி இராகம் பாட ஏற்ற காலம் எது?

..............................................................................................................

38. ஆபோகி இராகத்தில் அமைந்த தாண வர்ணங்கள் 2 தருக.

..............................................................................................................

39. ஆபோகி இராகத்தின் ஆரோஹண அவரோஹணத்தை குறிப்பிடுக.

..............................................................................................................

40. 22வது மேளமாகிய கரகரப்பிரியாவின் ஜன்னியமான பஞ்சம வர்ஜ இராகம் எது?

..............................................................................................................

41. ஸ்ரீரஞ்சனி என்பதன் பொருள் யாது?

..............................................................................................................

42. குஞ்சரமுகனே எனும் ஸ்ரீரஞ்சனி இராக கிருதியின் ஆசிரியர் யார்?

..............................................................................................................

43. ஸ்ரீரஞ்சனி இராகத்தின் ஸ்வர்தானங்கள் எவை?

..............................................................................................................

44. ஸ்ரீரஞ்சனி இராக ஜீவ,நியாச,கிரகஸ்வரங்களை தருக.

..............................................................................................................

## 06. கிருதிகளை அலங்கரிக்கும் அணிகள்

- கிருதிகளையும் கீர்த்தனைகளையும் அலங்கரிக்க பயன்பட்ட அணிகளாகும்
- கிருதிகளை அலங்கரிக்கும் அணிகள் பிரதானமாக மூன்று வகைப்படும்.
  1. தாது அல்லது இசை சம்பந்தமான அணிகள்
  2. மாது அல்லது ஸாஹித்தியம் சம்பந்தமானவை
  3. தாது-மாது சம்பந்தமானவை

### 6.1 தாது சம்பந்தமான அணிகள்

1. சிட்டைஸ்வரம்
2. ஸ்வர ஸாஹித்தியம்
3. சொற்கட்டு ஸ்வரம்
4. சொற்கட்டு ஸாஹித்தியம்
5. மகுட ஸாஹித்தியம்
6. ஸங்கதி

- **சிட்டைஸ்வரம்** - இசைப்புலவர்களால் இராகபாவம் ததும்பும்படி உருப்படியின் நடையை அனுசரித்து இயற்றப்பட்ட ஸ்வர ஸஞ்சாரமாகும்.
  1. கிருதியில் சமகாலத்தில் அமைந்த சிட்டைஸ்வரம்

     உதாரணம் : பாஹிமாம் ஸ்ரீ - ஜனரஞ்சனி – மகா வைத்தியநாத ஐயர்
  2. கிருதியில் மத்திம காலத்தில் அமைந்த சிட்டைஸ்வரம்

     உதாரணம் : நீதிமதி சல்லக – ஆனந்தபைரவி

3. மகுடத்துடன் முடிக்கப்பபட்டிருக்கும் சிட்டைஸ்வரம்

உதாரணம் : ப்ரோசேவாரெவருரா – கமாஸ்

4. அனுலோம விலோமக் கிரமமாக அமைந்திருக்கும் சிட்டைஸ்வரம்

உதாரணம் : நீதிமதி சல்லக – ஆனந்தபைரவி

❖ **ஸ்வர ஸாஹித்தியம்** - சிட்டைஸ்வரத்திற்கு சாஹித்தியம் அமைக்கப்பட்டிருத்தல்

❖ ஸ்வர பாகம் அனுபல்லவிக்கு பின்னும் அதன் ஸாகித்தியத்தை சரணத்தின் பின்னும் பாடப்படும்.

உதாரணம் : ஜெகதீஸ்வரி – மோகனம்

ஸ்ரீ பார்த்தஸாரதே – பைரவி

❖ **சொற்கட்டு ஸ்வரம்** - சிட்டைஸ்வரத்தின் இடையிடையே சொற்கட்டுக்கள் (ஜதிகள்) இசைக்கப்படுதல்

உதாரணம் : ஆனந்தநடனப்பிரகாசம் - கேதாரம் - முத்துஸ்வாமி தீட்சதர்

ஆனந்தநடனமாடுவார் - பூர்விகல்யாணி – நீலகண்டசிவன்

ஸ்ரீமகா கணபதி – கௌளை - முத்துஸ்வாமி தீட்சதர்

❖ நர்த்தன சம்பந்தமுள்ள தெய்வங்களின் உருப்படிகளில் சொற்கட்டு ஸ்வரங்களை காணலாம்.

❖ **சொற்கட்டு ஸாஹித்தியம்** - ஸாஹித்தியத்தின் நடுவே சொற்கட்டுகள் வருதல்

❖ சொற்கட்டு ஸாஹித்தியம் இரு வகைப்படும்

1. சொற்கட்டுக்கள் சொல்லணியாக மட்டும் வருதல்

உதாரணம் : நடனம் செய்யும் பாதனார் - கேதாரகௌளை - இராமஸ்வாமி சிவன் - 'தமி தாம் ததிங்கிணதோமென்று' வருதல்

2. சொற்கட்டுக்கள் சொல்லணியாகவும் பொருளணியாகவும்,சிலேடையாகவும் வருதல்

உதாரணம் : ஆடியபாதா – சங்கராபரணம் - கோபாலகிருஷ்ண பாரதியாரின் கிருதியில் "தந்தோம்" என்ற பதம் சொற்கட்டாகவும்,கொடுத்தோம் என்ற பொருளிலும் வரல்

❖ **மகுட ஸாஹித்தியம்** - மகுடஸ்வரத்திற்கு ஸாகித்தியம் அமைக்கப்பட்டிருத்தல்

உதாரணம் : பன்னகாத்ரீச - இராகமாலிகை

❖ **ஸங்கதி** - இசையணிகளில் மிகச்சிறந்த அணி

❖ ஸங்கதிகள் இரு வகைப்படும்

1. இராகபாவத்தை விளக்குவது

உதாரணம் : நாஜீவாதார – பிலஹரி – தியாகராஜ சுவாமிகள்

பவனுத – மோகனம் - தியாகராஜ சுவாமிகள்

2. ஸாஹித்தியத்தின் உட்கருத்துக்களை விளக்குவது

உதாரணம் : மாருபல்க - ஸ்ரீரஞ்சனி - தியாகராஜ சுவாமிகள்

## 6.2 மாது சம்பந்தமான அணிகள்

1. அனுபிராசம்
2. அந்நியபிராசம்
3. யமகம்/மடக்கு
4. ஸாஹித்தியம்

❖ **அனுபிராசம்** - இடையழகு எனப்படும்.

உதாரணம் : எதுட நிலச்சிதே – சங்கராபரணம் - தியாகராஜர்

❖ **அந்நியபிராசம்** - முடிவழகு எனப்படும்.

உதாரணம் : கருணா சாகரா – அடாணா – மாயூரம் வேதநாயகம் பிள்ளை

❖ **யமகம்** - ஒரு பாடலில் ஒரு சொல் ஒன்றுக்கு மேற்பட்ட பொருளுடன் பயன்னடுவது

உதாரணம் : தெலிசிராம –பூர்ணசந்திரிகா - தியாகராஜ சுவாமிகள்

கமலாம்பாம் பஜரே – கல்யாணி – முத்துஸ்வாமி தீட்சிதர்

❖ **மணிப்பிரவாளம்** - கிருதியின் சாஹித்தியத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் கலந்து வருதல்

உதாரணம் : நீஸரிஸமான – பைரவி – (தமிழ்,தெலுங்கு)

வெங்கடாசலபதே – காபி - முத்துஸ்வாமி தீட்சிதர் - (தமிழ்,தெலுங்கு,சமஸ்க்ருதம்)

## 6.3 தாது - மாது சம்பந்தமான அணிகள்

1. மத்தியமகால ஸாஹித்தியம்
2. ஸ்வராட்சரம்

❖ **மத்தியமகால ஸாஹித்தியம்** - கிருதியின் அங்கத்தில் ஏதேனும் ஒரு இடத்தில் நடை மாற்றம் ஏற்படுவது

உதாரணம் :

- ஸ்ரீ ஸரஸ்வதி – ஆரபி - ரூபகம் - முத்துஸ்வாமி தீட்சிதர்(பல்லவியில் மத்தியமகால ஸாஹித்தியம்)
- ஆடிக்கொண்டார் - மாயாமாளவகௌளை – ஆதி – முத்துத்தாண்டவர் - (சரணத்தில் மத்தியமகால ஸாஹித்தியம்)

❖ **ஸ்வராட்சரம்** - எந்த இடத்தில் ஸ்வரமும் அதே அட்சரம் ஸாகித்தியத்திலும் வருவது

உதாரணம் : நவராகமாலிகை வர்ணம் -

ஸ்வரம் - பதஸ்ா ஸ்நிதா தநிபா

ஸாஹித்தியம் - பதஸ ரோ. . . . ஜ

**பயிற்சி 6.1 - 6.3**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக**

1. கிருதிகளை அலங்கரிக்கும் அணிகள் எத்தனை வகைப்படும் ? அவற்றை தருக

..........................................................................................................

2. தாது சம்பந்தமான அணிகள் எவை?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

3. மாது சம்பந்தமான அணிகள் எவை?

……………………………………………………………………………………………………

4. தாது-மாது சம்பந்தமான அணிகள் எவை?

……………………………………………………………………………………………………

5. சிட்டைஸ்வரம் எத்தனை முறைகளில் அமைந்துள்ளது?அவற்றைக் குறிப்பிடுக

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

6. ஸ்வரஸாஹித்தியம் என்றால் என்ன? உதாரணம் தருக.

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

7. சொற்கட்டு சாஹித்தியம் என்றால் என்ன? உதாரணம் தருக.

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

8. சொற்கட்டு சாஹித்தியம் எத்தனை வகைப்படும்? அவற்றைத் தருக.

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

9. மாது சம்பந்தமான அணிகளைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………………………………

10. இடையழகு எனப்படுவது எது?

……………………………………………………………………………………………………

11. முடிவழகு எனப்படுவது எது?

……………………………………………………………………………………………………

12. யமகம் வேறு எப்பெயரால் அழைக்கப்படும்?

……………………………………………………………………………………………………

13. மணிப்பிரவாளம் என்றால் என்ன?

……………………………………………………………………………………………………

14. மத்தியமகால ஸாஹித்தியம் என்றால் என்ன?

……………………………………………………………………………………………………

15. கீழே தரப்பட்டுள்ள கிருதிகளில் இடம்பெறும் அணிகளைக் குறிப்பிடுக.

i. பாஹஜமாம் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி……………………………………………………..

ii. நீதிமதி சல்லக……………………………………………………………………………

iii. ஜெகதீஸ்வரி…………………………………………………………………………

iv. ஆனந்த நடமாடுவார்…………………………………………………………………

v. மாருபல்க ……………………………………………………………………………..

vi. கமலாம்பஜரே…………………………………………………………………………

vii. நீஸரிஸமான ……………………………………………………………………………

viii. ஆடிக்கொண்டார்………………………………………………………………………

## 07. இராகத்தின் பத்து இலட்சணங்கள்

❖ இராகத்தின் பத்து இலட்சணங்களாவன
கிரகம்,அம்சம்,நியாசம்,மந்தரம்,தாரம்,அபன்னியாசம்,சன்னியாசம்,வின்னியாசம்,அல்பத்துவம்,பகுத்துவம்

1. **கிரகம்** - இராகத்திலோ அதில் வரும் சங்கதியிலோ தொடக்கமாக வரும் ஸ்வரம்
   உதாரணம் : ஆனந்த பைரவியில் பஞ்சமம் கிரகஸ்வரம்
2. **அம்சம்** - இராகத்திலாவது சங்கதியிலாவது இராக சொரூபத்தை காட்டும்படியாக அடிக்கடி பயன்படும் ஸ்வரம்.உதாரணம் : மோகன இராகத்தின் க,ப,த
3. **நியாசம் -** இராகத்திலோ சங்கதியிலோ வரும் முடிவுஸ்வரம்
   உதாரணம் : சங்கராபரணத்தின் ரி,ப
4. **மந்தரம்** - கீழ்ஸ்தாயி ஸ்வரங்களைக் கொண்டு ஆலாபனை செய்வது
   உதாரணம் : ஸநிதப
5. **தாரம்** - இராக ஆலாபனையின் போது தாரஸ்தாயில் வரக்கூடிய ஸ்வரம்
   உதாரணம் : ஸ்ரிக்ம்
6. **அபன்னியாசம்** - இராகத்தில் இடையிடையே முடியும் ஸ்வரம்
7. **சன்னியாசம் -** இராகத்தை பல பாகங்களாக பிரித்து ஆலாபனை செய்யும் போது அந்தப் பகுதிகளில் முடியும் ஸ்வரம்
8. **வின்னியாசம் -** ராகத்தை பல பாகங்களாக பிரித்து ஆலாபனை செய்யும் போது அப்பாகங்களில் இராகத்தின் விளக்கம் அடிக்கடி வரும்படி பாடப்படும் ஸ்வரம்
9. **அல்பத்துவம் -** இராகத்தில் அல்பமாக அதாவது ஏதேனும் ஒருசில சமயம் பிரயோகிக்கப்படும் ஸ்வரம். உதாரணம் : ஸ்ரீ இராகத்தில் வரும் தைவதம்

❖ அல்பத்துவம் இருவகைப்படும்

1. அனப்யாசம் - ஒரு ஸ்வரத்தை ஏதாவது ஒரு தடைவ உச்சரிப்பது
2. லங்கனம் - ஒரு ஸ்வரத்தை சொல்லி அடுத்த ஸ்லரத்தை விட்டு அதற்கு அடுத்தஸ்வரத்தை சொல்வது

10. **பகுத்துவம்** - ஒரு இராகத்தில் பல தடவை உச்சரிக்கும் ஸ்வரம்

❖ பகுத்துவம் இரு வகைப்படும்

1. அப்பியாசம் - ஒரு ஸ்வரத்தை இடைவிடாமல் சொல்வது
2. அலங்கனம் - எப்பொழுதும் விடாது பாடப்படும் ஸ்வரம்

**பயிற்சி 7.1**

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. இராகத்தின் பத்து இலட்சணங்களும் எவை?
   ……………………………………………………………………………………………
2. கிரகஸ்வரம் என்றால் என்ன?

........................................................................................................................

3. மோகன இராகத்தின் ஜீவஸ்வரங்கள் எவை?

........................................................................................................................

4. மந்தரம்,தாரம் என்பவற்றை விளக்குக.

........................................................................................................................

........................................................................................................................

5. அல்பத்துவம் என்றால் என்ன? அதன் பிரிவுகளை குறிப்பிடுக

........................................................................................................................

........................................................................................................................

6. ஸ்ரீ இராகத்தின் அல்பஸ்வரம் எது?

........................................................................................................................

7. அல்பத்துவம் என்றால் என்ன?

........................................................................................................................

8. ஒரு ஸ்வரத்தை இடைவிடாமல் பாடுவது எவ்வாறு அழைக்கப்படும்?

........................................................................................................................

## 08. இசைக்கருவிகளின் பிரிவுகள்

❖ இசைக்கருவிகளை சாஸ்திரிய முறையில் முதன் முதலில் வகுத்தவர்கள் இந்தியர்கள்

❖ பரதர் தனது நாட்டிய சாஸ்திரம் எனும் நூலில் கூறியுள்ள பிரிவையே உலகமெங்கும் ஒப்புக்கொண்டுள்ளரர்கள்.

❖ நாதம் உற்பத்தியாகும் முறையைக் கொண்டு இசைக்கருவிகளை 4 வகையாகப் பிரிக்கலாம்.

1. தத (நரம்புக்கருவி) – யாழ்,தம்புரா,வீணை,வயலின்,கோட்டு வாத்தியம்,மாண்டலின்
2. ஸுஷிர (துளைக்கருவி) – புல்லாங்குழல்,நாதஸ்வரம்,கிளாரிநெட்,
3. அவனத்த (தோற்கருவி) – மிருதங்கம்,தவில்,கஞ்சிரா
4. கன (கஞ்சற்கருவி) – ஜால்ரா,குழித்தாளம்,ஜலதரங்கம்,

❖ ஸ்தாயி எல்லையைக் கொண்டு இசைக்கருவிகளை 8 வகையாக பிரிக்கலாம்.

1. அரை ஸ்தாயி வாத்தியம்
2. ஒரு ஸ்தாயி வாத்தியம்
3. ஒன்றரை ஸ்தாயி வாத்தியம்
4. இரண்டு ஸ்தாயி வாத்தியம்
5. இரண்டரை ஸ்தாயி வாத்தியம்
6. மூன்று ஸ்தாயி வாத்தியம்
7. மூன்றரை ஸ்தாயி வாத்தியம்
8. நான்கு ஸ்தாயி வாத்தியம்

❖ பியானோ,ஓர்கன்,ஹார்ப் போன்ற வாத்தியங்களை ஏழரை ஸ்தாயி வரை வாசிக்கலாம்.

❖ **ஏகத்வனி வாத்தியம்** - ஒரு தருணத்தில் ஒரு ஸ்வரத்தை வாசிக்கக் கூடிய வாத்தியம்

உதாரணம் : புல்லாங்குழல்,நாதஸ்வரம்

❖ **பஹுத்வனி வாத்தியம்** - ஒரே தருணத்தில் இரண்டு,மூன்று ஸ்வரங்களை வாசிக்கலாம்

உதாரணம் : வீணை,கோட்டு வாத்தியம்

❖ **ஸகல வாத்தியம்** - சுருதியும் கூட ஒலிப்பதற்கு வசதியுள்ள வாத்தியம்

உதாரணம் : வீணை,கோட்டு வாத்தியம்

❖ **நிஷ்கள வாத்தியம்** - சுருதியும் கூட ஒலிப்பதற்கு வசதியில்லாத வாத்தியம்

உதாரணம் : பிடில்,புல்லாங்குழல்

❖ **சுருதி கூட்டுவதற்கு வசதியுள்ள வாத்தியம்**

உதாரணம் : தந்தி வாத்தியங்கள்

❖ **சுருதி நிர்ணயிக்கப்பட்ட வாத்தியங்கள்**

உதாரணம் : குழல்,கடம்

❖ இசைக்கருவிகளின் உபயோகங்களைக் கொண்டு பின்வருமாறு பிரிக்கலாம்

1. சுருதி வாத்தியம் - சுருதிக்காக மட்டும் பயன்படுத்தப்படும் வத்தியம்

   உதாரணம் : தம்புரா,ஏக்தார்,தோதார்,துந்தினா

2. லய வாத்தியம் - தாளத்திற்காகப் பயன்படுத்தப்படும் வாத்தியம்

   உதாரணம் : மிருதங்கம்,கஞ்சிரா,கடம்

3. சங்கீத வாத்தியம் /கான வாத்தியம் - உருப்படிகள்,ஆலாபனைகள் வாசிப்பகேற்றது

   உதாரணம் : வீணை,கோட்டு வாத்தியம்,குழல்,நாதஸ்வரம்

4. ஸாதக வாத்தியம் - அப்பியாசத்திற்காக மட்டும் பயன்படுத்தப்படும் வாத்தியம்

   உதாரணம் : பாட கட்டை

❖ **பிரதான வாத்தியம்/அயன் வாத்தியம்**

உதாரணம் : வீணை,கோட்டு வாத்தியம்,குழல்

❖ **பக்க வாத்தியம்** - பாடகர்,அயன் வாத்தியகாரர்களுக்கும் அனுசரனையாக வாசிக்கப்படுவது

உதாரணம் : பிடில்,குழல்,ஸிதார்

❖ **ஸ்திர வாத்தியம்** - ஒரே இடத்தில் வைக்கப்பட்டு வாசிக்கப்படுவது

உதாரணம் : ஓர்கன்,பியானோ

❖ **சர வாத்தியம்** - வெவ்வேறு இடங்களுக்கு எடுத்துச்சென்று வாசிக்கக்கூடியது

உதாரணம் : வீணை,பிடில் புல்லாங்குழல்

❖ **கச்சேரி வாத்தியம்** - சபைகளில் பயன்படுத்தப்படும் வாத்தியம்

உதாரணம் : வீணை,குழல்,மிருதங்கம்,பிடில்

❖ **தேவாலய வாத்தியம்** - ஆலயங்களில் பயன்படுத்தப்படும் வாத்தியம்

உதாரணம் : குடமுழா,திருச்சின்னம்,சங்கு,பஞ்சமுக வாத்தியம்,சுத்த மத்தளம்

❖ **யுத்தகளத்தில் பயன்படுத்தப்படும் வாத்தியம்**

உதாரணம் : ரணபேரி,ரணதுந்தி,வீரமுரசு,வெற்றி முரசு,சங்கு

❖ **பாமர ஜனகான வாத்தியம்**

உதாரணம் : தந்திபானை,கும்மடி,வில்லடி

❖ **விளம்பர வாத்தியம்** - உதாரணம் : தமுக்கு

❖ **பிரதான தாள வாத்தியம்** - கச்சேரிகளில் இன்றியமையாதது

உதாரணம் : மிருதங்கம்,தபேலா

**உப தாள வாத்தியம்** - உதாரணம் :கெஞ்சிரா,கடம்,முகர்சிங்

**பயிற்சி 8.1**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. இசைக்கருவிகளை சாஸ்திரிய முறையில் வகுத்தவர்கள் யார்?

   ……………………………………………………………………………………………..
2. கிரகஸ்வரம் என்றால் என்ன?

   ……………………………………………………………………………………………..
3. நாதம் உற்பத்திளாகும் முறையைக் கொண்டு இசைக்கருவிகளை எத்தனையாக பிரிக்கலாம்?அவை எவை

   ……………………………………………………………………………………………..
4. ஸ்தாயி எல்லையைக் கொண்டு இசைக்கருவிகளை வகைப்படுத்துக.

   ……………………………………………………………………………………………..
5. ஏகத்வனி வாத்தியம் என்றால் என்ன?உதாரணம் தருக.

   ……………………………………………………………………………………………..
6. பஹுத்வனி வாத்தியம் என்றால் என்ன?
7. ……………………………………………………………………………………………..
8. சகல வாத்தியத்திற்கு உதாரணம் 2 தருக.

   ……………………………………………………………………………………………..
9. சுருதியும் கூட ஒலிப்பதற்கு வசதியில்லாத வாத்தியம் எது?

   ……………………………………………………………………………………………..
10. சுருதி நிர்ணயிக்கப்பட்ட வாத்தியம் எது?

    ……………………………………………………………………………………………..
11. லய வாத்தியத்தின் மறுப்பெயர் என்ன?
12. ……………………………………………………………………………………………..
13. கான வாத்தியத்தின் மறுப்பெயர் என்ன?

    ……………………………………………………………………………………………..
14. அயன் வாத்தியம் என்றால் என்ன?

    ……………………………………………………………………………………………..
15. ஒரே இடத்தில் வைக்கப்பட்டு வாசிக்கப்படும் வாத்தியம் எது?

    ……………………………………………………………………………………………..
16. தேவாலய வாத்தியங்களை தருக.

    ……………………………………………………………………………………………..
17. யுத்தகள வாத்தியங்கள் எவை?

    ……………………………………………………………………………………………..
18. தமுக்கு எதற்காக பயன்படுத்தப்படுகிறது?

……………………………………………………………………………………………..

19. தந்திப்பானை கும்மடி வாத்தியங்களை எந்த கானத்தில் பயன்படுத்தப்படும்?

……………………………………………………………………………………………..

20. பிரதான தாள வாத்தியங்களை தருக.

……………………………………………………………………………………………..

21. உப தாள வாத்தியங்களை தருக.

……………………………………………………………………………………………..

# 09. இசைக்கருவிகள்

## 9.1 கடம்

- வாய்ப்பாட்டிற்கும் வீணைக்கும் வாசிக்கப்படும் துணைத்தாள வாத்தியம்.
- குறுகிய வாயையுடைய மட்குடம் ஒன்றை விஷேடமான முறையில் தயாரிப்பதன் மூலம் உருவாகின்றது.
- இரும்பு,செம்பு ஒருவகைச் சிறப்புக் களிமண் ஆகிய மூன்றையும் கலந்து சூளையில் வைத்து குறிப்பிட்ட பதத்தில் உருவாக்கப்படுகிறது.
- கடம் சுருதி நிர்ணயிக்கப்பட்ட வாத்தியமாகும்.
- கடம் வாசிப்போர் அதன் வாயை தம் வயிற்றுடன் அனைத்துக்கொண்டு மேற்பரப்பை தம் இரு கைகளாலும் மிருதங்கம் வாசிப்பதை போல் தட்டுவர்.
- இரு கைகளும் கை விரல்களும்,நகங்களும்,மணிக்கட்டுகளும் வாசிக்க பயன்படுகிறது.
- வட இந்தியாவில் கடா என அழைக்கப்படுகிறது.
- நாடோடி இசைக்கும் இவ்வாத்தியம் பயன்படுகிறது.
- தென் இந்தியாவில் பண்ருட்டி,மானா மதுரை போன்ற இடங்களில் செய்யப்படுகிறது.
- கடம் வாசிப்பதில் பிரபல்யமானவர்கள் விநாயகராம்,பழனி கிருஷ்ணய்யர்






**பயிற்சி 9.1**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. வாய்ப்பாட்டிற்கும் வீணைக்கும் வாசிக்கப்டும் துணைத்தாள வாத்தியம் எது?

   ……………………………………………………………………………………………..

2. கடம் தயாரிக்க பயன்படுத்தப்படும் பொருட்கள் எவை ?

   ……………………………………………………………………………………………..

3. கடா என இவ் வாத்தியத்தை அழைப்பவர் யார்?

   ……………………………………………………………………………………………..

4. கடத்தை எவ்வாறு வாசிக்க வேண்டும்?

   ……………………………………………………………………………………………..

5. இக்கருவி செய்யப்படும் இடங்கள் எவை?

   ……………………………………………………………………………………………..

6. கடம் வாசிப்பதில் பிரபல்யமானவர்களை தருக.

   ……………………………………………………………………………………………..

7. கடத்தின் படத்தினை வரைந்து பாகம் குறிப்பிடுக.

   ……………………………………………………………………………………………..

## 9.2 கெஞ்சிரா

- இக்கருவி பண்டைக்காலத்தில் ஜல்லரி, சல்லரி எனவும் வட இந்தியாவில் கஞ்சரி எனவும் அழைக்கப்பட்டது.
- 6" விட்டமும் 1/2" கனமும் கொண்டமைந்த கட்டையின் ஒரு பக்கத்தில் உடும்புத் தோல் ஒட்டப்பட்டதாக அமைந்த கருவியாகும்.
- இக்கட்டையில ஒரு பகுதியில் இரண்டு செப்புக் காசுகள் பொருத்தப்பட்டிருக்கும்.
- இடது கையினால் பிடித்துக்கொண்டு வலது கையினால் வாசிப்பர்.
- சுருதி சேர்ப்பதற்கு உரிய வசதியற்ற வாத்தியமாகும்.
- இருப்பினும் தண்ணீரினால் தோலை இளகச் செய்துஆதார ஸட்ஜ, பஞ்சமத் தோடு சேர்ந்து வாசிக்கும்போது மிகவும் இனிமையாக இருக்கும்.
- பாட்டுக் கச்சேரிகளிலும் தாள வாத்தியக் கச்சேரிகளிலும் மிருதங்கத்துடன்துணையாக வாசிக்கப்படுகிறது.
- இக்கருவி மான்பூண்டியா பிள்ளை அவர்களாலும்புதுக்கோட்டை தட்சணா மூர்த்திப்பிள்ளை அவர்களாலும், ஹரிஸங்கர் அவர்களாலும் பிரச்சித்தமானது.
- தற்போது புருஷோத்தமன், செந்தில் குமார், ஆத்ரேயா போன்ற இளம்வித்வான்களும் இதனை மெருகூட்டி வாசித்து வருகிறார்கள்.
- கெஞ்சிரா கலைஞர்கள்:
  1. பழனி சுப்பிரமணிய பிள்ளை
  2. சேவுக பாண்டிய தேவர்
  3. பாலக்காடு T.S. மணி ஐயர்.








**பயிற்சி 9.2**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. பண்டைய காலத்தில் ஜல்லரி,சல்லரி என அழைக்கப்பட்ட வாத்தியம் எது?

   ……………………………………………………………………………………………..

2. வட இந்தியாவில் இதனை எவ்வாறு அழைப்பர்?

   ……………………………………………………………………………………………..

3. கெஞ்சிராவில் பயன்படுத்தப்படும் கட்டையின் அளவு என்ன?

   ……………………………………………………………………………………………..

4. இவ்வாத்தியத்துக்கு பயன்படுத்தப்படும் தோல் எது?

   ……………………………………………………………………………………………..

5. இவ்வாத்தியத்தில் தேர்ச்சிப் பெற்றவர்களைத் தருக.

   ……………………………………………………………………………………………..

6. கெஞ்சிராவின் படத்தினை வரைந்து பாகத்தை குறிப்பிடுக.

   ……………………………………………………………………………………………..

## 9.3 முகர்சிங்

- இது ஒரு தாளவாத்தியமாகும்.
- இவ் வாத்தியம் கைவிளக்கு (அகல்) வடிவை ஒத்ததாக இருக்கும்.
- வளைக்கப்பட்ட உலோக வளையத்தின் நடுப்பாகத்தே, வளையக்கூடிய தன்மை பொருந்தியமெல்லியதான உருக்கினாலான தகட்டினைப் பொருத்தப்பட்டு அமைந்த கருவியாகும்.

- இத்தகடு ஒரு புறம் வளையத்தில் நிரந்தரமாகப் பொருத்தப்பட்டும், மறுபுறம் இடையில் அதிரக்கூடியதாகவும் அமைந்திருக்கும்.
- இதனைக் கையினால் வளைவான பகுதியைச் சேர்த்துப் பிடித்துக்கொண்டு நடுத்தகட்டில் வளைந்த நுனியை வலது கை ஆள்காட்டிவிரலினால் மீட்டி வாசிப்பர்.
- இது ஏழு அல்லது எட்டு சென்றி மீட்டர் (CM) நீளம் உடையது.
- இக்கருவியை வாசிப்பவருடைய வாயின் உட்பகுதியே ஒலி பெருக்கியாக அமைகிறது.
- ஜதிச் சொற்களைச் சொல்வதில் திறமையுள்ளவர் சிறந்தமுறையில் சரியாகத் தொகுத்து இக்கருவியை இசைக்க முடியும்.
- அதிரும் தகட்டின் வளைந்த நுனிப்பகுதியில்சிறிதளவு மெழுகை வைத்துத் தேவையான சுருதியை ஆக்கிக்கொள்ள முடியும்.
- ‘‘அலகுயாழ்”என்ற பெயரும் இவ்வாத்தியத்திற்கு உண்டு.
- ஆதிச்சபுரம் முகர்சிங் சீதாராமையர் இக்கருவியைவாசிப்பதில் திறமைமிக்கவர்.
- மன்னார் குடி நடேசபிள்ளை அவர்களும், புதுக்கோட்டைமகாதேவ ஐயர் அவர்களும், மைசூர் ஆஸ்தான வித்துவான் ஸ்ரீ சீதாராமையர் அவர்களும்இவ்வாத்தியத்தை வாசிப்பதில் பிரபல்யமானவர்கள்.






**பயிற்சி 9.3**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. இவாத்தியத்தின் வடிவம் எவ்வாறு காணப்படும்

   ………………………………………………………………………………………….

2. இதன் நீளம் எவ்வளவு?

   ………………………………………………………………………………………….

3. முகர்சிங் வாத்தியம் எவ்வகையானது?

   ………………………………………………………………………………………….

4. இவ்வாத்தியத்தின் அமைப்பினை விளக்குக.

   ………………………………………………………………………………………….

5. முகர்சிங் வாத்தியம் எவ்வாறு வாசிக்கப்படும்

   ………………………………………………………………………………………….

6. முகர்சிங் வாத்திய இசையின் ஒலிபெருக்கியாக அமையும் பகுதி யாது?

………………………………………………………………………………………………..

7. அழகுயாழ் என அழைக்கப்படும் வாத்தியம் எது?

………………………………………………………………………………………………..

8. இவ்வாத்தியம் வாசிப்பதில் திறமைமிக்க கலைஞர் யார்?

………………………………………………………………………………………………..

9. இவ்வாத்தியத்தை வாசிக்கும் கலைஞர்கள் நால்வரின் பெயர்களைத் தருக.

………………………………………………………………………………………………..

10. முகர்சிங் வாபத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களை குறிப்பிடுக.

………………………………………………………………………………………………..


## 9.4 கோட்டு வாத்தியம்

- வீணையைப் போன்ற ஒரு நரம்புக் கருவியாகும்.
- வீணையிலுள்ள மெழுகுகமும் மெட்டுக்களும் இதில் இல்லை.
- கோடு என்றால் ஒரு மரப்பூச்சி.
- கோடினை கொண்டு வாசிப்பதால் கோட்டு வாத்தியம் என அழைக்கப்படும்.
- இதற்கு மகாநாடக வீணை என்று பெயருண்டு.
- ஏறக்குறைய 4 நூற்றாண்டுகளுக்கு முன் இக்கருவி தென்னிந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டது.
- இதன் பாகங்கள் பலா மரத்தினால் செய்யப்பட்ட குடம்,குதிரை,தண்டி,5பாட்டுதந்திகள்,3தாள சுருதி தந்திகள்,யாழிமுகம்,சுரைக்காய்
- **5பாட்டுத் தந்திகளும் முறையே**
    1. 2 சாரணி தந்திகள் ( மத்தியஸ்தாயி ஸட்ஜம்) ஸஸ
    2. பஞ்சம தந்தி ( மந்திரஸ்தாயி பஞ்சமம்) ப
    3. மந்தர ஸட்ஜம் ( மந்திரஸ்தாயி ஸட்ஜம்) ஸ
    4. அனுமந்தர பஞ்சமம் ( அனுமந்திரஸ்தாயி பஞ்சமம்) ப



- **தாள சுருதித்தந்திகள்**
    1. பக்கசாரணி ( மத்தியஸ்தாயி ஸட்ஜம்) ஸ
    2. பக்க பஞ்சமம் ( மத்தியஸ்தாயி பஞ்சமம்) ப
    3. ஹெச்சு சாரணி ( தாரஸ்தாயி ஜட்ஜம்) ஸ்
- இவற்றைத் தவிர பாட்டுத்தந்திகளுக்கடியில் தண்டியின் மேலே 7 /12 பரிவு நாத தந்திகள் காணப்படும்.
- ஹரிகாம்போதி இராகத்தின் ஸ்வரங்களுக் சுருதி கூட்டப்படும்.
- வாசிப்பவருக்கு வலது பக்க முடிவில் இவ் தந்திகள் லங்கருடன் கட்டப்பட்டு நாகபாசத்துடன் பிணைக்கப்படுகிறது.
- லங்கரின் நடுவில் சிறு தந்திச்சுருள்கள் மிக நுட்பமான சுருதிக்கூட்ட பயன்படும்.

- ❖ தண்டியின் மறு பக்கத்தில் உள்ள சிறு பிருடைகளில் இத்தந்திகள் சுற்றப்பட்டிருக்கும்.
- ❖ பாட்டுத் தந்திகள் 5ம் கழுத்துப்பகதியிலுள்ள பிருடைகளில் கட்டப்பட்டிருக்கும்.
- ❖ 3 தாள சுருதித் தந்திகள் பக்கத்திலுள்ள குதிரையினூடாக சென்று சிறு தந்தப் பிரடைகள் வழியே சென்று தண்டியிலுள்ள வேறு பிருடைகளில் கட்டப் பட்டிருக்கும்.
- ❖ 4 அங்குல நீளமும் 1/12 அங்குல விட்டமும் கொண்ட பீப்பாய் வடிவமான மரத்துண்டை இடது கையில் பிடித்து தந்திகள் மேல் அழுத்தி இழுக்க வேண்டும்.
- ❖ வலது கையிலுள்ள ஆள்காட்டி விரலும் நடு வரலும் பாட்டுத் தந்திகளை மீட்ட பயன்படும்.
- ❖ சுண்டு விரல் தாள சருதி தந்திகளை மீட்டுவதற்கு பயன்படும்.
- ❖ இதனை மீட்டுவதற்காக நெளி எனப்படும் கம்பித் தகடுகள் பயன்படுத்தப்படுகிறது.
- ❖ பாட்டுத் தந்திகளை கீழ் பக்கமாகவும் தாளச்சுருதி தந்திகளை மேல் பக்கமாகவும் மீட்டுவது வழக்கம்
- ❖ கோட்டு வாத்தியத்தில் 4 ஸ்தாயிகள் வரை வாசிக்கலாம்.
- ❖ இந்தக் கருவியில் விளம்ப கால இசை மிகவும் சிறப்பாக இருக்கும் .
- ❖ இசை சம்பந்தமான பல ஒழுங்குகளையும் தத்துவங்களையும் இக்கருவி வாயிலாக விளக்கி காட்ட முடியும்.
- ❖ கடந்த நூற்றாண்டில் ஸ்ரீனிவாசராவ் என்வர் தான் தேர்ச்சி பெற்றவர்.
- ❖ இவர் மகன் சகாராமராவ் என்பவர் தன் தந்தையைவிட சிறப்பாக வாசிக்கும் ஆற்றல் பெற்றிருந்தார்.
- ❖ பூதலூர் கிருஸ்ண மூர்த்தி சாஸ்திரிகள்,நாராயன ஐயங்கார் (இரவிக்கிரனின் தாத்தா), நாராயன ஐயர் ஆகியோரும் தேர்ச்சி பெற்றவர்கள்.



**பயிற்சி 9.4**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. கோட்டு வாத்தியம் என்றால் என்ன?

   …………………………………………………………………………………………………

2. இவ்வாத்தியத்தின் மறுப்பெயர் என்ன?

   …………………………………………………………………………………………………

3. இவ் வாத்தியம் எத்தனையாம் நூற்றாண்டு கண்டுபிடிக்கப்பட்டது?

   …………………………………………………………………………………………………

4. பாட்டுத் தந்திகள் 5ம் தருக.

   …………………………………………………………………………………………………

5. தாளசுருதித் தந்திகளை தருக்

   …………………………………………………………………………………………………

6. பாட்டுத்தந்திகளுக்கு அடியில் இருக்கும் பரிவுநாத தந்திகள் எத்தனை?

   …………………………………………………………………………………………………

7. பரிவுநாதத் தந்திகள் எந்த இராகத்தின் ஸ்வரத்திற்கு சுருதி கூட்டப்படும்

   …………………………………………………………………………………………………

8. இவ்வாத்தியத்தில் பயன்படுத்தப்படும் கோட்டின் அளவு யாது?

   …………………………………………………………………………………………………

9. முதன்முதலாக இக்கருவியை வாசிப்பதில் தேர்ச்சிப்பெற்றவர் யார்?

   …………………………………………………………………………………………………

10. கோட்டு வாத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களை குறிப்பிடுக.

    …………………………………………………………………………………………………

# 10.வாக்கேயகாரர்கள்

## 10.1.1 கர்நாடக சங்கீத வாக்கேயகாரர்கள் - ஸ்வாதித்திருநாள் மகாராஜா



- இவர் கேரள மாநிலத்தில் இசையிலும் கதகளி ஆட்டத்தில் புத்துயிர் அளித்தவர்.
- இவர் தன் சமஸ்தானத்தில் பல சங்கீதவித்துவான்களையும் நாட்டியமணிகளையும் ஆதரித்து கலையை வளர்த்து வந்தார்.
- இவர் 1813ம் ஆண்டு திருவாங்கூர் அரச குடும்பத்தில் பிறந்தார்.
- ஆங்கிலம்,சமஸ்கிருதம்,ஹிந்துஸ்தானி தெலுங்கு மராத்தி,கன்னடம் ஆகிய மொழிகளை கற்றவர்.
- 16 வயதில் இசையமைக்கும் ஆற்றலைப்பெற்றவர்.
- இசைமட்டுமல்லாது சித்திரம் சிற்பம் மாந்திரீகம் போன்ற கலைகளில் வல்லமைப் பெற்றவர்.
- இந்துஸ்தான் இசை வித்துவான் தஞ்சாவூர் ரங்கஜயர் சாரங்கி

வித்துவான்,தஞ்சாவூர் சிந்தாமணி,தியாகராஜரின் சீடர்கள் கன்னையாபாகவதர் மற்றும் சின்னையா பொன்னையா,சிவானந்தம் வடிவேல்,ஹரிகதை விற்பன்னர் மேருஸ்வாமி,இறையின்னம்தம்பி ஆகியோர் மகாராஜாவின் அரண்மனையை அணிசெய்தனர்.

- ❖ இவர் ஸ்வரஜதிகள்,தானவர்ணம்,பதவர்ணம்,கிருதிகள்,பதங்கள் தில்லானாக்கள்,இராகமாலிகைகள் போன்றவற்றை இயற்றினார்.
- ❖ ஹிந்துஸ்தான் இசையில் கசல்கள் துருபத்கள் போன்றவற்றையும் இயற்றினார்.
- ❖ இவரது பெரும்பாலான உருப்படிகள் மலையாளம்,சமஸ்கிருதம் கலந்த மணிப்பிரவாள நடையில் அமைந்துள்ளன.
- ❖ மலையாளம் ஹிந்தி,கன்னடம் போன்ற மொழிகளிலும் உருப்படிகள் இயற்றியுள்ளார்.
- ❖ இவரது வர்ணங்களில் ஸ்வராட்சர அணிகள் நிறைந்துக் காணப்படகின்றன.
- ❖ இவர் 400 கிருதிகளை இயற்றியுள்ளார்.
- ❖ சாரங்கநாட லலிதபஞ்சமம் துவிஜவாந்தி கோபிகாவசந்தம் கண்டா மோஹனகல்யாணி போன்ற அபூர்வ இராகங்களிலும் கிருதிகளை இயற்றியுள்ளார்.
- ❖ இவர் நவராத்திரி கீர்த்தனைகளை சங்கராபரணம்,கல்யாணி,ஸாவேரி,பைரவி,பந்துவராளி,சுத்தசாவேரி நாட்டைக் குறிஞ்சி,ஆரபி ஆகிய இராகங்களில் இயற்றியுள்ளார்.
- ❖ மேலும் நவரத்னமாலிகைக்கீர்த்தனைகளை இயற்றியுள்ளார்.
- ❖ மேலும் ஸ்வாதி திருநாள் அவர்கள் 8 இராகங்களைக்கொண்ட பன்னகேந்திரசயன என்ற இராகமாலிகையையும் விஷ்ணுவின் 10 அவதாரங்களைக் குறிக்கும் 10 இராகங்களைக்கொண்ட கமலஜாஸ் என்ற இராகமாலிகையையும் இராமாயணத்தை மையமாகக்கொண்ட 6 இராகங்களில் பாவயாம் (சிட்டைஸ்வரம் பொருத்தமாக அமைத்தவர் செம்மங்குடி ஸ்ரீநிவாஸய்யங்கர்).
- ❖ 65 பதங்களை இயற்றியுள்ளார்.
- ❖ ஆனந்தபைரவி பூர்வி பூபாளம் தனாஸ்ரீ ஆகிய இராகங்களில் தில்லானாக்கள் இயற்றியுள்ளார்.
- ❖ இவர் 12 பாடல்களைக்கொண்ட குசலோபாக்கியானம் 9 பாடல்களைக்கொண்ட அஜாமிலோபாக்கியானம் போன்ற ஹரிகதைகளையும் இயற்றினார்.
- ❖ பத்மநாபஸ்வாமி கோவிலில் ஆண்டிற்கு இருமுறை இடம்பெறும் திருவிழாப்பற்றி மணிப்பிரவாளநடையில் உத்சவபிரபந்தம் இயற்றியுள்ளார்.
- ❖ இவர் ஒரே பொருளில் வெவ்வேறு முத்திரைகளை வைத்துப்பாடும் பரியாயமுத்திரையான பத்மநாப,பங்கஜநாப,சரஸிநாப,சரஸீருஹநாப கஞ்சநாப,ஜலஜநாப,அம்புஜநாப போன்ற முத்திரைகளை தனது உருப்படிகளில் கையாண்டுள்ளார்.



- ❖ இவரது காலத்தில் மலையாள இலக்கண அகராதி ஆக்கப்பபடடது.
- ❖ திருவாங்கூர் ரங்கநாத பாகவதர் மகாராஜாவின் 125 இசை உருப்படிகளை பாலாம்ருதம் என்ற நூல் மூலம் வெளியிட்டார்.
- ❖ ஹரிகேச நல்லூர் முத்தையா பாகவதர் அதன்பின் ஸ்ரீநிவாஸய்யங்கர் கிருதிமாலா என்ற நூலில் 100 உருப்படிகளை வெளியிட்டார்.
- ❖ இவரது சமஸ்தானத்தை அலங்கரித்த தஞ்சை வடிவேலுவை கௌரவித்து தந்தத்தினாலான வயலினை பரிசளித்தார்.
- ❖ இவர் 34 ஆண்டுகளே வாழ்ந்தார். 500 உருப்படிகள் இயற்றினார். 1846 ம் ஆண்டு இறையடி சேர்ந்தார்.

**பயிற்சி 10.1.1**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக**

1. ஸ்வாதித்திருநாள் மகாராஜா வாழ்ந்த காலப்பகுதியைத் தருக.

   ……………………………………………………………………………………………

2. இவரது வாழ்க்கை வரலாற்றினை சுருக்கமாக தருக

   ……………………………………………………………………………………………

3. இவரது சமஸ்தானத்தை அலங்கரித்த அணிசேர் கலைஞர்கள் யாவர்?

   ……………………………………………………………………………………………

4. இவர் இயற்றிய உருப்படிகள் எவை?

   ……………………………………………………………………………………………

5. இவர் தனது உருப்படிகளில் பயன்படுத்திய அபூர்வ ராகங்கள் எவை?

   ……………………………………………………………………………………………

6. நவராத்திரி கீர்த்தனைகளில் பயன்படுத்திய இராகங்கள் எவை?

   ……………………………………………………………………………………………

7. இவர் இயற்றிய இராகமாலிகைகள் எவை?

   ……………………………………………………………………………………………

8. இவர் இயற்றிய ஹரிகதைகள் எவை?

   ……………………………………………………………………………………………

9. பரியாய முத்திரை என்றால் என்ன?

   ……………………………………………………………………………………………

10. இவர் பயன்படுத்திய பரியாய முத்திரைகள் எவை?

    ……………………………………………………………………………………………

11. மகாராஜாவின் உருப்படிகளை நூல்களில் வெளியிட்டவர்கள் யாவர்?

    ……………………………………………………………………………………………

12. மகாராஜாவிடம் இருந்து தந்த வயலினைப் பெற்றவர் யார்?

    ……………………………………………………………………………………………

13. இவரின் உருப்படிகளில் காணப்படும் சிறப்புகள் எவை?

    ……………………………………………………………………………………………

14. இவர் இசையுலகிற்கு செய்த தொண்டுகள் எவை?

    ……………………………………………………………………………………………

    ……………………………………………………………………………………………

    ……………………………………………………………………………………………

## 10.1.2 கர்நாடக சங்கீத வாக்கேயகாரர்கள் - பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள்


Paidala Gurumurthi Shastry

- இவர் முசிறி நாட்டு தெலுங்கு பிராமணர்.
- 18ம் நூற்றாண்டில் சிறந்து விளங்கிய லஷ்ண,லஷ்ய வித்துவான்களில் ஒருவர்.
- இவர் தெலுங்கு,சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர்.
- சாஸ்திரிகள் லஷ்ண கீதங்களையும்,சஞ்சாரி கீதங்களையும், பிரபந்தங்களையும்,கீர்த்தனங்களையும் தனது பெயரையே முத்திரையாகக்கொண்டு சமஸ்கிருதமொழியில் இயற்றியுள்ளார்.
- இவர் துளஜா மகாராஜாவின் சமஸ்தானத்தை அலங்கரித்த சொண்டி வெங்கடசுப்பையரின் சிஷ்யராவார்.
- கன நய தேசிய பாடும் முறையில் சிறந்த வித்துவானாக விளங்கினார்.
- இவருடைய சிஷ்யர்கள் கூடால ஷேய்யரையும் சோபனாத்ரி போன்றோரைக் குறிப்பிடலாம்.
- இவருடைய முத்திரை குருமூர்த்தே ஆகும்.
- இவர் ஆயிரம் கீதங்களை இயற்றியமையால் வெயிகீத பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள் என அழைக்கப்பட்டார்.
- இவர் நாற்பதாயிரம் இராகங்களின் இலட்சணங்களை அறிந்திருந்தமையால் "நலுவதிவேல பைடகால குருமூர்த்தி சாஸ்திரிகள் எனப் போற்றப்படுகின்றார்.

**பயிற்சி 10.1.2**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக**

1. பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள் எத்தனையாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்?

   ………………………………………………………………………………………………………

2. இவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

   ………………………………………………………………………………………………………

3. இவரின் சிஷ்யர்கள் யாவர்?

   ………………………………………………………………………………………………………

4. இவருக்கு வழங்கப்பட்ட சிறப்புப்பெயர்கள் எவை? அதற்கான காரணங்களைத் தருக?

   ………………………………………………………………………………………………………

5. இவருடைய குரு யார்?

   ………………………………………………………………………………………………………

6. இவர் என்ன பாடுவதில் சிறப்பு தேர்ச்சிபெற்றவர்?

   ………………………………………………………………………………………………………

7. இவர் எத்தனை இராகங்களை அறிந்திருந்தார்?

   ………………………………………………………………………………………………………

8. இவர் இசையுலகிற்கு செய்த தொண்டுகள் எவை?

   ………………………………………………………………………………………………………

   ………………………………………………………………………………………………………

## 10.1.3 கர்நாடக சங்கீத வாக்கேயகாரர்கள் - அருணகிரி நாதர்



- அருணகிரிநாதர் வட ஆற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலையில் வாழ்ந்தவர்.
- இவர் 15ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.
- இவரின் தந்தையார் திருவெண்காடர் தாயார் முத்தம்மை ஆவார்.
- இவரின் சகோதரி ஆதிலட்சுமி ஆவார்
- இவர் தனது ஆரம்பகால வாழ்க்கையை மிகவும் ஆடம்பரமாக நடத்தினார். இதனால் இவரது தவறான நடவடிக்கைகள் காரணமாக குஷ்டநோய் ஏற்பட்டது. வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டு திருவண்ணாமலை கோபுரத்தில் மீதேறி தற்கொலை செய்துக்கொள்ள முயற்சித்தார் முருகன் இவரைக் கையிலேந்திக் காப்பாற்றினார் அத்துடன் குஷ்டநோயும் நீங்கியது. அன்று முதல் பாடும் ஆற்றல் பெற்று முதன்முதலில் முருகன் முத்தைத்தரு….. என அடியெடுத்துக்கொடுக்க திருப்புகழ் பாடல்கள் பாடும் ஆற்றல் பெற்றார்.
- இவர் தமிழ்,சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர்.
- இவரது பாடல்கள் சந்தச்சிறப்புடன் காணப்படுவதனால் இவர் சந்தப்பாவலர் பெருமான் என அழைக்கப்பட்டார்.
- இவர் 16000 பாடல்களை இயற்றியுள்ளார்.எனினும் 2000 பாடல்களே தற்போது கிடைக்கப்பெற்றுள்ளன.
- இவரை தாயுமானசுவாமிகள் “வாக்கிற்கு அருணகிரி” எனப்போற்றியுள்ளார்.
- இவரது பாடல்களில் முருகபக்தியின் துல்லியத்தையும் பொலிவினையும் காணலாம்.
- 35,108,175 தாளங்களிலும் அபூர்வ தாளங்களிலும் திருப்புகழ் இயற்றியுள்ளார்.
- இவரது பூதவேதாள வகுப்பில் பஞ்சதாளங்கள் பற்றியும் 108 தாளங்களின் பெயர்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.
- இவரது பாடல்களில் பஞ்சகதிபேததாளம் பிரஸ்தாரகிரமங்களினால் உண்டான தாளம் அன்னிய தாளம் விசம தாளம் சந்தத்தாளம் ஆகிய தாள முறைகளின் நுட்பங்கள் இயற்கையாகவே அமைந்துள்ளன.
- அருணகிரிநாதர் திருப்புகழ்,கந்தரனுபூதி,கந்தர்அந்தாதி,கந்தரலங்காரம்,வேல்விருத்தம்,மயில்விருத்தம் போன்றவற்றை இயற்றியுள்ளார்.
- திருவண்ணாமலை மகாராஜாவான பிரபுடதேவமகாரராஜாவின் வயிற்றுவலியைத் தீர்க்க மூலிகை தேவைப்பட்டப்போது அருணகிரிநாதர் கூடு விட்டு கூடுபாயும் சக்தியால் தனது உடலை இறந்த கிளியின் உடலில் செலுத்திவிட்டு தான் கிளியாக மாறி மூலிகை எடுத்து வர சென்ற போது எதிரிகள் இவரது உடலை எரிதது விட தனது எஞ்சிய வாழ்நாளை கிளியாகவே கழித்தார்.
- இவருக்கு சந்தப்பாவலர்பெருமான்.முத்தமிழ்அரசு,இசைஞானியார்,நவரசநாயகர்,வாக்கிற்குஅருணகிரி என்னும் சிறப்புப்பெயர்கள் உண்டு.
- இவர் மணலி முத்துக்கிருஷ்ண முதலியாரின் சமஸ்தானத்தில் தனது திருப்புகழ்ப ̇பாடல்களுக்காக கனகாபிஷேகம் செய்யப்பெற்றுள்ளார்.

- ❖ இவரது திருப்புகழ் பாடல்கள் சில
- ❖ நிறைமதிமுகமெனும்
- ❖ துள்ளுமதவேட்கை.. அபகாரநிந்தை..
- ❖ வசனமிகவேற்றி.. திமிரவுததி..
- ❖ இவரது திருப்புகழ்ப் பாடல்களில் வேத உபநிடத நுட்பங்களும் அன்பின் சிறப்பு அடக்கம் தொண்டின் பெருமை சமயபோரின் பயனின்மை தற்பெருமை ஒழித்தல் கல்விச்செருக்கின் தவறு இறைவழிபாடு என்பன பற்றிக்கூறப்பட்டுள்ளன

**பயிற்சி 10.1.3**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக**

1. அருணகிரி நாதர் எத்தனையாம் நூற்றாண்டைச்சேர்ந்தவர்?

   ……………………………………………………………………………………………

2. இவரது தாய் தந்தையர் பெயர் யாது?

   ……………………………………………………………………………………………

3. இவருக்கு பாடும் ஆற்றல் எவ்வாறு ஏற்பட்டது?

   ……………………………………………………………………………………………

4. இவர் முதன்முதலில் பாடிய திருப்புகழ் எது?அப்பாடல் பாட்பபட்ட சந்தர்ப்பத்தைத் தருக.

   ……………………………………………………………………………………………

5. இவர் இயற்றிய பாடல்கள் எத்தனை? தற்போது வழக்கிலுள்ள பாடல்கள் எத்தனை?

   ……………………………………………………………………………………………

6. இவரது பாடல்களில் காணப்படும் தாளங்கள் பற்றிக் குறிப்பிடுக.

   ……………………………………………………………………………………………

7. இவரின் பூதவேதாள வகுப்பின் சிறப்பு யாது?

   ……………………………………………………………………………………………

8. இவர் இயற்றிய நூல்கள் எவை?

   ……………………………………………………………………………………………

9. இவருக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்புப்பெயர்கள் எவை?

   ……………………………………………………………………………………………

10. இவருக்கு கனகாபிஷேகம் செய்தவர் யார்?

    ……………………………………………………………………………………………

11. இவர் இயற்றிய திருப்புகழ் பாடல்களுக்கு உதாரணம் 5 தருக?

    ……………………………………………………………………………………………

12. இவரது திருப்புகழ்ப் பாடல்களில் காணப்படும் விடயங்கள் எவை?

    ……………………………………………………………………………………………

13. அருணகிரி நாதரின் வாழ்க்கை வரலாற்றினை சுருக்கமாகக் குறிப்பிடுக.

……………………………………………………………………………………………………

14. இவர் இசையுலகிற்கு செய்த தொண்டுகள் எவை?

……………………………………………………………………………………………………

15. "தாளங்கள் அழிந்து போகாது பாதுகாத்தவர் அருணகிரி நாதர்" இக்கூற்றினை தெளிவுப்படுத்துக.

……………………………………………………………………………………………………

## 10.2.1 ஹிந்துஸ்தான் சங்கீத வாக்கேயகாரர்கள் - அமீர்குஸ்ரு



❖ அமீர் குஸ்ருவின் இயற்பெயர் அபூ-அல் ஹஸன் யாமினுத்தீன் குஸ்ரு என்பதாகும்.
❖ இவரது தந்தை துருக்கி நாட்டை சேர்ந்தவர்.
❖ இவர்கள் துருக்கியில் இருந்து வெளியேறி இந்தியாவில் பாட்டியாலி என்னும் இடத்தில் குடியேறினார்கள்.
❖ ஏழு வயதில் தன் தந்தையை இழந்தார்.
❖ சிறுவயதில் உருது பாரசீக மொழிகளில் பாடல் இயற்றுவதில் வல்லமை பெற்றிருந்தார்.
❖ ஹிந்தி மொழியில் இயற்றிய பாடல் இன்றும் பாடப்படுகின்றன
❖ இவர் டெல்லி சமஸ்தான சுல்தானின் ஆஸ்தான வித்துவானாக விளங்கினார்.
❖ ஜலால் உத்தின் கில்ஜி டெல்லி சுல்தானாக இருந்த போது அமீர் என்னும் பட்டத்தை அளித்து கௌரவித்தார்.
❖ இவர் இந்திய அரேபிய பாரசீக இசை வகைகளை ஒப்பு நோக்கினார்.
❖ இவர் காலத்தில் பிரபல்யமான சிக்கலான இந்திய பாடல்களை எளிமையாக்கி மாணவர்களும் கற்றுக்கொள்ள வழிவகுத்தார்.
❖ புதிய ராகங்களை உருவாக்கினார் - உதாரணம் யமன் கல்யாண்,பூர்வி,பீலு,பஹார் என்பன ஆகும்
❖ குறிப்பாக குவாலி கயல் போன்ற உருப்படிகளை கண்டுபிடித்தார்.
❖ இவரே சித்தார் தபேலா டோலக் போன்ற இசைக் கருவிகளை கண்டுபிடித்தவர்.
❖ வீணையின் அமைப்பில் சில மாறுதல்களுடன் சித்தாரையும் மிருதங்கத்தின் அமைப்பில் சில மாறுதல்களுடன் தபேலாவையும் உருவாக்கினார்.
❖ இவர் ஜால் திரிதால் பாஷ்டோ போன்ற தாளங்களை அறிமுகப்படுத்தினார்.
❖ இவர் சிறந்த பாடகர் ஆவார்.
❖ கோபால் நாயக் அலாவுதீன் கில்ஜி அரசவையில் கச்சேரி செய்யும் போது மறைந்திருந்து கேட்டு கோபால் நாயக் பிரமிக்கும் படி திருப்பி பாடியதாக கூறப்படுகின்றது.
❖ இவர் கி.பி 1325 ஆம் ஆண்டு இறந்தார்.

**பயிற்சி 10.2.1**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. அமீர் குஸ்ருவின் இயற்பெயர் என்ன?

   ………………………………………………………………………………………………

2. இவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

   ………………………………………………………………………………………………

3. இவர் இந்தியாவில் எந்த இடத்தில் குடியேறினார் ?

   ………………………………………………………………………………………………

4. இவர் இளம் வயதிலேயே எந்த மொழி பாடல்களை இயற்றினார் ?

   ………………………………………………………………………………………………

5. இவருக்கு அமீர் என்ற பட்டத்தை அளித்தவர் யார்?

   ………………………………………………………………………………………………

6. அமீர் குஸ்ரு கண்டுபிடித்த ராகங்களை தருக.

   ………………………………………………………………………………………………

7. இவர் கண்டுபிடித்த உருப்படிகளை தருக

   ………………………………………………………………………………………………

8. இவர் அறிமுகப்படுத்திய இசைக்கருவிகளை குறிப்பிடுக.

   ………………………………………………………………………………………………

9. அமீர் குஸ்ரு உருவாக்கிய புதிய தாளங்களை குறிப்பிடுக.

   ………………………………………………………………………………………………

10. இவரை சிறந்த பாடகர் என அறிமுகப்படுத்திய விடயம் எது?

   ………………………………………………………………………………………………

## 10.2.2 ஹிந்துஸ்தான் சங்கீத வாக்கேயகாரர்கள் - தான்சேன்



❖ அக்பரின் அரசவையில் ஒரு ரத்தினக் கல் போன்று விளங்கியவர் தான்சேன்.

❖ இவரது இயற்பெயர் ராம் தானும் பாண்டே.

❖ இவர் சிறந்த பிராமண குடும்பத்தைச் சேர்ந்தவர்.

❖ இவர் கிபி 1520 இல் குவாயில் பிறந்தார்.

❖ இவரது தந்தையார் சங்கீதத்தில் வித்துவான் ஆகவும் சமஸ்கிருதத்தில் விற்பன்னராக விளங்கினார்.

❖ இவரது பெற்றோருக்கு பல குழந்தைகள் பிறந்து இறந்ததாகவும் என்பவரின் ஆசீர்வாதத்துடன் தான் தான்சேன் பிறந்ததாகவும் கூறப்படுகிறது.

❖ இளமையிலேயே துடிவூட்டமிக்கவராகவும் இயற்கையை ரசிப்பவர் ஆகவும் பறவைகள் ஏனைய குரல் வகைகளை பாவனை செய்வதில் திறமை மிக்கவராகவும் விளங்கினார்.

❖ இவரது தந்தை மொகமட்கௌஸ்,சுவாமி ஹரிதாய் ஆகியோரிடம் இசை பயில்வதற்காக அனுப்பினார்.

- இராஜமான் சிங்கின் மனைவி ஆகிய மிருக் நயனியும் சிறந்த பாடகி ஆவார்.
- அவரின் சிஷ்யையாகிய ஹொசனி என்பவளை தான் தான்சேனுக்க மணம் புரிவித்தர்.
- இவர் முஸ்லிமாக மாறி மொகமட் அலிகான் என அழைக்கப்பட்டார்.
- இவர் பல துருபத்களை இயற்றியுள்ளார்.
- இவர் அக்பரின் சமஸ்தான வித்துவானாக ஆவதற்கு முன் ராஜாராம் சந்தர் ரேவா மாணிக்கத்தின் அரசசபையிலும் வித்துவானாக விளங்கினார்.
- ராஜாராம் சந்தரை கௌரவித்து பல துருபத்களை இயற்றியுள்ளார்.
  ஆக்ராவில் சமஸ்தான வித்துவானாக இருந்தபோது முதன்முறையாக இவரது கச்சேரியை கேட்ட மன்னன் இரண்டு லட்சம் ரூபா ரொக்கப் பரிசை அளித்தார்.
- இவர் மியான்கி-தேஸ்,மியான்-கி மல்ஹார் போன்ற புதிய ராகங்களை அறிமுகப்படுத்தினார்.
- சிறந்த பாடகராக விலங்கியது அதுமட்டுமல்லாமல் ரபாப் என்னும் வாத்தியத்தை வாசிப்பதிலும் தேர்ச்சி பெற்றவராக இருந்தார்.
- இவருக்கு நான்கு புத்திரனும் ஒரு புத்திரியும் இருந்தனர்.
- இவரது புத்திரி சிறந்த வணிக வித்துவானை மணம்புரிந்தார்.
- இவரது வம்சத்தவர்கள் இசைத் துறையில் மிகவும் பிரபல்யம் பெற்றவர்கள்.
- தான்சேன் இந்துவாக இருந்து முஸ்லிமாக மாறியதற்கு தகுந்த காரணம் கூறப்படவில்லை
- கிபி 1558 ஆம் ஆண்டுக்குப் பின் இறந்தார்.
- இவரது விருப்பப்படி மொகமட்கௌசிக் சமாதிக்கு அருகில் கவாலியில் உள்ளது.
- கர்நாடக சங்கீத வித்துவான்கள் தியாகராஜசுவாமி சமாதிக்கு திருவையாற்றுக்கு சென்று வருவது போல் வருடம்தோறும் இந்துஸ்தானி வித்துவான்கள் தான் சமாதிக்கு செல்வார்கள்.

**பயிற்சி 10.2.2**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. அக்பரின் அரசவையில் ஓர் ரத்தினக்கல் போல் விளங்கியவர் யார்?

   ……………………………………………………………………………………………………

2. இவரது இயற்பெயர் யாது?

   ……………………………………………………………………………………………………

3. இவர் எத்தனையாம் ஆண்டு எங்கு பிறந்தார்?

   ……………………………………………………………………………………………………

4. யாருடைய ஆசீர்வாதத்தினால் தானசேன் பிறந்தார்?

   ……………………………………………………………………………………………………

5. தான்சேனின் திறமைகள் எவை?

   ……………………………………………………………………………………………………

6. யாருடைய சிஷ்யை இவரது மனைவியானாள்?

   ……………………………………………………………………………………………………

7. தான்சேனின் முஸ்லிம் பெயர் என்ன?

……………………………………………………………………………………………

8. இவரது இசை கச்சேரியை கேட்ட மன்னன் அளித்த சன்மானம் என்ன?

……………………………………………………………………………………………

9. இவர் அறிமுகப்படுத்திய ராகங்கள் எவை ?

……………………………………………………………………………………………

10. தான்சேன் எந்த வாத்தியத்தை வாசிப்பதில் தேர்ச்சி பெற்றார்

……………………………………………………………………………………………

11. இவரது மகள் யாரை திருமணம் புரிந்தார் ?

……………………………………………………………………………………………

12. தான்சேன் எத்தனையாம் ஆண்டு இறந்தார்?

……………………………………………………………………………………………

13. தியாகராஜரின் சமாதி எங்கு உள்ளது?

……………………………………………………………………………………………

14. தான்சேனின் சமாதி யாருடைய சமாதிக்கு அருகில் உள்ளது?

……………………………………………………………………………………………

15. ஹிந்துஸ்தானி வித்வான்கள் வருடம்தோறும் யாருடைய சமாதிக்கு செல்வார்கள்?

……………………………………………………………………………………………

## 10.2.3 ஹிந்துஸ்தான் சங்கீத வாக்கேயகாரர்கள் - பாத்கண்டே



- ஐரோப்பியர் இந்தியாவை ஆண்ட காலத்தில் இந்துஸ்தானி இசை வளர்ச்சி குன்றி இருந்தது இக்காலகட்டத்தில் பாத்கண்டே தோன்றி இந்துஸ்தானி சங்கீதத்திற்கு புத்துயிர் அளித்தார்.
- இவர் பம்பாயில் கி.பி பின் 1860 ஆம் ஆண்டு ஆவணி 13ஆம் திகதி பிறந்தார்.
- இவரது தந்தையாராகிய நாராயணராவ் லிகிதராக கடமை புரிந்தார்.
- இவரது தாயார் தெய்வ பக்தியோடு தாலாட்டு பாடுவதிலும் வசை பாடுவதிலும் வல்லவர்.
- தந்தையார் ஏக்தார் வாத்தியத்தை வாசிப்பதில் ஆற்றல் மிக்கவர்.
- தமையனார் தில்ருபா என்னும் வாத்தியத்தை வாசிப்பதில் பாண்டித்தியம் பெற்றவர்.
- இச்சூழலில் வாழ்ந்த பார்த்துக்கொண்டே இயல்பாகவே இசைத்துறையில் திறமை பெற்று பத்து வயதிலேயே புல்லாங்குழல் வாசிப்பது திறமை காட்டினார்.
- இவர் இசை உலகில் பிரபல்யம் பெற்றிருந்ததுடன் கல்வியிலும் சிறந்து விளங்கினார்.
- 1889 இல் வழக்கறிஞர் பரீட்சையில் சித்தியெய்தினார்.
- குறுகிய காலத்திலே தனது மனைவி பிள்ளைகழை இழந்து இசைக்கே வாழ்வை அர்ப்பணித்தார்.
- 300 துருபத்கள் 150 கயால்களை கற்றவர்.
- 72 மேளகர்த்தா போன்ற சங்கீத கிரந்தங்களையும் கற்றுக்கொண்டார்.

- ❖ ஏறக்குறைய எல்லா இராகங்களிலும் அமைந்துள்ள உருப்படிகளைக்கொண்ட ஸ்வரமாலிகா என்னும் நூலை வெளியிட்டார்.
- ❖ 10 தாட் முறையையும் பிலாவலை அடிப்படை இராகமாகவும் அறிமுகப்படுத்தியவர் இவராவார்
- ❖ இலக்ஷண ஸங்க்ரஹ என்னும் நூலை வெளியிட்டார்.
- ❖ 150 இராங்களை விபரமாக விளக்கும் ஹிந்துஸ்தானி சங்கீத பத்தததி என்னும் நூலை மராத்தி மொழியில் வெளியிட்டார்.
- ❖ 1200 பிரபல்யமான சம்பிரதாயமான பாடல் வகைகளைத் தொகுத்து கிராமிக் புஸ்தகமாலா என்னும் நூலாக வெளியிட்டார்.
- ❖ " A Compertive Study Of Music of 15th, 16th, 17th & 18th centuries" என்ற நூலையும் "A Historical Survey of the Music of Upper India" என்ற நூலையும் வெளியிட்டார்.
- ❖ இவரால் அறிமுகப்படுத்தப்பட்ட சங்கீத லிபி முறை உலகெங்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- ❖ கவாலியர் மகாராஜாவின் உதவியுடன் கவாலியில் மாதவ கல்லூரியை நிறுவினார்.
- ❖ இவர் பாரிசவாத நோயினால் பாதிக்கப்பட்டு 1936 ஆம் ஆண்டு கலமானார்.
- ❖ ஹிந்துஸ்தானி சங்கீதம் ஆங்கிலேயரின் ஆட்சிக்குப் பின் அழிந்து போகாமல் காத்த பெருமை இவரையே சாரும்.

**பயிற்சி 10.2.3**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. பாத்கண்டே எப்போது பிறந்தார்?

   ……………………………………………………………………………………………….

2. இவரின் தந்தையாரின் தொழில் என்ன?

   ………………………………………………………………………………………………

3. தந்தையாரும் தமையனாறும் எக்கருவிகளை வாசிப்பதில் பிரபல்யமானவர்கள்?

   ………………………………………………………………………………………………

4. பாத்கண்டே எந்தெந்த இசைக்கருவிகளை வாசிப்பதில் சிறந்தவர்?

   ………………………………………………………………………………………………

5. ஹிந்துஸ்தானி இசையில் இவர் இயற்றிய உருப்படிகள் எவை?

   ………………………………………………………………………………………………


6. இவர் இயற்றிய நூல்களை குறிப்பிடுக.

   ………………………………………………………………………………………………

7. இவரது முயற்சியால் நிறுவப்பட்ட கல்லூரி எது?

   ………………………………………………………………………………………………

## 10.3.1 மேலைத்தேய சங்கீத வாக்கேயகாரர்கள் - பாக் 1685-1750




- ❖ இவர் EISENACH எனும் இடத்தில் பிறந்தார்.
- ❖ பாக்கின் தந்தை ஜோஹான் அம்போருஸியஸ்.
- ❖ தனது 9 வது வயதிலே தாயையும் அதன் தந்தையையும் இழந்தார்
- ❖ இவர் பெரும் வாக்கேயகாரர் இயற்றிய பாடல்களை பார்த்தெழுதுவதை பொழுதுபோக்காக கொண்டவர்.
- ❖ St Michal convent இல் சமயபாடல்களை பாடுபவராக சேர்ந்தார்.
- ❖ முதன்முதலாக 18வது வயதில் Arnstand தேவாலயத்தில் பாடகர் குழுத் தலைவராகவும் ஆர்கன் வாசிப்பவராகவம் பொறுப்பேற்றார்.
- ❖ இவர் மறியா பாபராவை திருமணம் புரிந்தார்.
- ❖ இவர் ஆர்கனக்குரிய இசை வடிவங்களை ஆக்கியுள்ளார்.
- ❖ Tocctofugue-D-minor-Fugue-D என்பன இவரால் எழுதப்பட்டவை
- ❖ இவர் கிளவிகோட் வாசிப்பதில் தேர்ச்சிப்பெற்றவர்.
- ❖ இவர் ஒருவரே கூட்டிசைகளை ஆக்க்கூடிய திறமைப் பெற்றவராக விளங்கினார்.
- ❖ பாக் மிகவும் பிரபல்யமான 6 Banden Burg Concertos இயற்றினார்.
- ❖ தனது 9 வயது மகளுக்காக "Little book for the keyboard" இயற்றினார்.
- ❖ வரது ஆக்கங்களில் பிரபல்யமானவைMass in B – Minor,St Mathew Passion,Chridtmas Oratorio
- ❖ இவர் ஒரு குருடராக இருந்தபோதும் நான் சிங்காசனத்திற்கு வருகின்றேன் என்ற கூட்டிசைப் பாடலை இயற்றியிருந்தார்.
- ❖ இசைக்கருவிகளை வாசிக்கும் போது ஐந்து விரல்களைப் பயன்படுத்தும் முறையை அறிமுகப்படுத்தினார்.
- ❖ 1750 ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார்.

**பயிற்சி 10.3.1**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. நான் சிங்காசனத்தற்கு வருகிறேன்" என்ற கூட்டிசைப் பாடலைப் பாடியவர் யார்?

   ………………………………………………………………………………………………

2. பாக்கின் வாழ்க்கைக்காலம் யாது?

   ………………………………………………………………………………………………

3. பாக்கின் முதல் குரு யார்?

   ………………………………………………………………………………………………

4. தம் மாணவர்களுக்காக இவர் எழுதிய இசையாக்கம் எது?

   ………………………………………………………………………………………………

5. பாக்கின் ஆக்கங்கள் எவை?

   ………………………………………………………………………………………………

6. பாக் எவ்வாத்தியங்கள் வாசிப்பதில் தேர்ச்சி பெற்றவர்?

………………………………………………………………………………………………

7. இவர் எவ்வாத்தியத்தில் இசை கூட்டும் முறையை பரிபூரணப்படுத்தினார்?

………………………………………………………………………………………………

8. இசைக்கருவிகள் தொடர்பாக இவர் அறிமுகப்படுத்திய முறை எது?

………………………………………………………………………………………………

## ❖ 10.3.2 மேலைத்தேய சங்கீத வாக்கேயகாரர்கள் - மொஸாட் (1756-1791)



- ❖ இவர் ஆஸ்திரியாவில் Salzburg எனும் கிராமத்தில் பிறந்தார்.
- ❖ இவரது தந்தையார் லியோபோல்ட்,தாயார் அன்னா மரியா.
- ❖ இவர் ஹார்ப்ஸிகோட் வயலின் பழகுபவராக விளங்கினார்.
- ❖ மொஸாட் தனது 3வது வயதில் இசை பயில தொடங்கினார்.
- ❖ தனது 5வது வயதில் மைனூட்ஸ் எழுத தொடங்கினார்.
- ❖ இளமையிலே பியானொ கொன்ஸார்டோ எழுதுபராக விளங்கினார்.
- ❖ இவர் தனது 7 வயதில் வியன்னாவில் வயலின் வாசித்தார்.
- ❖ தனது 12வது வயதில் 2 நாடகங்களை இயற்றினார்.
- ❖ இத்தாலியில் 3 ஸிம்பனிகளை இயற்றினார்.
- ❖ பியானோ Concerto க்களையும் ஓர்கன் வாத்தியத்தில் வாசிக்க கூடிய பாடல்களையும் எழுதினார்.
- ❖ Marriage of Figaro 1786 இல் இவரால் இயற்றப்பட்டது.
- ❖ Don Giovanni-Cosi Fantututte போன்றவற்றையும் இயற்றினார்.
- ❖ The Magic Flute என்ற நூலை 1791 இல் இயற்றினார்.

**பயிற்சி 10.3.2**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. மொஸாட்டின் பெற்றோர் யார்?

………………………………………………………………………………………………

2. மிலன் நகரில் இவர் இயற்றிய நாடகங்கள் எவை?

………………………………………………………………………………………………

3. 7 வயதில் எந்த நாட்டில் இவர் வயலின் வாசித்தார்?

………………………………………………………………………………………………

4. இவர் இசை நிகழ்ச்சி நடத்திய நாடுகள் எவை?

………………………………………………………………………………………………

5. 1786 இல் இவரால் எழுதப்பப்பட்ட நூல் எது?

………………………………………………………………………………………………

6. 1791 இல் இவரால் எழுதப்பபட்ட நூல் எது?

………………………………………………………………………………………………

7. இவரின் இசைப்பணியை விளக்குக.

………………………………………………………………………………………………

## ❖ 10.3.3 மேலைத்தேய சங்கீத வாக்கேயகாரர்கள் - பீதோவன் (1770-1827)

❖ ஷேக்ஸ்பியர் இலக்கியத்துறையில் போற்றப்படுவதைப் போல் இசைத்துறையில் லுட்விக் வான் பீதோவன் போற்றப்படுகிறார்.



❖ இவர் ஜேர்மன் நாட்டில் பொண் எனும் இடத்தில் பிறந்தார்.

❖ இளவயதில் லத்தீன்,பிரஞ் மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர்.

❖ 2 வருடங்களிலே மூன்று வுசைழள வெளியிட்டார்.

❖ இவர் செலடவந்த வீட்டுப் பிள்ளைகளுக்கு இசை போதித்தார்.

❖ பியானோ வாசிப்பதில் வல்லவராக விளங்கினார்.

❖ இவர் பிராக்,பேர்லின் போன்ற இடங்களுக்கு சென்று இசை நிகழ்ச்சிகளை நிகழ்த்தியுள்ளார்.

❖ பிரபல்யமான பாரஸ்ட்ரல் ஸிம்பனியை எழுதியவர் இவரே.

❖ Moonlight sonata வை நேசித்த பெண்மணிக்காக எழுதினார்.

❖ 1802 இல் இவரது செவிட்டுத் தன்மை யாவராலும் அறியப்பட்டது.

❖ Heiligen Stadt Testament இயற்றினார்.

❖ இவர் 1827.03.16 இறந்தார்.

**பயிற்சி 10.3.3**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. Moonlight sonata வை இயற்றியவர் யார்?

………………………………………………………………………………………………

2. பீதோவனின் வாழ்க்கைக்காலம் யாது?

………………………………………………………………………………………………

3. இவர் தேர்ச்சி பெற்ற மொழிகளை குறிப்பிடுக

………………………………………………………………………………………………

4. பீதோவனின் ஆக்கங்கள் எவை?

………………………………………………………………………………………………

5. இவரின் இசைப்பணிகள் 4 தருக

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

## 10.4.1 20ம் நூற்றாண்டு இசைக் கலைஞர்கள் - எம்.எஸ்.சுப்புலட்சுமி



- ❖ தனது குரல் இனிமையால் பார் முழுவதும் புகழ்க்கொடியை நாட்டியவர்.
- ❖ இந்திய நாட்டுப் பிரதமராக இருந்த ஜவ்ஹர்லால் நேரு ஒருமுறை எம் எஸ்ஸிடம் “ நான் வெறும் பிரதம மந்திரித்தானே உங்களுக்கு முன்” எனக் கூறியுள்ளார்.
- ❖ இவர் மதுரையில் பிரபல வீணைக்கலைஞராக இருந்த ஷண்முகவடிவின் மகளாக 1916 ஆம் ஆண்டு பிறந்தார்.
- ❖ சிறு வயதிலேயே முதல் இசைத்தட்டுக்குப் பாடினார். 13 வதுவயதிலே மேடையேறினார்.
- ❖ இவர் சகுந்தலை,சாவித்திரி, மீரா போன்ற திரைப்படங்களிலும் நடித்துள்ளார்.
- ❖ 1940 ஆம் ஆண்டில் டி.சதாசிவம் என்பவரை மணந்தார். இவரது கணவர் இவரது இசைப்பணிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தார்.
- ❖ நிதியுதவி பெற்றுக் கொடுப்பதற்காக எம். எஸ் பல கச்சேரிகளை அளித்துள்ளார்.
- ❖ இவர் பஜனைப் பாடல்கள் பாடுவதில் திறமைமிக்கவர்.
- ❖ மகாத்மா காந்தி தனது பிறந்த நாளன்று “ ஹரிதும்ஹரோ ” என்ற பஜனை பாட வேண்டும் என விரும்பியதும் எம். எஸ் அப்பாடலை ஒலிப்பதிவு செய்து டெல்லிக்கு அனுப்பியதாகவும் கூறப்படுகின்றது.
- ❖ 1956 இல் ஜனாதிபதி விருது, பாரதரத்னா, தேசி கோத்தம போன்ற பல விருதுகளைப் பெற்றார்.
- ❖ 1981 இல் ஆந்திர பிரதேச ஆஸ்தான சங்கீத விதுஷமணி கௌரவமும் அதே ஆண்டில் அகில உலக மியுசிக் கௌன்சிலின் கௌரவ அங்கத்தினராகவும் தேர்வுசெய்யப்பட்டார்.
- ❖ 1966 இல் ஐ. நா சபையில் பாடும் வாய்ப்பு எற்பட்டது.
- ❖ பல மேல் நாடுகளுக்கும் சென்று இசைக்கச்சேரிகளை நடத்தினார்.
- ❖ 1969 ஆம் ஆண்டு மியூசிக் அகடமி முதன்முறையாக ஒரு பெண் கலைஞரான இவருக்கு சங்கீத கலாநிதி விருதை வழங்கியது.
- ❖ 1974 பிலிப்பைன்ஸ் நாட்டின் மிக உயர்ந்த விருதான “ மக்சாசாய் ” விருது வழங்கப்பட்டது
- ❖ இவருடைய இசை முழுக்க முழுக்க பக்தி அடிப்படையில் அமைந்திருப்பதைக் காணலாம்.

**பயிற்சி 10.4.1**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. எம்.எஸ்.சுப்புலட்சுமி எத்தனை வயதில் மேடையேறினார்?

   ………………………………………………………………………………………………

2. இவர் நடித்த திரைப்படங்களை குறிப்பிடுக.

   ………………………………………………………………………………………………

3. எம்.எஸ்.சுப்புலட்சுமி எத்தனையாம் ஆண்டு பிறந்தார்?

   ………………………………………………………………………………………………

4. எம்.எஸ்.சுப்புலட்சுமி பெற்ற விருதுகளை குறிப்பிடுக.

.....................................................................................................

5. எத்தனையாம் ஆண்டு இவருக்கு ஐ.நா சபையில் பாடும் வாய்ப்பு கிடைத்தது?

.....................................................................................................

## 10.4.2 20ம் நூற்றாண்டு இசைக் கலைஞர்கள் - எம்.எல்.வசந்தகுமாரி





- இவர் குருவாகிய ஜி.என். பாலசுப்ரமணியத்தைப் பின்பற்றினார்.
- அவருடைய பாணியை, அவருடைய சங்கீதச் சிறப்பு அம்சங்களைக் கடைப்பிடித்து அவரைப் போலவே கர்நாடக இசையின் சிகர விருதான " சங்கீத கலாநிதி " என்னும் பட்டத்தைப் பெற்றார்.
- இவர் இளவயதிலேயே மேடையேறி தன் இனிய குரலால் இரசிகர்களைக் கவர்ந்தார்.
- திரைஉலகிலும் புகழ்பெற்று விளங்கியதோடு அயல்நாடுகளிலும் கர்நாடக இசையின் பெருமையை நிலைநாட்டினார்.
- 3.7.1928 அன்று இசைப் பரம்பரையிலேயே பிறந்தார்.
- தந்தையார் அய்யாசாமி ஐயரும்,தாயார் லலிதாங்கியும் ஆவர்.
- தமது 12 வது வயதிலேயே தன் தாயாருடன் இணைந்து கச்சேரிகளில் பங்கேற்றார்.
- இரண்டு ஆண்டுகளின் பின்னர் தனியாகவே கச்சேரிகள் செய்யத்
- தொடங்கவிட்டார்.
- முதல் கச்சேரி பெங்களூரில் தாய் சுகயீனம் காரணமாக போகமுடியாமல் போன காரணத்தால் இவரால் செய்யப்பட்டது.
- எம்.எல்.எவி என்ற நாமகரணமும் அந்த முதல் கச்சேரியின் போதே அளிக்கப்பட்டது.
- 27.07.1976 அன்று மைசூர் பல்கலைக்கழகம் இசைத்துறையில் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியது.
- ஒவ்வொரு வருடமும் புரந்தரதாசர் விழாவில் பங்கேற்று சிறப்பாகப் பாடினார்.
- 1969 இல் செம்பை வைத்தியநாத பாகவதரால் ஆராதனைக் கமிட்டியின் சார்பில் எம். எல். விக்கு " சங்கீதரத்னாகரம் " என்ற சிறப்புப்பட்டம் அளித்துக் கௌரவிக்கப்பட்டது.
- 1954 இல் சென்னை ஆர்ட்ஸ் அக்கடமியில் ராஜமாணிக்கம்பிள்ளை " சங்கீத வாணி " என்ற விருதினை வழங்கினார்.
- " திருப்பாவைமணி " என்னும் பட்டம் முன்னால் முதலமைச்சர் எம். பக்தவத்சலம் அவர்களால் அளிக்கப்பட்டது.
- இசைத்தட்டுக்களில் திருப்பாவை பாடல்கள் பாடியமைக்காக 1967 இல் " பத்மபூஷண " விருது பாரத அரசிடமிருந்து கிடைக்கப்பெற்றது.
- மலாயாவாழ் இந்தியர் நிவாரண நிதிக்காகப் சென்னையிலும் இலங்கை நாவலபிட்டிய கதிரேஷன் கல்லூரி கட்டிட நிதிக்காகப் பல இலவச கச்சேரிகள் செய்ததும் குறிப்பிடத்தக்கன.


❖ 1964இல் சீன ஆக்கிரமிப்பின் போது நாட்டுப்பற்றினால் தாம் அணிந்திருந்த நகைகள் முழுவதையும் நாட்டு நலனுக்காக வழங்கினார்.
❖ இவர் உருவாக்கிய சிஷ்யர்களில் சாருமதி இராமச்சந்திரன், நிர்மலா ஸ்ரீநிவாசன்,சுதாரகுநாதன் ஆகியோர் முக்கியமானவர்கள்.

**பயிற்சி 10.4.2**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. எம்.எல்.வசந்தகுமாரி எத்தனையாம் ஆண்டு பிறந்தார்?
 ………………………………………………………………………………………………
2. இவரது பெற்றோர் பெயரை குறிப்பிடுக.
 ………………………………………………………………………………………………
3. இவரது முதல் கச்சேரி எங்கு இடம்பெற்றது?
 ………………………………………………………………………………………………
4. இலங்கையில் எதற்காக இவர் இசைக்கச்சேரி நடத்தினார்?
 ………………………………………………………………………………………………
5. ஏம்.எல்.வி க்கு டாக்டர் பட்டம் எப்போது எந்நிறுவனம் வழங்கியது?
 ………………………………………………………………………………………………
6. இவருக்கு கிடைத்த வேறு பட்டங்கள் யாவை?
 ………………………………………………………………………………………………
7. இவரது சிஷ்யர்கள் இருவரை குறிப்பிடுக.
 ………………………………………………………………………………………………

## 10.4.3 20ம் நூற்றாண்டு இசைக் கலைஞர்கள் - வீணை பாலச்சந்தர்



❖ வீணை பாலச்சந்தர் தனது இளவயதில் தபேலா கெஞ்சிரா போன்ற இசைக்கருவிகளை பக்கவாத்தியமாக வாசித்து பெருமை பெற்றவர்.
❖ ஹார்மோனியம் வாசிப்பதிலும் திறமை மிக்கவர்.
❖ கர்நாடக இசையின் கமகங்களை வெளியிட வீணை வாத்தியம் சிறந்தது என வீணையை நாடினார்.
❖ இவரின் முயற்சியின் முடிவு காயகிபாணி பாலச்சந்தர் பாணி என்ற வீணை வாசிப்பின் ஒரு புதிய பாதை இசை உலகிற்கு கிடைத்தது.
❖ தனது இசையை இறைவனுக்கு அர்ப்பணித்தார்.
❖ 1934 முதன்முறையாக சென்னையில் வீணை கச்சேரி நடத்தினார்.
❖ ரிஷ்யசிருங்கர் என்ற படத்தில் பாலரிஷியாக நடித்துள்ளார்.
❖ இது நிஜமா என்ற படத்தின் கதை வசனம் பாடல்களை எழுதி இசை அமைத்து தானே இரட்டை வேடத்தில் நடித்திருக்கிறார்.
❖ வெளிநாடுகளில் இசை கச்சேரிகளை நடத்தி உள்ளார்.

- இவருக்கு இந்தியாவில் மட்டுமின்றி அயல்நாடுகளிலும் பட்டங்களும் பாராட்டுகளும் கிடைத்தது.
- இவர் பெற்ற பட்டங்கள் கலாசிகாமணி,வைணிகரத்னம்,யாழிசை அரசு,வீணா, வரப்பிரசாதி,வைணிககலாநிதி,வைணிகஸாம்ராட், வீணைச் செம்மல், சங்கீத சக்கரவர்த்தி
- அகில உலக நுண்கலை கலாசார அகடெமி அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியது
- இவர் பல இசைத் தட்டுக்களை வெளியிட்டார்.
- 72 மேளகர்த்தா இராகங்கள் அனைத்தையும் வரிசைக்கிரமமாக 12 இசைத் தட்டுகளில் வாசித்து அரிய சாதனை செய்துள்ளார்.

**பயிற்சி 10.4.3**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக**

1. வீணை பாலச்சந்தர் எத்தனை இசைக்கருவிகளை வாசிப்பதில் தேர்ச்சி பெற்றவர்?

   ……………………………………………………………………………………………

2. இவர் இரட்டை வேடத்தில் நடித்த திரைப்படம் எது?

   ……………………………………………………………………………………………

3. இவர் முதன்முதலில் கச்சேரி செய்த ஆண்டு எது?

   ……………………………………………………………………………………………

4. இவருக்கு கிடைத்த பட்டங்கள் 5 தருக.

   ……………………………………………………………………………………………

5. வீணை வாசிப்பின் பாணிகளை குறிப்பிடுக.

   ……………………………………………………………………………………………

## 10.4.4 20ம் நூற்றாண்டு இசைக் கலைஞர்கள் - திருவாவடுதுறை இராஜரத்தினம்பிள்ளை



- நாதஸ்வர வாத்தியத்தியம் வாசிப்பதில் விற்பனர்.
- இவர் 1898ஆம் ஆண்டில் திருமருகலில் பிறந்தார்.
- இவரது தந்தை குப்புசாமி பிள்ளை.
- ஐந்து வயதில் பாடசாலைக்கு செல்லும் பொழுதே வாய்ப்பாட்டு இசையையும் கற்றவர்.
- 2,3 வருடங்களின் பின்னர் திருக்கோடிக்காவல் கிருஷ்ணரிடம் வாய்ப்பாட்டு இசையின் நுணுக்கங்கள் அனைத்தையும் கற்று சிறந்த வித்துவான் ஆனார்.
- இவரது பாணி ஏனைய வித்துவான் உங்களைவிட மாறுபட்டிருந்தது.
- இவர் நாதஸ்வரம் வாசிக்கும் போது சுருதிக்கு தம்புராவை பயன்படுத்தினார்.
- இவர் தோடி ராகத்தைக் எப்போதும் வாசிப்பார்.
- அபூர்வராகங்களை கூட விடிய விடிய வாசிக்கும் திறமை பெற்றவர்.
- கவி காளமேகம் என்ற படத்தில் நடித்தார்.

- ❖ திருவாங்கூர், மைசூர் சமஸ்தான மன்னர்கள் ராஜரத்தினம் பிள்ளை அவர்களை சமஸ்தான வித்துவானாக ஆக்கிக் கொண்டனர.
- ❖ அகில உலக இசைஜோதி நாதஸ்வர சக்கரவர்த்தி போன்ற பட்டங்களை பெற்றார்.
- ❖ இந்தியாவில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் சென்று தம் புகழைப் பரப்பினார்.
- ❖ 1954 ஆம் ஆண்டில் ஜனாதிபதி விருது பெற்றார்.
- ❖ 1956-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ஆம் திகதி உயிர் நீத்தார்.

**பயிற்சி 10.4.4**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக**

1. இராஜரத்தினம் பிள்ளை எத்தனையாம் ஆண்டு பிறந்தார?

   ......................................................................................................

2. இவரது தந்தை பெயர் என்ன?

   ......................................................................................................

3. இவர் எந்த இராகத்தை வாசிப்பதில் தேர்ச்சி பெற்றவர்?

   ......................................................................................................

4. இவர் ஜனாதிபதி விருது பெற்ற ஆண்டு எது?

   ......................................................................................................

5. இவரது பட்டங்களை குறிப்பிடுக.

   ......................................................................................................

## 11.இலங்கையின் இசை வளர்ச்சி

- ❖ இராவணன் காலத்திலிருந்தே இலங்கையில் கர்நாடக இசைமரபு இருந்ததென்பதற்கு இலக்கிய ஆதாரங்கள் உள்ளன.
- ❖ சாமகானம் பாடிய இராவணன் இறைவனை மகிழ்வித்தமை இதற்கொரு எடுத்துக்காட்டாகும்.
- ❖ சீதையைத் தேடி இலங்கை வந்த ஹனுமான், இராவணனது மாளிகையெங்கும் இசை ஒலித்துக் கொண்டிருந்ததை கேட்டதாக இராமாயணத்தில் குறிப்பிடப்படுகின்றது.
- ❖ அக்காலத்தில் ஆண்களை விடப் பெண்களே இசைக் கலையில்மேம்பட்டவர்களாக இருந்தார்களென இராமாயணம் மூலம் அறியலாம்.
- ❖ மணிமேகலை என்ற காவியத்தில் ஆபுத்திரன் என்பவன் வியாபாரம் செய்ய இலங்கையின் வடபாகத்தில் இருக்கும் மணிபல்லவம் என்றழைக்கப்படும் நயினாதீவை அடைந்தான்
- ❖ அப்பகுதியை அரசாண்ட அரசனால் ஆபுத்திரனுக்கு அளிக்கப்பட்ட விருந்தின்போது நாக கன்னிகையின் நடனம் ஆடப்பட்டதாகவும் கல்லினால் செய்யப்பட்ட ஒரு துளை வாத்தியம் வாசிக்கப்பட்டததாகவும் கூறப்படுகின்றது.
- ❖ இலங்கையின் ஆதிக்குடிகளான இயக்கர், நாகர் காலத்தில் மகுடி பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.
- ❖ இவர்கள் கையாண்ட வாத்தியக்கருவி நாகசின்னம் என அழைக்கப்பட்டதாக மகாவம்சம் கூறுகின்றது.

- இந்தியாவில் தேவாரகாலம் என அழைக்கப்பட்ட காலப்பகுதியில் (கி.பி 7ஆம், 8 ஆம் நூற்றாண்டு) இலங்கையிலும் இசைபாடும் அடியார்கள் இருந்தனர்.
- சம்பந்தர், சுந்தரர் பாடிய கோணமலைப்பதிகம், கேதீச்சர பதிகங்கள் இலங்கைத் திருத்தலங்கள் மீது பாடப்பட்டுள்ளமையை ஆதாரமாக உள்ளன.
- இலங்கை சோழராட்சியின் கீழ் இருந்த போது இராஜராஜ சோழனால் நம்பியாண்டார் நம்பியைக் கொண்டு வகுக்கப்பட்ட திருமுறைகளை ஆலயங்களில் ஓதும் பாரம்பரியம் ஆரம்பமாயிற்று.
- இலங்கையிலும் சோழரால் கட்டப்பட்ட கோயில்களில் அம்மரபு இருந்திருக்கலாம் எனக் கூறுவதற்கிடமுண்டு.
- கி.பி 13ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாண இராச்சியம் உருவானபோது ஆரியச் சக்கரவர்த்திகள் ஆட்சியில் புராணபடனங்கள் இசைக்கப்பட்டன என்பதற்கு ஆதாரங்களுள்ளன.
- போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் தம் காலப்பகுதியில் தத்தம் மதத்தைப் பரப்ப நாடகப் பாடல்களைத் தெரிவு செய்தனர்.
- போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் வருகையின் பின்னர் நாட்டார் இசை மரபிலும் புது உத்திகள் தோன்றின
- பரிகாசப்பாடல், பைலாப்பாடல் வகைகள் பிரபல்யம் அடைந்தன.
- இக்காலத்தில்இலங்கைத் தமிழ் மக்களிடையே காத்தான் கூத்து, வடமோடிக்கூத்து, தென்மோடிக்கூத்து,காமன்கூத்து, வடபாங்கு நாடகம், தென்பாங்கு நாடகம், அண்ணாவி மரபு நாடகம் எனப் பலவகையான கூத்து வகைகள் வழக்கத்தில் இருந்தன.
- இந்தியா, இலங்கை கலைப்பாரம்பரியத் தொடர்புகள் காலம் காலமாக நடந்தேறியுள்ளன.
- அவ்வகையில் 18 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியாவில் அருணாச்சல கவிராயர் இராம நாடக கீர்த்தனங்களை இயற்றினார்.
- இலங்கையிலும் தமிழ்க் கீர்த்தனங்கள், பதங்கள் இயற்றப்பட்டன.
- இந்நூற்றாண்டில் வாழ்ந்த லோறன்ஸ் புலவர் மக்கள் பாடுவதற்காக கிறிஸ்தவ கீதங்களையும் மக்கள் நடிப்பதற்காக கிறிஸ்தவ நாடகங்களையும் எழுதினார்.
- 19ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் இருந்து வாணிபத்தால் வளம் சேர்க்க வந்த வைசியர் (செட்டி வேளாளர்) குலத்தோரினால் யாழ்ப்பாணத்தில் பெருங் கோயில்கள் கட்டப்பட்டன.
- இக்கோயில்களில் மங்கள வாத்தியங்களை இசைக்க இசை வேளாளர் இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்டு வண்ணார்ப்பண்ணை சிவன் கோயில் சுற்றுப் புறங்களிலே குடியேற்றப்பட்டனர்.
- 19ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் இருந்து வாணிபத்தால் வளம் சேர்க்க வந்த வைசியர் (செட்டி வேளாளர்) குலத்தோரினால் யாழ்ப்பாணத்தில் பெருங் கோயில்கள் கட்டப்பட்டன.
- இவர்கள் தவில், நாதஸ்வரம் வாசிப்பதில் விற்பன்னராக விளங்கினர்.
- இவர்களே இன்றைய உயர் பாரம்பரிய இசையின் முன்னோடிகளாவர.
- 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிழக்கிலங்கையில் தோன்றிய விபுலானந்த அடிகள் இந்தியாவில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தலைவராக இருந்தபோது அங்கு இசைப் பேராசிரியரான க. பொன்னையாப்பிள்ளை அவர்களோடு கலந்து இசைத்தமிழ் ஆராய்ந்ததன் பலனாக யாழ்நூல் என்ற பெருநூலை எழுதி வெளியிட்டார்.
- தமிழில் சிலப்பதிகாரம் வகித்த இடத்தை இசையில் இந்நூல் வகித்தது.

- யாழ்நூலானது பாயிரவியல், யாழுறுப்பியல், இசை நரம்பியல், பாலைத்திரிபியல், பண்ணியல், தேவாரவியல், ஒலியியல் என்னும் 7 இயல்களின் கீழ் கோவைப்படுத்தப்பட்டுள்ளது.
- யாழ்நூலைத் தொடர்ந்து ஈழத்தில் பல இசை, இலக்கண நூல்களும் பிறவும் அறிஞர்களால் எழுதப்பட்டன.
- கர்நாடக இசையோடு பண்ணிசையும் இலங்கையில் வளர்ச்சி கண்டது. பண்ணிசை வளர்ச்சிக்கு பணியாற்றியவர்களுள் குப்பிளான் செல்லதுரை, திருமுறை இசைவாணர் கொக்குவில் மு. குமாரசிங்கம், பண்ணிசை வள்ளல் தாவடியூர் செ. இராசையா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.
- சங்கீத கதாபிரசங்கத்தை இலங்கையில் உச்சநிலைக்குக் கொண்டு வந்ததோடு கடல் கடந்த புகழையும் அடைந்தவர் நல்லைக் குருமாரின் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரியார் ஆவார்.
- இவர் தவிர அமரர் சிவஅன்பு, பண்டிதர் வடிவேலு போன்றோரும் கதாப்பிரசங்கத்தின் வளர்ச்சியில் பங்கேற்றவர்களாவர்.
- 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த கலாசார நிலையத்தில் பிரபல தென்னிந்தியப் பாடகர்கள் வருகை தந்து பாடிச் செல்வது வழக்கமாயிருந்தது.
- எனினும் ஆங்கிலமோகம், மேலைத்தேய பண்பாட்டு மோகம் ஆகியவை முக்கியத்துவம் பெற்றிருந்த அக்காலகட்டத்தில் கர்நாடக இசையானது மத்திய வகுப்பினரிடையேயோ அல்லது பாடசாலைக் கலைத்திட்டத்திலோ குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறாது சாதாரண மக்களாலேதான் ஆதரிக்கப்பட்டு வந்தது.
- எனினும் 1931ஆம் ஆண்டு வட இலங்கை சங்கீத சபை தோற்றுவிக்கப்பட்டு இசை வளர்ச்சியில் ஒரு திருப்பம் ஏற்பட வழிவகுத்தது.
- இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னரே பாடசாலை கலைத்திட்டத்தில் இசை ஒரு பாடமாக சேர்க்கப்பட்டது.
- குறிப்பாக 1972 ஆம் ஆண்டில் அழகியற்கல்வியில் சங்கீதம் ஒரு கட்டாய பாடமாக சேர்க்கப்பட்டது.
- தற்போது தரம் 6 முதல் 13 வரையிலான கலைத்திட்டத்தில்.
  கர்நாடக சங்கீதத்தையும் ஒரு பாடமாகக் கற்கக்கூடிய வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.
- 2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்ற கர்நாடக
  சங்கீத பாடத்தில் தரம் 12, 13 இற்கான கலைதிட்டத்தில் வாத்தியங்களை இசைப்பதற்கான புதியதொரு தேர்ச்சியும் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.
- கர்நாடக இசை ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் அழகியற் பாட உதவிக் கல்விப்பணிப்பாளர்களுக்கான இசைப்பாடச் செயலமர்வுகளை நடத்துவதிலும், மாணவர்களுக்கு ஏற்றவகையில் புதிய பாடத்திட்டங்களை அழகியற்துறையில் அறிமுகப்படுத்துவதிலும் மேலதிக வாசிப்பு நூல், ஆசிரியர் வழிகாட்டி நூல் போன்றவற்றைத் தயாரித்து வெளியிடுவதிலும் தேசிய கல்வி நிறுவகத்தின் அழகியற் பிரிவு பெரும் பங்காற்றி வருகின்றது.
- தற்போது இலங்கையில் இசைக்கலையானது பாடசாலைகளில் மட்டுமன்றி பல்கலைக் கழகத்திலும் சிறப்புப் பட்டப்படிப்பிற்குரிய உயர் அந்தஸ்தினைப் பெற்றுள்ளது.
- யாழ்பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைப் பிரிவில் சங்கீத டிப்ளோமா, நுண்கலைமானி, ஆய்வியல் நிறைஞர் இசை (M.Phil Music) போன்ற கற்கை

நெறிப்பட்டங்களையும் மட்டக்களப்பு கிழக்குப்பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம், இசை நுண்கலைமானிப்பட்ட நெறியையும் அவ்வாறே கொழும்பு கட்புல மற்றும் அரங்கேற்றுக்கலைகள் பல்கலைக்கழகம் இசை நுண்கலைமானி கற்கைநெறிப்பட்டத்தையும் வழங்குவதும் சிறப்பானதாகும்.

❖ மேலும் இசையானது சிறப்பு நெறியாகவும், பொதுப் பாடமாகவும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் கற்பிக்கப்பட்டு ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கப்படுகின்றது.

❖ வட இலங்கை சங்கீத சபையோடு யாழ் ரசிக ரஞ்சன சபா, அகில இலங்கை இசை ஆசிரியர் சங்கம், இசைப்பேரவை, கொழும்புத் தமிழ்ச் சங்கம், இசைக்கலைஞர் சம்மேளனம், சங்கீத வித்வ சபை, அண்ணாமலை தமிழிசை மன்றம், அளவெட்டி இசைக் கலை மன்றம், முத்தமிழ் மன்றம், இலங்கை சஙகீத சபை, யாழ் இளங்கலைஞர் மன்றம், கம்பன் கழகம், திருகோணமலை தட்சணகான சபா, மட்டக்களப்பு சங்கீத சபை, கண்டி நுண்கலை மன்றம், கொழும்பு சைவமங்கையர் கழக இசைப்பிரிவு, வடமராட்சி அரங்கக் கலாசாலை,மலையகத்தில் றம்பொடை தொண்டமான் நுண்கலைக்கல்லூரி, பண்டாரவளை இந்திய நுண்கலைக்கல்லூரி போன்றவையும் இலங்கையின் இசை வளர்ச்சியில் பங்குவகிக்கின்றன.

❖ இவ்வாறான சபாக்களும், மன்றங்களும், இசை வகுப்புக்கள், இசைப் பரீட்சைகள், இசைப்போட்டிகள், இசை விழாக்கள் முதலியவற்றை நடத்தி இசை வளர்ச்சிக்கு உதவி புரிகின்றன.

❖ 20 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் மெல்லிசையும் வளர்ச்சியுற்றது.

❖ ஈழத்துப் பாடல்கள் என்ற நிகழ்ச்சியை வானொலியில் ஒலிக்கச்செய்து ஈழத்து மெல்லிசை வளர்க்கப்பட்டதெனலாம்.

❖ துள்ளல் இசையோடு ஈழத்து மெல்லிசைப் பாடல்கள் மக்கள் எல்லோராலும் விரும்பப்பட்டது.

❖ ஈழத்து மெல்லிசைப் பாடல்களில் அடங்கிய பல ஒலிநாடாக்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

❖ பெருங்கோயில்களையும் தனவந்தர்களையும் சுற்றி உயர் பாரம்பரிய இசை உருவாக,சிறு கோயில்களையும், கிராமப்புறங்களையும் மையமாக வைத்து இன்னோர் இசைமரபு இங்கு வளர்ந்து வந்துள்ளது.

❖ இம்மரபு இன்னும் யாழ்ப்பாணத்தின் பல கிராமப்புறங்களில் காணப்படுகின்றது.

❖ சிறு தெய்வக் கோயில்களில் நடைபெறும் சடங்குகளில் இடம்பெறும் உருவேற்றம், காளியம், தாலாட்டு என்பன கிராமிய இசை மரபாகும். இம்மரபு பிரதேசத்திற்குப் பிரதேசம் மாறுபடும்.

❖ காவடி, மழைக்காவியம், ஒப்பாரி, அரிவு வெட்டும் பாடல், நெல் குற்றும் பாடல், கப்பற்பாடல், உடுக்கு, பறைமேளம் என்பன சிறு பாரம்பரியத்தை பிரதிபலிப்பவை. நாதஸ்வரம், திருப்பள்ளியெழுச்சி, தேவாரம், திருவூஞ்சல் என்பன பெரும் பாரம்பரியத்தை பிரதிபலிப்பவை. கும்மி, தாளக்காவடி முதலியன சிறு பாரம்பரியம், பெரும் பாரம்பரியத்தடன் இணைந்துள்ளமையைக் காட்டுவன.

❖ இலங்கைத் தமிழ் மக்களிடையே காணப்படும் இசையின் போக்குகளை வண்ணத்திற்கொன்று, வகைக்கொன்றாக அறிமுகம் செய்யும் விதத்தில் இசைத்தட்டு ஒன்றைத் தொகுத்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் வெளியிட்டது.

- ❖ இம்முயற்சியை ஆரம்பித்தவர் அக்காலத்தில் வானொலி இசைக்கட்டுப்பாட்டாளராகக் கடமையாற்றிய திருமதி. நவராஜகுலம் முத்துக்குமாரசாமி அவர்களாவார். இந்த இசைத்தட்டுக்கு இசை வழங்கியவர்
- ❖ இவ்விசைத்தட்டிலே வேண்டுதலும் வழிபாடும், தொழிற்பாடல்கள்,வாழ்க்கைவட்டம், பாரம்பரிய நாடக அரங்கம், வாத்தியங்கள், நடனப்பாடல்கள் என்னும் தலைப்புக்களின் கீழ் 29 பாடல்கள் வெளியிடப்பட்டுள்ளன திரு. எம் கண்ணன் ஆவார்.
- ❖ வெகுசனத் தொடர்பு சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவையும் இசை நிகழ்ச்சிகளையும், கட்டுரைகளையும், விமர்சனங்களையும் ஒலி/ஒளி பரப்பியும், பிரசுரித்தும் இசை வளர்ச்சியில் முக்கிய இடத்தை வகிக்கின்றன.
- ❖ உயர் பாரம்பரிய இசையிலே இலங்கைத் தமிழ் இசையும் தமக்கென சில தனித்துவங்களை உருவாக்கியது. இவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது தவில் வாத்தியமாகும்.
- ❖ தவில் இலங்கைத் தமிழருக்குரிய சிறந்த வாத்தியமாகத் தென்னிந்தியாவிலும் கணிக்கப்படுகிறது.
- ❖ இவ்விடயத்தில் இலங்கையின் தவில் தட்சணாமூர்த்தியின் பங்களிப்பு குறிப்பிட உகந்ததாகும்.
- ❖ பிற்காலத்தில் சமூகத்தின் பல தரத்தினரும் தென்னிந்தியா சென்று சங்கீத பூஷணம்,B. Music, M.Music, M. Phil, PhD Music போன்ற கற்கை நெறிகளைக்கற்றுப் பட்டமும் பெற்றுள்ளனர்.
- ❖ மேலும் இசைக் கச்சேரி செய்யும் முறையும் உருவாகியது.
- ❖ இவ்வழியில் கர்நாடக இசையே இலங்கைத் தமிழரின் உயர் பாரம்பரிய இசை எனக் கருதப்படுகின்றது.
- ❖ இந்தியா திருச்சி வானொலியில் கச்சேரி செய்த முதல் இலங்கையர் என்ற பெருமையை பெற்றவர் அமரர் என். சண்முகரத்தினம் அவர்களாவார்.
- ❖ இவரைத் தவிர சிறந்த சாஹித்திய கர்த்தாவான இணுவில் என். வீரமணி ஐயர் அவர்கள் இசைத் தமிழிற்கு புகழ்பரப்பிய ஒருவராகத் திகழ்கின்றார்.
- ❖ இலங்கையிலுள்ள புகழ்பெற்ற தலங்களில் எழுந்தருளியுள்ள தெய்வங்கள் பேரில் குறவஞ்சி, உலா, பள்ளு, ஊஞ்சல், தோத்திரப் பாமாலை போன்ற வற்றையும் இதிகாசங்களை மையமாகக் கொண்ட நாட்டிய நாடகங்களையும் இயற்றியுள்ளார்.
- ❖ இவர் கர்நாடக சங்கீத சம்பிரதாயத்தில் வழங்கும் 72 மேளகர்த்தாக்களிலும் உருப்படிகளை யாத்தவர் ஆவார். மேலும் 108 தாளங்களுக்கும் பொருத்தமான சங்கீத சாஹித்தியங்களையும் இயற்றயுள்ளார்.
- ❖ இவர் இயற்றிய “ கற்பக வல்லிநின் பொற்பதங்கள் ” என்று தொடங்கும் பாடல் திரு டி. எம் சௌந்தராஜனால் இசைத்தட்டில் பாடப்பட்டு பெருமை பெற்றது. இதே போன்று சீர்காழி கோவிந்தராஜன் பாடிய “ உன்னை நான் காண்பதெங்கே” என்னும் இவரது பாடலும் இசைத் தட்டில் வெளியாகியுள்ளது.
- ❖ இவரைத் தவிர ரி. வி பிச்சையப்பா, என் ராஜு, என். கே பத்மநாதன், முருகப்பா,புத்துவாட்டி சோமு, என். சண்முகரத்தினம். கே. கே அச்சுதன், பி. எஸ் ஆறுமுகம்பிள்ளை,ரத்னம், உருத்திராபதி, இராஜராஜேஸ்வரி, காமாட்சி சுந்தரம் போன்றோரின் பங்களிப்பு அளப்பரியது.
- ❖ மேலும் இசைக்கலையை அனைவரும் கற்று அரங்கேற்றம் செய்வது உயர் நாகரிகம் என்று கருதுமளவிற்கு இசைக்கலை மக்களிடையே பிரபல்யமடைந்துள்ளது.

❖ இசைத்துறையில்வேலைவாய்ப்பு பெற்றவர் எம்மிடையே பலர் உள்ளனர். மேலும் நம் நாட்டுக் கலைஞர்கள் பலர் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பணியாற்றியபடியே இசைக்கச்சேரிகள் செய்யுமளவிற்கு வளர்ச்சி பெற்றுள்ளமை பெருமைக்குரிய விடயமாகும்.

**பயிற்சி 11.1**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சாமகானம் பாடியவர் யார்?

   ………………………………………………………………………………………………

2. இராவணன் காலத்தில் இலங்கையில் இசை இருந்தது என்பதற்கான ஆதாரங்கள் எவை?

   ………………………………………………………………………………………………

3. நாகக்கண்ணிகையின் நடனத்திற்கு பயன்படுத்தப்பட்ட கல்லினால் செய்யப்பட்ட துளைக்கருவியைப் பற்றி குறிப்பிட்ட காவியம்?

   ………………………………………………………………………………………………

4. இலங்கையின் ஆதிக்குடிகள் யாவர்?

   ………………………………………………………………………………………………

5. இலங்கையின் ஆதிக்குடிகளால் வாசிக்கப்பட்ட வாத்தியம்?

   ………………………………………………………………………………………………

6. நாகச்சின்னம் யாருடைய காலத்தில் வாசிக்கப்பட்டது?

   ………………………………………………………………………………………………

7. இலங்கையின் தேவாரக் காலம் எது?

   ………………………………………………………………………………………………

8. இலங்கையில் பாடல் பெற்ற திருத்தலங்கள் எவை?

   ………………………………………………………………………………………………

9. திருப்புகழ் பாடியவர் யார்?

   ………………………………………………………………………………………………

10. தேவாரத்திருமுறைகளை தொகுத்தவர் யார்?

    ………………………………………………………………………………………………

11. தேவாரத்திருமுறைகளை தொகுப்பித்தவர் யார்?

    ………………………………………………………………………………………………

12. சிங்கள சந்தேச தூதுப் பிரபந்தம் எந்த காலத்திற்குரியவை?

    ………………………………………………………………………………………………

13. யாருடைய ஆட்சிக்காலத்தில் புராணப்படலங்கள் இயற்றப்பட்டது?

    ………………………………………………………………………………………………

14. போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் காலத்தில் தோன்றிய பிரபந்தங்கள் எவை?

    ………………………………………………………………………………………………

15. மருதப்பக் குறவஞ்சி திருச்செல்வர் அம்மானை யாருடைய காலத்திற்குறியவை?

……………………………………………………………………………………………

16. பரிகாசப்பாடல்கள் பைலாப்பாடல்களை அறிமுகப்படுத்தியவர்கள் யார்?

……………………………………………………………………………………………

17. இலங்கையில் தமிழ் மக்களிடையே பிரசித்திப்பெற்ற கூத்து வகைகள் எவை?

……………………………………………………………………………………………

18. கூத்துக்களை நவீன முறையில் மேடையேற்றியவர் யார்?

……………………………………………………………………………………………

19. இராம நாடக கீர்த்தனைகளை இயற்றியவர் யார்?

……………………………………………………………………………………………

20. புராணப்படணம் மூலம் தமிழிசை வளர்ச்சிக்கு வித்திட்டவர் யார்?

……………………………………………………………………………………………

21. பஞ்சவண்ண தூது யாரால் பாடப்பட்டது?

……………………………………………………………………………………………

22. யாழ் நூலின் ஆசிரியர் யார்?

……………………………………………………………………………………………

23. யாழ்நூல் எத்தனை இயல்களாக கோவை படுத்தப்பட்டுள்ளது அவை எவை?

……………………………………………………………………………………………

24. இலங்கையில் பண்ணிசை வளர்ச்சிக்கு பணியாற்றியவர்கள் மூவரின் பெயர்களை தருக.

……………………………………………………………………………………………

25. சங்கீத பிரசங்கத்தை இலங்கையின் உச்ச நிலைக்குக் கொண்டு வந்தவர் யார்?

……………………………………………………………………………………………

26. இலங்கையில் வட இலங்கை சங்கீத சபை எத்தனையாம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டுது?

……………………………………………………………………………………………

27. பாடசாலைக் கலைத்திட்டத்தில் இசை ஒரு பாடமாக சேர்க்கப்பட்ட ஆண்டு எது?

……………………………………………………………………………………………

28. சங்கீத பாட கலைத்திட்டத்தில் 2017 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட தேர்ச்சி எது?

……………………………………………………………………………………………

29. இலங்கையில் கர்நாடக இசையில் பட்டப் படிப்பினை வழங்கும் நிறுவனங்களின் பெயர்களை தருக.

……………………………………………………………………………………………

30. இலங்கையில் இசை பயிற்சிகளை வழங்கும் சபை, மன்றங்கள் பெயர்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………………………

## 12.செயன்முறை

| உருப்படியின் வகை | உருப்படி | இராகம் | தாளம் | மேள எண் | இயற்றியவர் | ஆரோகணம் அவரோகணம் |
|---|---|---|---|---|---|---|
| தானவர்ணம் | தஞ்சம் | ஆபோகி | ஆதி | 22 ஜன்யம் | பாபநாசம் சிவன் | ஸரிகமதஸ் ஸ்தமகரிஸ |
| பதவர்ணம் | இன்னம் என்மனம் | சாருகேசி | ஆதி | 26 | லால்குடி ஜெயராமன் | ஸரிகமபதநிஸ் ஸ்நிதபமகரிஸ |
| | ஸ்வாமி நீமனமிரங்கி | ஸ்ரீரஞ்சனி | ஆதி | 22 ஜன்யம் | பாபநாசம் சிவன் | ஸரிகமதநிஸ் ஸ்நிதமகரிஸ |
| நவராகமாலிகை வர்ணம் | வலசி | 1. பல்லவி–கேதாரம் | ஆதி | 29 ஜன்யம் | பட்டணம் சுப்ரமண்ய ஐயர் | ஸமகமபநிஸ் ஸ்நிபமகரிஸ |
| | | 2. அனுபல்லவி–சங்கராபரணம் | | 29 | | ஸரிகமபதநிஸ் ஸ்நிதபமகரிஸ |
| | | 3. முக்தாயிஸ்வரம் 1 -கல்யாணி | | 65 | | ஸரிகமபதநிஸ் ஸ்நிதபமகரிஸ |
| | | 4. முக்தாயிஸ்வரம் 2 -பேகட | | 29 ஜன்யம் | | ஸரிகமபதபஸ் ஸ்நிதபமாகரிஸ |
| | | 5. சரணம் 1 – காம்போதி | | 28 ஜன்யம் | | ஸரிகமபதஸ் ஸ்நிதபமகரிஸ |
| | | 6. சரணம் 2 – யதுகுலகாம்போதி | | 28 ஜன்யம் | | ஸரிமபதஸ் ஸ்நிதபமகரிஸ |
| | | 7. சரணம் 3 – பிலஹரி | | 29 ஜன்யம் | | ஸரிகபதஸ் ஸ்நிதபமகரிஸ |
| | | 8. சரணம் 4 – மோஹனம் | | 28 ஜன்யம் | | ஸரிகபதஸ் ஸ்தபகரிஸ |
| | | 9. சரணம் 5 - ஸ்ரீ | | 22 ஜன்யம் | | ஸரிமபநிஸ் ஸ்நிபதநிபமரிகாரிஸ |
| அடதாள வர்ணம் | நெரநம்மி | கானடா | கண்ட அட | 22 ஜன்யம் | இராமநாதபுரம் ஸ்ரீநிவாச ஐயங்கார் | ஸரிகமதாநிஸ் ஸ்நிஸ்தாபமபகாமரிஸ |
| மத்திமகால கீர்த்தனை | ஞானம் அருள்வாய் | ஹம்சத்வனி | ஆதி | 29 ஜன்யம் | இணுவில் .என்.வீரமணி ஐயர் | ஸரிகபநிஸ் ஸ்நிபகரிஸ |
| | பார்வதி நாயகனே | ஷண்முகப்பிரியா | ஆதி | 65 | பாபநாசம் சிவன் | ஸரிகமபதநிஸ் ஸ்நிதபமகரிஸ |
| | கோபிகா மனோகரம் | மோஹனம் | ஆதி | 28 ஜன்யம் | முத்துஸ்வாமி தீட்சிதர் | ஸரிகபதஸ் ஸ்தபகரிஸ |
| சௌக கால க்ருதி | பாஹிமாம் | ஜனரஞ்சனி | ஆதி | 29 ஜன்யம் | மஹாவைத்திய நாதய்யர் | ஸரிகமபதநிஸ் ஸ்தபமரிஸ |
| தில்லானா | தீம்னனன தில்லில்லானா | பிருந்தாவனி | ஆதி | 22 ஜன்யம் | டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா | ஸரிமபநிஸ் ஸ்நிபமரிஸ |
| தேவாரம் | பொன்னும் மெய்ப்பொருளும் | காம்போதி பண் - தக்கேசி தலம் - திருவாரூர் | ஆதி | 28 ஜன்யம் | திருஞானசம்பந்தர் | ஸரிகமபதஸ் ஸ்நிதபமகரிஸ |
| தேவாரம் | மைம்மரு பூங்குழல் | கம்பீரநாட்டை பண் - நட்டபாடை தலம் - திருப்புகழியும் திருவீழிமிழலையும் | ஆதி | 36 ஜன்யம் | திருஞானசம்பந்தர் | ஸகமபநிஸ் ஸ்நிபமகஸ |
| திருப்புகழ் | ஒருபொழும் | சக்கரவாகம் | சங்கீர்ண ஜம்பை | 16 | அருணகிரிநாதர் | ஸரிகமபதநிஸ் ஸ்நிதபமகரிஸ |
| இராகமாலிகை | ஆரபிமானம் | பல்லலவி–ஆனந்தபைரவி<br>அனுபல்லவி–கல்யாணி,ஹம்சத்வனி<br>சிட்டைஸ்வரம் - ஹம்சத்வனி,கல்யாணி,ஆனந்தபைரவி,ஆரபி<br>சரணம் 1 –சாரங்கா,சாமா,மோஹனம்,லலிதா<br>சிட்டைஸ்வரம் - லலிதா,மோஹனம்,சாமா,சாரங்கா<br>சரணம் 2 – தர்பார்,பைரவி,பூர்விகல்யாணி,கமலாமனோஹரி | | | தரங்கம்பாடி பஞ்சநாத ஐயர் | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | ,பூர்விகல்யாணி,பைரவி,தர்பார் - | | | | |
| தேயிலை கொழுந்துபாடல் | பொழுதுபுல ருகையில் | - | - | - | சித்தி சண்முகநாத ன் | - |
| சங்கிலியன் நாடகப் பாடல் | நின் நிலை | சுபபந்துவராளி | ஆதி | | - | - |
| விவசாயபாடல் | சேற்றுவயல் | - | - | - | அகழங்கன் | - |

**பயிற்சி 12.1**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தஞ்சம் என்றாலே என்ற வர்ணத்தின் ராகம் எது?

   ……………………………………………………………………………………………………

2. மாதமா கரி தஸரிகா என்ற ஸ்வர பகுதியின் சாகித்தியம் ராகம் என்பவற்றை தருக.

   ……………………………………………………………………………………………………

3. இன்னும் என் மனம் எவ்வகை உருப்படி அதனை இயற்றியவர் யார்?

   ……………………………………………………………………………………………………

4. சுவாமி நீ மனமிரங்கி என்ற உருப்படி அமைந்த ராகத்தின் வர்ஜஸ்வரங்கள் எவை?

   ……………………………………………………………………………………………………

5. வலசி என்ற பாடல் எவ்வகை உருப்படி?

   ……………………………………………………………………………………………………

6. வலசி என்ற பாடலில் உத்தராங்க பகுதியில் வரும் ராகங்கள் எவை?

   ……………………………………………………………………………………………………

7. வலசி என்ற உருப்படியில் வரும் கனராகம் எது?
8. கண்டஜாதி அடதாள வர்ணத்தில் ஒரு ஆவர்த்தனத்தில் வரும் ஸ்வரங்களின் எண்ணிக்கை எத்தனை?

   ……………………………………………………………………………………………………

9. நெரநம்மி என்ற பாடலின் இராகத்தின் ஆரோகணம் அவரோகணம் இயற்றியவர் என்பவற்றை குறிப்பிடுக.

   ……………………………………………………………………………………………………

10. ஞானம் அருள்வாய் எவ்வகை உருப்படி அதனை இயற்றியவர் யார்?

    ……………………………………………………………………………………………………

11. ம,த வர்ஜ ஸ்வரங்களையுடைய 29 வது மேளகர்த்தாவின் ஜன்னியம் யாது?

    ……………………………………………………………………………………………………

12. 56 மேளகர்த்தா இராகத்தில் அமைந்த மத்திமகால கீர்த்தனை எது?

    ……………………………………………………………………………………………………

13. ஷண்முகப்ரியா ராகத்தின் ஸ்வரஸ்தானங்களை குறிப்பிடுக.

    ……………………………………………………………………………………………………

14. கோபிகா மனோகரம் என்ற கீர்த்தனையை இயற்றியவர் யார்? இதில் இடம்பெறும் அங்கங்கள் எவை?

……………………………………………………………………………………………………

15. மகா வைத்திய நாதய்யரால் இயற்றப்பட்ட சௌககால கிருதி எது?

……………………………………………………………………………………………………

16. ஜனரஞ்சனி ராகத்தின் வர்ஜவகை எது?

……………………………………………………………………………………………………

17. பிருந்தாவனி இராகத்தில் அமைந்த தில்லானாவை இயற்றியவர் யார்?அதன் ஆரோகண அவரோகணம் யாது?

……………………………………………………………………………………………………

18. ஆரபிமானம் என்ற உருப்படியில் அமைந்துள்ள ராகங்கள் எவை?

……………………………………………………………………………………………………

19. பண் தக்கேசிக்கு ஒப்பான இராகம் எது?

……………………………………………………………………………………………………

20. காம்போதி இராகம் அமைந்த தாய் இராகத்தின் மேள எண் யாது?

……………………………………………………………………………………………………

21. மைம்மரு பூங்குழல் எவ்வகை உருப்படி?

……………………………………………………………………………………………………

22. 16வது மேளத்தின் பெயர்,ஆரோகணம்,அவரோகணம் என்பவற்றை தருக.


……………………………………………………………………………………………………

23. விறன் மறவர் சிறுமி திருவேளைக் காரப் பெருமாளே என்ற அடியினை கொண்ட உருப்படி எது?இதன் ஆசிரியர் யார்?

……………………………………………………………………………………………………



## 12.1 வாத்தியக்கருவிகளை இசைத்தல் - கீபோட்






### சிறுவர் பாடல்

**இராகம் :- சங்கராபரணம்**

**ஸ்வரஸ்தானங்கள்**

**ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், காகலி நிஷாதம்**

| | | | |
|---|---|---|---|
| ஸா , ரி | கா ஸ ா | கா ஸ ா | கா ; |
| Doe . a | deer a | fe male | deer . |
| ரீ , க | ம ம க ரி | மா ; | ; ; |
| Ray . a | drop of golden | sun . | . . |
| கா , ம | பா , க | ப ா கா | பா ; |
| Me . a | name . I | call my | self . |
| மா , ப | த த ப ம | தா ; | ; ; |
| Far . a | long, long way to | run . | . . |
| பா , ஸ | ரி க ம ப | தா ; | ; ; |
| Sew . a | needle pulling | thread . | . . |
| தா , ரி | க ம ப த | நீ ; | ; ; |
| La . a | note to follow | sew . | . . |
| நீ , க | ம ப த நி | ஸ்ா ; | ; நி நி |
| Tea . a | drink with | jam . | . bread |
| தா மா | நீ பா | ஸ்ா ; | ஸ்ா ; |
| that will | bring us | backto . | doe . |
| , ஸ ரி க | ம ப த நி | ஸ்ா பா | ஸ்ா ; |
| Doe Re Me | Fa So La Tea | Do . | . . |


### சஞ்சாரி கீதம்


**இராகம் : மோஹனம்**     **ஆ: ஸரிகபதஸ்**


**தாளம் : ரூபகம்**     **அ: ஸ்தபகரிஸ**


| 0 | | 0 | |
|---|---|---|---|
| க க | பா பா | த ப | ஸ்ா ஸ்ா |
| **வ ர** | **வீ ணா** | **ம்ருது** | **பா ணி** |
| ரி ஸ் | தத பா | த ப | க க ரீ |
| **வ ன** | **ருஹ லோ** | **சனு** | **ரா . ணி** |
| க ப | தஸ் தா | த ப | க க ரீ |
| **ஸுரு** | **சிர பம்** | **ப ர** | **வே . ணி** |
| க க | தப கா | ப க | க ரி ஸா |
| **ஸு ர** | **னுத கல்** | **யா .** | **. . ணி** |
| க க | க க ரி க | ப க | பா பா |
| **நிரு** | **ப ம சு ப** | **கு ண** | **லோ லா** |
| க க | த ப தா | த ப | ஸ்ா ஸ்ா |
| **நி ர** | **த ஜ யா** | **ப்ரத** | **சீ லா** |
| த க் | ரி ரி ஸ்ஸ் | த ஸ் | த த த ப |
| **வ ர** | **தாப் ரிய** | **ரங்க** | **நா . ய கி** |
| க ப | தஸ் த ப | த ப | க க ரி ஸ |
| **வாஞ்** | **சித ப ல** | **தா .** | **. . ய கி** |
| ஸ ரி | கா கா | க ரி | ப க ரீ |
| **ஸ ர** | **ஸீ ஜா** | **ஸன** | **ஜனனி** |
| ஸ ரி | ஸ க ரி ஸ | ஸ ரி | ஸ க ரி ஸ |
| **ஜய** | **ஜ ய ஜ ய** | **ஜய** | **ஜ ய ஜ ய** |























**புல்லாங்குழல் வாத்திய ஸ்வரஸ்தானங்கள்**






மாயாமாளவகௌளை இராக ஆரோகண அவரோகணம் வாசிக்கும் இடங்களும் விரல்களும்

## ஜண்டை வரிசைகள்

இராகம் : மாயாமாளவகௌளை — ஆ: ஸரிகமபதநிஸ்

தாளம் : ஆதி — அ: ஸ்நிதபமகரிஸ

இயற்றியவர்: ஸ்ரீ புரந்தரதாஸர்

$1_4$ 0 0

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1) | ஸஸ | ரிரி | கக | மம | \| | பப | தத | \| | நிநி | ஸ்ஸ் | \|\| |
| | ஸ்ஸ் | நிநி | தத | பப | \| | மம | கக | \| | ரிரி | ஸஸ | \|\| |
| 2) | ஸஸ | ரிரி | கக | மம | \| | ரிரி | கக | \| | மம | பப | \|\| |
| | கக | மம | பப | தத | \| | மம | பப | \| | தத | நிநி | \|\| |
| | பப | தத | நிநி | ஸ்ஸ் | \| | ஸ்ஸ் | நிநி | \| | தத | பப | \|\| |
| | நிநி | தத | பப | மம | \| | தத | பப | \| | மம | கக | \|\| |
| | பப | மம | கக | ரிரி | \| | மம | கக | \| | ரிரி | ஸஸ | \|\| |

## ஸ்வரவரிசைகள்

**இராகம்:** மாயாமாளவகௌளை     **ஆ:** ஸரிகமபதநிஸ் }
**தாளம்:** ஆதி     **அ :** ஸ்நிதபமகரிஸ } 15 வது மேளம்
**இயற்றியவர்:** ஸ்ரீபுரந்தரதாஸர்

$1_4$   0   0   $1_4$   0   0

1. ஸரிகம | பத | நிஸ் || ஸ்நிதப | மக | ரிஸ ||

1. ஸரிகம | ஸரி | கம || ஸரிகம | பத | நிஸ் ||
ஸ்நிதப | ஸ்நி | தப || ஸ்நிதப | மக | ரிஸ ||

3. ஸரிகம | ஸரி | ஸரி || ஸரிகம | பத | நிஸ் ||
ஸ்நிதப | ஸ்நி | ஸ்நி || ஸ்நிதப | மக | ரிஸ ||

4. ஸரிகம | பா | பா || ஸரிகம | பத | நிஸ் ||
ஸ்நிதப | மா | மா || ஸ்நிதப | மக | ரிஸ ||

5. ஸரிகம | பா | ஸரி || ஸரிகம | பத | நிஸ் ||
ஸ்நிதப | மா | ஸ்நி || ஸ்நிதப | மக | ரிஸ ||

6. ஸரிகம | பம | கரி || ஸரிகம | பத | நிஸ் ||
ஸ்நிதப | மப | தநி || ஸ்நிதப | மக | ரிஸ ||

7. ஸரிகம | பம | தப || ஸரிகம | பத | நிஸ் ||
ஸ்நிதப | மப | கம || ஸ்நிதப | மக | ரிஸ ||

8. ஸரிகம | ரிக | மப || ஸரிகம | பத | நிஸ் ||
ஸ்நிதப | நித | பம || ஸ்நிதப | மக | ரிஸ ||

9. ஸரிகம | பா | கம || பா ; | பா | ; ||
கமபத | நித | பம || கமபக | மக | ரிஸ ||

10. ஸ்ாநித | நீ | தப || தாபம | பா | பா ||
கமபத | நித | பம || கமபக | மக | ரிஸ ||

11. ஸரிகரி | கா | கம || பமபா | தப | தா ||
மபதப | தநி | தப || மபதப | மக | ரிஸ ||

12. ஸரிகம | பா | பா || ததபா | மம | பா ||
தநிஸ்ா | ஸ்நி | தப || ஸ்நிதப | மக | ரிஸ ||


கர்     ம்

## மேல்ஸ்தாயி வரிசைகள்

இராகம் : மாயாமாளவகௌளை
தாளம் : ஆதி
இயற்றியவர்: ஸ்ரீ புரந்தரதாஸர்

ஆ: ஸரிகமபதநிஸ்
அ: ஸ்நிதபமகரிஸ
} 15 வது மேளம்

| | $1_4$ | 0 | 0 | $1_4$ | 0 | 0 |
|---|---|---|---|---|---|---|
| 1) | ஸரிகம | பத | நிஸ் | ஸ்ா ; | ஸ்ா | ; |
| | தநிஸ்ரி | ஸ்நி | தப | ஸ்நிதப | மக | ரிஸ |
| 2) | ஸரிகம | பத | நிஸ் | ஸ்ா ; | ஸ்ா | ; |
| | தநிஸ்ரி | ஸ்ஸ் | ரிஸ் | ஸ்ரிஸ்நி | தப | மப |
| | தநிஸ்ரி | ஸ்நி | தப | ஸ்நிதப | மக | ரிஸ |
| 3) | ஸரிகம | பத | நிஸ் | ஸ்ா ; | ஸ்ா | ; |
| | தநிஸ்ரி | க்ரி | ஸ்ரி | ஸ்ரிஸ்நி | தப | மப |
| | தநிஸ்ரி | ஸ்ஸ் | ரிஸ் | ஸ்ரிஸ்நி | தப | மப |
| | தநிஸ்ரி | ஸ்நி | தப | ஸ்நிதப | மக | ரிஸ |
| 4) | ஸரிகம | பத | நிஸ் | ஸ்ா ; | ஸ்ா | ; |
| | தநிஸ்ரி | க்ம | க்ரி | ஸ்ரிஸ்நி | தப | மப |
| | தநிஸ்ரி | க்ரி | ஸ்ரி | ஸ்ரிஸ்நி | தப | மப |
| | தநிஸ்ரி | ஸ்ஸ் | ரிஸ் | ஸ்ரிஸ்நி | தப | மப |
| | தநிஸ்ரி | ஸ்நி | தப | ஸ்நிதப | மக | ரிஸ |






# மிருதங்க வாத்திய " தா தீ தொம் நம் " பயிற்சிகள்

தாளம் : ஏகம்

1. தா தீ தொம், நம் ,

2. தாதா - தீதீ - தொம், தொம், நம், நம்,

3. தாதாதா - தீதீதீ - தொம்,தொம், தொம், நம், நம், நம்,

4. தாதாதாதா - தீதீதீதீ - தொம், தொம், தொம், தொம்,
நம், நம், நம், நம்,

5. தாதாதாதா - தீதீதீதீ - தொம், தொம், தொம், தொம்,
நம், நம், நம், நம்,

தாதாதா - தீதீதீ - தொம், தொம், தொம், நம், நம், நம்,
தாதா - தீ தீ - தொம், தொம், நம், நம்,
தா - தீ - தொம், நம்,

6. தா - தீ - தொம், நம்,
தாதா - தீதீ - தொம், தொம், நம், நம்
தாதாதா - தீதீதீ - தொம், தொம், தொம், நம், நம், நம்,
தாதாதாதா - தீதீதீதீ - தொம், தொம், தொம், தொம்,
நம், நம், நம், நம்,






# தாகிட பயிற்சி

1. தா ; கிட - தீ ; கி, ட, தொம், ; கி, ட, நம் ; கி, ட,

2. தாதா கி, ட - தீதீ கி, ட, தொம், தொம், கி, ட, நம், நம், கி, ட,

3. கி, ட, தா ; - கி, ட, தீ ; கி, ட, தொம், ; கி, ட, நம், ;

4. கி, ட, தா தா கி, ட, தீ தீ கி, ட, தொம், தொம், கி, ட, நம், நம்,



# கிடதக பயிற்சி

1. தா ; கிடதக - தீ ; கிடதக - தொம், ; கிடதக - நம், ; கிடதக

2. தாதா கிடதக - தீ தீ கிடதக - தொம், தொம், கிடதக - நம், நம் கிடதக

3. கிடதக தா ; - கிடதக தீ ; - கிடதக தொம், ; கிடதக நம், ;

4. கிடதக தாதா - கிடதக தீதீ - கிடதக தொம், தொம், கிடதக நம், நம்,

# தபேலா வாத்தியத்தில் வாசிப்பதற்கான அடிப்படை பயிற்சிகள்

தபேலா வாத்தியம் ஹிந்துஸ்தானி சங்கீத தாள வாத்தியமாகும். இதனை நாம் பஜனைகள் மெல்லிசைப்பாடல்கள் போன்றவற்றில் பயன்படுத்தி வாசிப்பதைக் காணலாம். இவ்வாத்தியத்தை வாசிப்பதற்குரிய அடிப்படை பயிற்சிகளைப் பெறல் மிக அவசியமாகும். அவ்வகையில் மூன்று நடைகளில் நாம் ஆரம்பப் பயிற்சிகளை மேற்கொள்ளல் சிறப்பானதாகும். அவையாவன :-

1. சதுஸ்ர நடைப் பயிற்சி
2. திஸ்ர நடைப் பயிற்சி
3. கண்ட நடைப் பயிற்சி

இவற்றை தபேலா ஆசிரியரின் உதவியுடன் முறையாக கற்றுக் கொள்ளல் அவசியமாகும்.

## தபேலா வாத்திய சதுஸ்ர நடைப் பயிற்சி

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| DA | DHIN | DHIN | DHA | DHA | DHIN | DHIN | DHA |
| தா | தின் | தின் | தா | தா | தின் | தின் | தா |
| x | | | | 2 | | | |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| DA | TIN | TIN | TA | TA | DHIN | DHIN | DHA |
| தா | தின் | தின் | தா | தா | தின் | தின் | தா |
| 0 | | | | 3 | | | |






## திஸ்ர நடைப் பயிற்சி

**தாளம் : தாதரா**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| DHA<br>தா<br>X | DHIN<br>தின் | NA<br>னா | DHA<br>தா<br>0 | THU<br>து | NA<br>னா |

## கண்டநடைப் பயிற்சி

**தாளம் : ஜப்தால்**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| DHI<br>தி | NA<br>னா | DHI<br>தி | DHI<br>தி | NA<br>னா | TI<br>தி | NA<br>னா | DHI<br>தி | DHI<br>தி | NA<br>னா |
| X | | 2 | | | 0 | | 3 | | |

**பயிற்சி**

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக**

1. தா ; கிட தீ ; கிட தொம் ; கிட நம் ; கிட என்ற ஜதிக்கோர்வைகளை வாசிக்கப் பொருத்தமான இசைக்கருவி எது?

   ..........................................................................................................

2. Doe.a deer a fe male deer...எவ்வகை உருப்படி?அதன் இராகம் யாது

   ..........................................................................................................

3. சங்கராபரணத்தின் ஸ்வரஸ்தானங்களை குறிப்பிடுக

   ..........................................................................................................

4. மோகன இராகத்தின் ஆரோகண அவரோகணங்களை மாதிரி கீபோட் வரைந்து குறித்துக் காட்டுக.

   ..........................................................................................................

5. தபேலா வாத்தியத்தில் ஆரம்ப பயிற்சிகளை மேற்கொள்ள பொருத்தமான நடைகளைக் குறிப்பிடுக.

   ..........................................................................................................